உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்— { ரா. இராகவையங்கார்,
ஸேது ஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-உ.] சோபகிருது-ஹு தைமீ [பகுதி-ந.

உள்ளுறை.

சேதுபதிகள்.—பத்திராசிரியர். ௬௬
சொற்பொருட் குற்றங்கள்.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. எசு
நுண்பொருட்கோவை.—அ. சண்முகம்பிள்ளை. அஉ
தருக்கசூத்திர முதற்பாடம்.—எஸ். பால்வண்ணமுதலியார். அஎ
உள்ளது.—ஸ்ரீகாசிவாசி-செந்திநாதையர். அகூ
பெரியாழ்வார் காலநிருணயம்.—மு. இராகவையங்கார். கூ௬
விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம். சே. ப. நரசிம்மலு நாயடு. சகூ
திணைமாலை நூற்றைம்பது.—கணிமேதாவியார். கூ
பன்னிருபாட்டியல்.— கஎ

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ-4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

விசேஷ விளம்பரம்.

நான்காந் தமிழ்ச்சங்க ஸ்தாபகராகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களுக்கு, அவர்கள் வித்தியாபிமான சின்னமாகச் சமர்ப்பிக்கப்பட்ட

பாரதச் சுருக்கம்.

இது செந்தமிழ் வசனசிங்கமென்று பிரபலபண்டித சிரோன்மணிகளாற் புகழப்படுபவரும் அபிதானகோச முதலிய பல நூல்கள் செய்தவருமாகிய மகா-ள-ள-ஸ்ரீ ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

இந்நூல் வடமொழியிலே வேதவியாசரால் ஓரிலட்சத்து இருபத்தையாயிரம் சுலோகங்களாற் செய்யப்பட்டதும் எத்தனை முறை தான் படிக்கினும் துறைதெரியாப் பெரும்பரப்பினையுடையதுமாகிய மகாபாரதத்தை ஆண் பெண் இருபாலாரும் எளிதிலுணர்ந்துகொள்ளுமாறு புதிதாகத் தமிழிலே சுருக்கிச் செய்யப்பட்டது.

இதன் விலை ரூ 1—8—0

Apply to:—

Messrs. Higginbotham & Co.,
Mount Road,
Madras.

நம் சங்கத்தின் அங்கத்தினர்க்கு.

விஞ்ஞாபனம்.

1903-௵ டிஸம்பர்-௴ 21௳ கூடிய சங்கக்கூட்டத்து முதற்றீர்மானத்திற் கண்டபடி, வரும் மார்ச்சு-௴ 31-க்குள் நம்மங்கத்தினர் ஒவ்வொருவரும் அனுப்பவேண்டுவதாகக் குறித்த ரூ 6-உம் அக்காலத்துள் தயைசெய்து செலுத்திவர வேண்டுகின்றோம். அன்றி, மாசிச்செந்தமிழ்ப்பகுதியை அத்தொகைக்கு வி. பி. தபாலில் அனுப்புமாறு எழுதினும் அவ்வாறே செய்யலாகுமென்பதைத் தெரிவிக்கின்றோம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்,
20—2—04.

இங்ஙனம்,
எம். வி. சுப்பிரமணிய ஐயர்,
மானேஜர்.

உ

திருச்சிற்றம்பலம்.

மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1903-ஆண்டு டிஸம்பர்மீ 23-உ கூடிய சபையாரால் முடிவு செய்யப்பெற்ற சங்கவிதிகள்.

[இவ்விதிகள் 1904ஆண்டு ஜனவரிமீ முதற்றேதி முதல் உறுதியாகக் கையாடப்பெறுவன.]

இச்சங்கத்திற்குரிய எல்லாப்பிரிவுகளையும் மேற்பார்த்தற்கு ஏற்பட்டுள்ள விதிகள் அடியில் வருமாறு. இச்சங்கத்தின் எல்லா உத்தியோகஸ்தரும் வேலைக்காரரும் அடியிற்குறித்துள்ள விதிகளை அநுசரித்து அவ்வழிதவறாது நடந்துகொள்ளக்கடமைப்பட்டவர்களாவர்.

I ‘மானேஜ்மென்டு ஆபீஸ்’

இச்சங்கத்தின் எல்லாப் பிரிவுகளையும் மேற்பார்த்து நடத்தி வர இவ் ஆபீஸுக்கு அதிகாரமுண்டு. எல்லா உத்தியோகஸ்தரும், வேலைக்காரரும் முறையே நடந்துகொள்ளவேண்டிய விஷயம்பற்றி, அவ்வக்காலங்களில், இவ் ‘ஆபீஸு’ மூலம் உத்தரவுகளோ அல்லது விதிகளோ பிறப்பிக்கப்படும். அம்முறைவழுவி நடப்பவர்களைக் குறித்து, தவறிநடந்துகொள்ளும் விஷயத்தின் தன்மைக்குத்தக்கவாறு, அக்கிராசனாதிபதியவர்கள் மிகக்கண்டிப்பாய்க் கவனிப்பார்கள்.

இவ் ‘வாபீஸு’க்குரிய உத்தியோகஸ்தர் இருவர்; ஒருவர் ‘மானேஜர்’, மற்றொருவர் ‘ரைட்டர்’. இவ்விருவரும் தமிழ்ச்சங்கமாபீஸுக்குரிய எல்லாப்பொருள்களையும், ‘ரிக்கார்டு’களையும் அவ்வவற்றிற்குள்ள அட்டவணைக் குறிப்புக்களுடன், காப்பாற்றிவைத்துக்

கொள்ளவும், வரவு செலவு முதலிய கணக்குகள் வைத்துக் கொள்ளவும், எவ்வழியானும் சங்கத்தின் அபிவிர்த்திக்குரிய எவ்வகை ஒழுங்குகளையும் நடத்திவரவும் கடமைப்பாடுள்ளவர்கள்.

II பத்திராசிரியர் 'ஆபீஸ்.'

இவ்வாபீஸுக்குரிய உத்தியோகஸ்தர் ஐவர். (1) தலைமைப் பத்திராசிரியர் (2) உதவிப்பத்திராசிரியர், (3) சைவநூற்பரிசோதகர் (4-5) எழுத்தாளர் இருவர். பத்திராசிரியரிருவரும் 'செந்தமிழ்ப்' பத்திரிகை மாதந்தோறும் பிரசுரித்துவரவும், புத்தகங்கள் பதிப்பிக்கவும் ஏற்பட்டவர்கள். சைவநூற்பரிசோதகர், சைவசம்பந்தமான ஏடுகளையும் மற்றும் குறிப்பிடும் நூல்களையும் பரிசீலனை செய்து புத்தகரூபமாக அச்சிடுதற்குரிய நிலையிற் கொணர்தற்குரியர். எழுத்தாளர் இருவரும் ஷை பத்திரிகை புத்தக சம்பந்தமான வேலைகட்கு உதவியாயிருந்து, பத்திராசிரியர், சைவநூற்பரிசோதகரிருவர்க்கும் வேண்டியபணிகளை முடித்துத்தரவும், ஏடுகட்குப் பிரதி செய்யவும் கடமைப்பட்டவர்கள்.

III பாண்டியன் புத்தகசாலை.

இச்சாலைக்கு உரியார் தலைமைப்புத்தகசாலையாளர், உதவிப் புத்தகசாலையாளர் என இருவர். இவ்விருவரும், புத்தகசாலைக்குரிய எல்லாப் புத்தகங்களையும் ஏடுகளையும் அட்டவணைக் குறிப்புடன் ஒழுங்காகவும், சாவதானமாகவும் வைத்துக்கொண்டும், வந்துபடிப்போர்க்கு அவ்வப்போது எடுத்துக்கொடுத்துவரும் நூல்களைக் குறிப்புப்புத்தகத்திற் பதிவுசெய்து படித்தவர் கையெழுத்து வாங்கியும் உத்தரவாதிகளாயிருந்து வேலைபார்த்தற்குரியவர்கள். காலை 8-மணி முதல், மாலை 5-மணிவரை யாவரும் புத்தகசாலைக்குள் வந்து புத்தகங்கள் வாங்கிப்படித்துவரலாம். எவ்விதக்காரணத்தாலும் அங்ஙனம் கொடுக்கும் புத்தகங்களைப் புத்தகசாலையினின்றும் வெளியேற்றல் கூடாது. அவ்வக்காலங்களிற் புத்தகசாலைக்கு விலைகொடுத்து அல்லது விலையின்றி வாங்கப்பெறும் புத்தகங்கட்குத்தனித்ததோர் குறிப்புவைத்துக்கொண்டு, அதன் விவரங்களைக் குறிப்புப் புத்தகத்திற்பதிவு செய்து கொள்ளல் வேண்டியது.

IV சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை.

இக்கலாசாலைக்கு, தலைமைஉபாத்தியாயர் ஒருவர், உதவிஉபாத்தியாயர் இருவர், சம்ஸ்கிருத உபாத்தியாயர் ஒருவர், ஆங்கிலஉபாத்தியாயர் ஒருவர், ஆக ஐவரவர். இக்கலாசாலையில் 25-மாணாக்கர்க்கு மேற்படாது உண்டி, உடை, புத்தகமுதலியபோஷணை பெற்றுக் கற்றுவருபவரும், புத்தகமட்டில் அளிக்கப்பெற்றுக் கற்றுவருபவருமென இருதிறத்தினராவர். அவர்கள் கற்கும் நூல்களும், விஷயங்களும் அவ்வக்காலங்களில் தெரிந்து குறிக்கப்பட்டு வருகின்றன.

கலாசாலையில் ஏற்பட்டுள்ள விண்ணப்பவரையறைப்பிரகாரம் ஒவ்வொரு மாணாக்கரும், கலாசாலைத்தலைமை உபாத்தியாயர்க்கு விண்ணப்பஞ்செய்து, அதன்மேல் மானேஜ்மென்டாபீஸின் முடிவான உத்திரவின்படி அக்கலாசாலையிற் சேர்தற்குரியர். மாணாக்கர் மேஜராயிருந்தால் தானாகவும், மைனராயிருந்தால் தன்னினத்தாரைக்கொண்டும் கலாசாலையொழுங்கை அநுசரித்து உடன்படிக்கைச் சாதனம் பிறப்பித்துத்தரல் வேண்டியது.

V தமிழ்ச்சங்க முத்திராசாலை.

இவ்வாபீஸுக்குரிய 'கம்பாஸிட்டர்'கள் என்னும் வேலைக்காரர்கள் கவனிக்கவேண்டிய விதிகள் அடியில் வருமாறு ;—

1. வேலைக்குரியகாலத்தில் கம்பாஸிடர்கள், மானேஜரவர்களுடைய உத்தரவின்றி ஆபீஸைவிட்டு வெளியே செல்லுதல்கூடாது.

2. அநாவசியமான சம்பாஷணை, பாட்டு முதலிய விநோதங்களிற் காலங்கழிக்காது சுறுசுறுப்பாய் வேலைசெய்தல் வேண்டும்.

3. கம்பாஸிடர் தங்கள் சொந்தவேலையொன்றையும் ஆபீஸிற் செய்தல் கூடாது.

4. மானேஜருடைய உத்தரவின்றி வேலைசெய்யுமிடங்களில் அந்நியரை அழைத்துவருதல் கூடாது.

5. கம்பாஸிடர்கள் தாங்கள் வேலைசெய்யும் ஸ்தானத்தை விட்டு அகலாது வேலைபார்த்துவருவதுடன், தங்கட்குரிய இடத்தைச்சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

6. டைப்ஸ், காயின்ஸ் முதலியவற்றை அஜாக்கிரதையாய்ச் சிதறி எறியக்கூடாது.

7. ஒவ்வொருகேசுகளிலும் அவ்வவ்வறைக்குரிய அக்ஷரங்கள் தவறி மாறுபடாமல் சரிபார்த்து அவ்வவ்விடங்களிற் சேர்க்கவேண்டியது. தரையிற் சிதறுண்டு கிடக்கும் டைப்ஸ் முதலியவற்றை அப்போதைக்கப்போது பொறுக்கி அதனதனிடத்திற் சேர்க்க வேண்டியது; அதன் பின்னர்த்தான் வேலைசெய்யத்தொடங்கவேண்டும்.

8. இவ்வாபீசுக்கு வருகிற ஒவ்வொரு ஆர்டரையும் கிரமமாய் இவ்வாபீசு ஆர்டர்புக்கிற் பதிவுசெய்து, அவ்வாறு பதிவு செய்தற்கடையாளமாக மானேஜ்மெண்டாபீசு உத்தியோகஸ்தர்களுடைய கையொப்பம் தேதி முத்திரை பதிந்த பின்னர்த்தான் அவ்வாடர்களையேற்றுக் கம்பாசிட்டர்கள் வேலைசெய்யத்தொடங்க வேண்டியது.

9. சிப்பந்திகள் மானேஜருடைய உத்திரவிற்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது. அவசியமானபொழுது ஞாயிற்றுக்கிழமைகளிலும் மற்றும் விடுமுறைநாட்களிலும் இராக்காலங்களிலும் கம்பாசிட்டர்கள் ஆயத்தமாய் வந்து வேலைசெய்யவேண்டியது. அக்காலங்களில் வேலைசெய்யுங் கம்பாசிட்டர்களுக்கு வேலையின் தன்மைக்குத் தக்கவாறு சார்ஜ் கொடுக்கப்பெறும்.

10. கம்பாசிட்டர்கள் செய்துவரும் வேலைகளிற் குறைவு நேரிட்டாலும் அஜாக்கிருதையாயிருந்தாலும் அப்போதைக்கப்போது ஹெட்கம்பாசிட்டர் அது விபரம்பற்றி மானேஜ்மெண்டாபீசிற்குத் தெரிவித்துவர வேண்டியது. சுருசுருப்பாயும் ஊக்கத்துடனும் வேலைபார்த்துவரும் கம்பாசிட்டர்களின் நன்மையைக்குறித்து அவர்களைப்பற்றியும் மானேஜ்மென்டாபீசிற்கு ஹெட்கம்பாசிட்டர் ரிப்போர்ட்டு செய்துகொண்டு வரவேண்டியது.

வேலைசெய்யுங்காலம்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தைச்சார்ந்த செந்தமிழ்க் கலாசாலை நீங்கலாக மற்றெல்லாப்பிரிவுகளிலும் உள்ள சிப்பந்திகளும் காலை 8-மணிமுதல் 12-மணி வரையிலும், பகல் 2-மணிமுதல் 6-மணிவரையிலும், ஆக 8-மணி நேரம் வேலைசெய்துவரவேண்டியது. கலாசாலை மாணாக்கர்களோ காலை 11-மணிக்குக் கலாசாலைவந்து பகல் 2-மணிக்குச்சென்று மறுபடியும் பகல் 3-மணிக்குவந்து மாலை 5-மணிக்குப் போகவேண்டியது. மேற்கண்டவாறு மாணாக்கர்களும் சிப்பந்திகளும் காலைமாலை இருபொழுதிலும் வந்து போவதில் 5-நிமிஷகாலம் பிந்திவரலாம். ஆனால் மாதக்கடையில் இரண்டுமணி நேரஅளவுபிற்பட்டு வந்ததாக ஏற்படுமானால் ½நாட்சம்பளம் பிடித்தஞ்செய்யப்பெறும். ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டிலும் அட்டெண்டென்ஸ் ரிஜிஸ்தர் வைத்துக்கொண்டு அதில் ஒவ்வொரு சிப்பந்தியும் கையொப்பஞ் செய்து வரவேண்டியது. அவ்வாறு கையொப்பஞ் செய்துவரத் தவறினால் ஆபீசுக்கு வராததாகவே பாவிக்கப்படுவார்கள். கையொப்பஞ்செய்தபிறகு வேலைசெய்யுங்காலத்தில் ஆபீசில் இல்லாமல் வெளியே சென்றிருந்தால் அது விபரத்தை ஒவ்வொரு டிப்பார்ட்மெண்டின் தலைமை உத்தியோகஸ்தரும் மானேஜ்மெண்டாபீசிற்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டியது.

'ரஜா' விதிகள்.

i சாமான்ய ரஜா
ii சீக்குரஜா
iii சம்பளத்துடன் ரஜா
iv சம்பளப்பிடித்தத்தின்பேரில் ரஜா
v விசேஷ ரஜா

என ஐவகை ரஜாக்கள்.

(1) ரஜாப்பெற விரும்புவோரெல்லாம் எழுத்துமூலமாகவே சங்கத்தின் பிரசிடெண்டு டிரஸ்ட்டியவர்களுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டு அவ்விண்ணப்பத்தை அவ்வப்பிரிவின் தலைமையதிகாரியின் அபிப்பிராயத்துடன் சங்கம்மானேஜ்மெண்டாபீசிற் கொடுத்து கொள்ளவேண்டியது. அதன் மீது உத்தரவுபெற்ற பிறகுதான் ரஜாக்கொடுக்கப்பெறும்.

(2) ஐந்து நாள்வரை சாமான்யரஜாவுக்கு மானேஜரவர்கள் சாங்ஷன்செய்யலாம். மற்றவித ரஜாவுக்கெல்லாம் பிரசிடெண்ட் டிரஸ்டியவர்களே முடிவு செய்யவேண்டியது. எவ்விதக்காரணத்தாலும் வருஷத்தில் 15-தினங்களுக்குமேற்படசாமான்ய ரஜா கொடுக்கப்படமாட்டாது. இந்த ரஜாவை ஏற்பட்ட விடுமுறைநாட்களை விலக்கியே உபயோகப்படுத்திக் கொள்ளலாம்.

(3) உண்மையாகவே சீக்காயிருக்கும்பட்சத்தில் 3-மாதம் வரை பாதிச்சம்பளத்தின்பேரில் ரஜாக்கொடுக்கப்பெறும். ஒருவருஷத்தில் ரஜாவே பெருது முற்றிலும் உழைத்து வேலைசெய்தவர்களுக்குச் சம்பளத்துடன் ஒருமாதத்திற்கு ரஜாகொடுக்கப்பெறும்.

(4) ஒருவருஷத்திற்கதிகப்படாமல் சம்பளமின்றி ஒவ்வொருவரும் ரஜா பெற்றுக்கொள்ளலாம்.

(5) நெருங்கிய பந்துக்களிறந்துபோனால் அது விஷயத்தில் முழுச்சம்பளத்துடன் 20-நாளைக்கு ரஜாக் கொடுக்கப்பெறும்.

(6) எவ்வித ரஜாவும் காரணம்பற்றியும் சமயாநுகுணம்பற்றியுங் கொடுக்கப்பெறுமேயொழிய, கட்டாயமல்ல.

(7) கலாசாலை சிப்பந்திகளுக்கு வருஷத்திலிரண்டுமுறைவிடுமுறையிருப்பதால் அவர்களுக்கு பிரிவிலீஜ் ரஜா அரைச்சம்பளத்தின் பேரிற் கொடுக்கப்பெறும்.

(8) எவர்களும் ரஜாவாய்தாவிற்கு மேற்பட்டு ஒருநாளேனும் தாமதித்து வந்து தாமதத்திற்குக் காரணம் திருப்திகரமாய் விளக்காவிட்டால், அவர்கள் தங்கள் உத்தியோகத்தையே இழந்துவிட்டார்களென மதிக்கப்பெறுவார்கள்.

(9) கோர்ட்சாட்சிகளாகவேனும் அஸ்ஸெஸர்களாகவேனும் சங்கம் உத்தியோகஸ்தர்கள் கோர்ட்டிற்குச் செல்ல நேரிட்டால் அக்காலத்தில் அவர்களுக்குச் சம்பளப்பிடித்தமில்லை.

(10) கலாசாலை, பத்திராசிரியராபீசு தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்களின் கீழான சிப்பந்திகளுக்கு அவசியம்பற்றி ஒரு

நாள் ரஜாக்கொடுக்கலாம். தாங்களும் மானேஜரவர்களுக்குத் தெரிவித்து ஒருநாள் சாமான்யரஜாப் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவிதி.

(1) அவ்வப்பிரிவின் தலைமை உத்தியோகஸ்தர்கள், தங்களின் கீழான சிப்பந்திகள் விஷயத்தில் வேலைக்குறைவேனும் நடத்தைத்தவறேனுங் கண்டால் அது விபரம்பற்றி மானேஜ்மெண்டாபீசிற்குடனே தெரிவித்து வரவேண்டியது.

(2) அவ்வப்பிரிவின் தலைமை உத்தியோகஸ்தர்கள் தங்கள் பார்வையிலும் ஸ்வாதீனத்திலுமிருக்கிற மேஜை நாற்காலி பெஞ்சு முதலிய எல்லாப்பொருள்களையும் சாவதானஞ்செய்து காப்பாற்றி வருவதுடன் அவைகளுக்கு உத்திரவாதிகளாயிருந்து ஒருகுறிப்பெடுத்து வைத்துக்கொண்டு அதன் பிரதியொன்று மானேஜ்மெண்டாபீசிக்கு அனுப்பவேண்டியது.

(3) கம்பாசிட்டர்களும் மெஷீன்டிப்பார்ட்மெண்டு முதலிய மற்றச் சில்லறை வேலைக்காரர்களும் வாஸ்தவமாய்ச் சீக்காயிருக்கும் பட்சத்தில் 5-நாள்வரையில் ரஜாக்கொடுக்கப்பெறும். அவர்கள் மற்றவித ரஜாப்பெற எவ்விதத்திலும் உரியரல்லர்.

மதுரைத்தமிழ்ச்சங்கம்,
மதுரை,
23—12—03.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨.] சோபகிருது௵ தை௴. [பகுதி-௩.

சேதுபதிகள்.

[௱௭-ம் பக்கத்தொடர்ச்சி.]

இனி, இச்செம்பிநாட்டு மறவருக்குள் ஓர் கிளையினர் 'பிச்சகிளை' என்னும் பெயரான் வழங்கப்படுகின்றனர். இக்கிளையினராகிய மறவர் தம்முடைய வீரத்தால் முடியுடைப்பெருவேந்தர்பாற் கொற்றக்குடை முதலிய விருதுபெற்றுச் சிறந்தார்வழித் தோன்றினராவர். பிச்சம் - குடை. இச்சேதுபதிகளுக்குச் சிறந்த கொற்றக்குடை செங்குடையாகும். இவரது பெருவீரத்துக்கு அறிகுறியாய நிறம் செம்மையேயாதலால், இவர் தங்குடையைச் செந்நிறத்ததாகக் கொண்டனராவர். செந்நிறம் எய்தற்பொருட்டுச் செவ்விய காவிக்கற்றோய்க்கப்பெறுதலால், இது செங்காவிக்குடை எனப்படும். 'நங்காமதேனு வெனவந்த கார்செம்பி நாடனுயர், செங்காவி யங்குடை யான் ரகுநாதன்' என்றார் ஒருதுறைக்கோவையினும். குடைவகையிற் செங்குடை என ஒன்றுண்டு என்பதனைச் 'செங்குடை மீயையுஞ் சிந்தூரமுமாகும்' எனவரும் பிங்கல நிகண்டானுமறிக. தந்நிலையிற்றாழாமையும் தாழவரினுயிர் வாழாமையுமாகிய மானத்தையே தலையாய்ச் சிறப்பித்தோம்புதற்கு அறிகுறியாகக், கவரிமாவின் மயிரை இவரது செங்குடைக் காம்பின்றலையிற் சூட்டுவது இவர்க்குத் தொன்றுதொட்டுவந்த வழக்கம். "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா, ருயிர்நீப்பர் மானம் வரின்" என்றார் திருவள்ளுவனாரும். இவரது வெற்றிக்கொடியும் செங்காவிக்கொடி யென்ப. ஒருதுறைக் கோவையிற் கருடக்கொடியும், அநுமக்கொடியுமே இவர்க்குளவாகக் கூறப்பட்டன. 'ககராசவீரவெங் கேதனத்தான்' 'கருடவெங்கே

தனத் தளவாய்' 'தூதே நடந்த கவிகுல மாமணி தோன்றுகொடி, மீதே யுயர்த்த ரகுநாயன்' எனவருதல் காண்க. திருவுடை மன்ன ரெல்லாம் திருமால் கூறுவர் என்பதுபற்றியும், ரகுநாதன் எனப்பட் டம் புனைதல்பற்றியும் இவ்விரு கொடிகளையும் தமக்குரியனவாகக் கொண்டனராவர். இவர் சூரியகுலத்தவதரித்த தோலாத தனிவீரன் திருப்பெயராகிய விஜயரகுநாதன் என்பதே தமக்குரிய சிறப்புப் பெயராகச் சூடியதும் வீரவென்றி பற்றியதேயாகும். விஜயாலயன் பேரனுகிய வீரநாராயண சோழன் என்பவன் வீரவென்றிபற்றிச் சங் கிராமராகவன் எனப்பட்டம் புனைந்தமையும் *பழைய சோழர்சாஸ னங்களிற் கண்டுகொள்க. குலோத்துங்க சேதுபதியின் புத்திரராகிய சமரகோலாகல சேதுபதி என்பவர், சோழரிடம் மன்னார்குடாக்கட லில் முத்துக்குளிக்குமுரிமையைத் தமது வீரத்துக்குப் பரிசாகப் பெற்றனராதலால் அன்றுமுதல் இவர் தமது கடல்வளமுடைமையை மேம்படுத்தித் தம் சிறப்புப்பெயர்கட்கு முன் 'முத்து' என்னும் பதத்தினையும் இணைத்து வழங்கினராவர். முத்துவிஜயரகுநாதன் என் பது இவர்க்குச் சிறந்தபெயராம். இவரது சாஸனங்களிற் 'சொரிமுத் து வன்னியன்' என ஓர் விருதாவளி காணப்படுவதும் இவரது கட ற்படுமுத்தின் பெருக்கத்தினையே குறிப்பதாகும். "வணங்காத தெவ்வைப் பொருமால் சோரிமுத்து வன்னியன்பொன், னணங்காரு மார்பன் ரகுநாதன்" என ஒருதுறைக்கோவையினும் வருதல்காண்க. வன்னியர் என்பதும் அரசர்படைத்தலைவர்க்கொருபெயர்.

"கருமுகிற் கணிநிறத் தழற்கட் பிறையெயிற்
றரிதரு குட்டி யாயபன் னிரண்டினைச்
செங்கோன் முளையிட் டருணீர் தேக்கிக்
கொலைகள வென்னும் படர்களை கட்டுத்
திக்குப்பட ராணை வேலி கோலித்
தருமப் பெரும்பயி ருலகுபெற விளைக்கு
நாற்படை வன்னிய ராக்கிய பெருமான்"

எனவரும் கல்லாடத்தானும் அறிந்துகொள்க. இனி இவர் சிறப்பித் துத்தாங்கும் படைக்கலம் வளரி எனப் பெயர்பெறுவது. இதனை

* Lists of Antiquities, Madras, Sewell, Vol. II, Page 257.

ஆளுதலிலிவர் மிகக்கைதேர்ந்தவராவர். கருதிய குறியினைத்தப்பாமலெறிதலும் எறிந்தவளரியை மீண்டு தங்கைக்கு எய்துவித்தலும் இவர்க்கே சிறந்த பெருஞ்செயல்களாயிருந்தன என்ப. இத்தகை அரிய வளரிப்பயிற்சி, ஆஸ்டிரேலியா கண்டத்துத் தொன்றுதொட்டுள்ள காடுறைவாழ்க்கையரிடம் யாரும் வியக்கத்தக்கநிலையில் இக்காலத்தும் சிறந்துள்ளதென்பர் மேற்றிசையார். அச்சேதுபதிகளது வடிவமைத்த பண்டைக் கல்லுருவங்களி லெல்லாம், இடையிற் சுற்றிய வீரக்கச்சையில், இவ்வளரியே செருகப்பட்டுள்ளது இன்றைக்கும் காணலாம். இதுவே இவர்க்குரிய பேரடையாளமாவது: இவரது வீரக்கழல் சேமத்தலை எனப் பெயர்சிறக்கும்: இது தம்மால் வெல்லப்பட்ட பகைவனது தலையையே தமக்குச்சிறந்த தாளணியாக்கிக்கொண்டு விளங்கியமை குறிப்பதாகும். இச்சேதுபதிகள்முற்காலத்து எட்டன் எனப்பெயரிய ஒருவனோடு பொருது, அவனைப்போர்தொலைத்து, அவன்தலையையே தம்வீரக்கழலிலணிந்து கொண்டனரெனக் கூறுவர். இதனை, மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக்கவிராயர் பாடிய தளசிங்கமாலையில்,

சிலையா மெழுத்துஞ் சகாயமுங் கீர்த்தியுஞ் செந்தமிழு
நிலையாகு மன்னர்சொல் வார்த்தையு மென்றைக்கு நிற்குங்கண்டாய்
கலையாருங் கானில்வன் கல்லைப்பெண் ணுக்கிய காலிலெட்டன்
றலையார் விசய ரகுநாத சேது தளசிங்கமே.

என் வருதலானே அறிந்துகொள்க. இராமேச்சரத்துத் திருக்கோயிற் பிராகாரமெல்லாம் நிறைந்துள்ள இச்சேதுபதிகள் கல்லுருவங்களில் இவ்வளரியுஞ் சேமத்தலையுமே சிறந்த அடையாளங்களாவன காணலாகும்.

இனிச் சோழரால் நாடாட்சி பிரித்தளிக்கப்பட்ட திரையரெல்லாம் தொண்டைமான்கள் எனப் பெயர்கொண்டாற் போல, இச்சேதுபதிகளால் நாடாட்சி பிரித்தளிக்கப்பட்டவராகிய புதுக்கோட்டையுடையாரும் தொண்டமான் எனப் பெயர்சிறந்தாராவர். அவர்களும் இச்சேதுபதிகளுடைய விஜயரகுநாதன் என்னும் பட்டத்தினை புனைந்துவிளங்குதலுங் கண்டுகொள்க. பண்டைக்காலத்துச்சேதுநாடு என்பது இராமநாதபுரம், சிவகங்கை, புதுக்கோட்டை இம்மூன்று

ஸம்ஸ்தானங்களும் ஒருங்குசேர்ந்ததாகும். கிழவன் சேதுபதிகாலத்துப் புதுக்கோட்டையும் (கி. பி. 1673—1708) பவானி சங்கர சேதுபதிகாலத்துச் சிவகங்கையும் (கி. பி. 1724—1728) தனியரசு பெற்றனவாம். கி. பி. 1673-ம் வருடம்வரை இம்மூவகை நாட்டிற்குஞ் சேதுபதிகளே தனித்தலைவராய்ச் செங்கோல்செலுத்தினராவர். இவர் வடநாட்டினின்று ஆரியர் பலரைக் கொணர்ந்து புண்ணியசேதுவிற் றிருக்கோயில்கொண்டருளிய இராமேசர் கைங்கரியத்துப் புகுவித்துத் தாமும் அக்கடவுட்கு வழிவழித்தொண்டராய்ச்சிறந்தனர். 'ராமநாதசுவாமி ஸகாயம்'என்பதே பண்டைச் சேதுபதிகள் கையொப்பமாகும். 'சூலங்கைக் கொண்ட விராமேசர் தாண்முடி சூடியெழு, ஞாலங்கைக் கொண்ட ரகுநாயகன்' எனவும் 'சூரியர் போற்று மிராமேசர் தாளிணைக் கன்புவைத்த, சூரியன் விரையர் கோன்ரகுநாதன்' எனவும் அமிர்தகவிராயர் கூறுதல் காண்க. இவர் சாஸனங்களில் 'ஆரியர் மானங்காத்தான்' என ஓர் விருது வழங்குவதும் இவர் ஆரியரைப் போற்றிவந்தமை குறிக்கும். இச்சேதுபதிகள் இராமநாதபுரமாகிய முகவையைத் தமக்குரிய தலைநகராகக் கொள்ளுதற்கு முன்னே சேதுநாட்டிற் பல ஊர்களைத் தலைநகராக்கி வதிந்தனரென்பது, பழைய சாஸனங்களானும் பாடல்களானும் அறியப்படுகின்றது; அவ்வூர்களாவன ;—

க	குலோத்துங்க சோழநல்லூர்	(சாஸனம்)
உ	விரையாதகண்டன்	(ஷ)
௩	செம்பி	(ஒருதுறைக்கோவை)
ச	கரந்தை	(ஷ)
ரு	விரை	(ஷ)
௬	தேவை	(ஷ)
எ	மணவை	(ஷ)
அ	மழவை	(ஷ)
௯	புகலூர்	(ஷ)

என இவையாம். இவ்வூர்களில் அரசாண்ட பழைய சேதுபதிகள் பெயர்கள் முறையே தொடராக இப்போது கிடைக்கப்பெறுவிடினும் சேதுபதிகள் வரலாறு குறித்துள்ள பழைய கையெழுத்துப் பிரதியொன்றாற் சிலபெயர்கள் அறியலாவன. அப்பெயர்கள் வருமாறு;—

க ஆதிரகுநாதசேதுபதி.
உ ஜயதுங்கரகுநாதசேதுபதி.
ங அதிவீரரகுநாதசேதுபதி.
ச வரகுணரகுநாதசேதுபதி.
ரு குலோத்துங்கசேதுபதி.
சா சமரகோலாகலசேதுபதி.
எ மார்த்தாண்டபைரவசேதுபதி.
அ சுந்தரபாண்டியசேதுபதி.
கூ காங்கேயரகுநாதசேதுபதி.
கo விஜயமுத்துராமலிங்கசேதுபதி

இவர்கள் சேதுநாட்டுள்ள சில பழையகோயில்களைக் கட்டுவித்தனர் எனவும், அவற்றிற்குச் சில கிராமங்கள் அளித்தனர் எனவும் கூறுவதே யல்லது, வேறு இவர் காலம், ஊர், செயல் முதலியன ஒன்றும் விளங்குமாறு, அவ்வரலாறு கூறிற்றில்லை. இவர்க்குப் பின் கி. பி. 1604-ஆம் வருடமுதல் இந்நாடாண்ட சேதுபதிகள் வரலாறே, அஃது ஒருவாறு தொகுத்துரைப்பதாகும். அதுவே Mr Nelson's Madura country, மகா-ள-ள-ஸ்ரீ டி. ராஜாராமராவ் அவர்கள் Ramnad Manual, Mr Sewell துரையவர்களுடைய Lists of Antiquities Madras, Vol. II இவற்றினும் பெரும்பாலுங் காணப்படுவது. அச்சேதுபதிகளாவார்,

க	சடைக்கத்தேவராகிய உடையான் சேதுபதி	[கி. பி.	1604—1621
உ	கூத்தன் சேதுபதி	,,	1621—1635
ங	தளவாய் சேதுபதி	,,	1635—1645
ச	ரகுநாதசேதுபதியாகிய திருமலைசேதுபதி		1645—1670
ரு	ராஜசூரியசேதுபதி	,,	1670—1673
சா	கிழவன் சேதுபதி	,,	1673—1708
எ	திருவுடைய தேவர்	,,	1709—1723
அ	தண்டத்தேவர்	,,	1724—
கூ	பவானிசங்கரத்தேவர்	,,	1724—1728
கo	குமாரமுத்துவிஜயரகுநாதசேதுபதி	,,	1728—1734

௧௧	முத்துக்குமாரசேதுபதி	,,	1734—1747
௧௨	இராக்கத்தேவர்	,,	1747—1748
௧௩	செல்லத்தேவர்	,,	1748—1760
௧௪	முத்துராமலிங்க சேதுபதி	,,	1760—1794
௧௫	ராணி மங்களேசுவரி நாச்சியார் ...	,,	1803—1812
௧௬	அண்ணுச்சாமி சேதுபதி	,,	1812—1815
௧௭	ராணி முத்துவீராயி நாச்சியார் ...	,,	1815—1829
௧௮	ராமசுவாமி சேதுபதி	,,	1829—
௧௯	ராணி மங்களேசுவரி நாச்சியார் ...	,,	1829—1838
௨௦	ராணி துரைராஜநாச்சியார்	,,	1838—1845
௨௧	ராணி பர்வதவர்த்தனி நாச்சியார் ...	,,	1845—1868
௨௨	முத்துராமலிங்க சேதுபதி	,,	1868—1873
௨௩	பாஸ்கரசேதுபதி	,,	1873—1903

என இவர்கள். இச்சேதுவேந்தர்களெல்லாம் தெய்வவழிபாட்டானும், தருமசிந்தையானும், செந்தமிழபிமானத்தானும், பெருங்கொடையானும் அளவில்லாத புகழையே விளைத்தவர்கள். இச்சேதுநாட்டுத் தேவஸ்தானங்களும் அன்னசத்திரங்களும் வருடமொன்றுக்கு நான்கிலக்க ரூபாவுக்கு மேற்பட்ட பொருள்வருவாயுடையனவாகும். புண்ணியசேதுவைக் கண்ணிய பெருவழிகளெல்லாம் இவர்களது அன்னசத்திரங்களே நிறைந்து விளங்குவன காணலாம். நீர்வளமிகுத்த நல்லூர்கள் பல, அந்தணர்க்குத் தருமாசனம் என்னும் பெயரான் முற்றூட்டாக இவர்களாலளிக்கப்பட்டுள்ளன; இவ்வாறே இவ்வேந்தர்கள் தேவாலயங்கட்கும் அன்னசத்திரங்கட்கும்மடாலயங்கட்கும் செந்தமிழ்ப் புலவர்கட்கும் முற்றூட்டாக அளித்த கிராமங்களை எண்ணின் மிகப் பலவாம். வருடமொன்றுக்கு முப்பதினாயிர ரூபாவுக்கு மேற்பட்ட பொருள் வருவாய் இச்சமஸ்தானபதிகள் பரோபகாரத்துக்கென்று வரைந்துவைத்த பெருந்தனமாகும். இது "தருமமகமை" "சாரிமகமை" என்னும் பெயர்களான் இன்றைக்கும் விளங்குகின்றது. இராமேச்சரம் இவ்வேந்தர்களாற் பெரிதுஞ் சிறப்பித்துப் போற்றப்பட்ட முக்கிய தேவாலயமாகும். இவர்கள் ஆண்டுப்புரிந்த தருமங்களே மிகவும் விலையுயர்ந்தன. அத்திருக்

கோயிற்கண் இவ்வரசரியற்றிய அரிய பெரிய மண்டபங்களின் விசித்திரசிற்பங்கள் மேற்றிசையோராலின்றைக்கும் பாராட்டப்பெறுவன. சிதம்பரம், மதுரை, திருப்பரங்குன்றம், திருப்பெருந்துறை, திருச்செந்தூர், பழனி முதலிய கோயில்களெல்லாம் இவர்களது கட்டளைகள் உடையன. சேதுதீரத்துள்ள இராமேச்சரம், திருப்புல்லாணி முதலிய சிவாலய விஷ்ணு ஆலயங்களின் பெரிய திருப்பணிகளெல்லாம் இவர்களாலே நன்கியற்றப்பட்டனவாகும். இதனைத்,

'தேனுர் மொழிமட மாதர்சந் தானம்பொன் சேருங்கல்வி
மேனுட் டவமுனைப் போற்செய் தவர்க்குண்டு வீணர்க்குண்டோ
வானு டரும்பணி ராமே சருக்குமுன் மண்டபஞ்செய்
தானும் விசய ரகுநாத சேது தளசிங்கமே.'

'எனதன்ம மாகிலுந் தான்கற்ப கால மிருக்கவுன்போன்
மனதி னினைந்த படிசெய்ய யார்க்கும் வராதுகண்டாய்
சனதன மாறிநப் புல்லாணிக் கோபுரங் கட்டுவித்த
தனத விசய ரகுநாத சேது தளசிங்கமே.'

என்னுந் தளசிங்கமாலைப்பாடல்களான் அறிந்துகொள்க. இவ்வேந்தர்களது செந்தமிழ்வண்மை ஒருதுறைக்கோவையிற் பலவாறுய்ப் புகழ்ந்து பாராட்டப்பட்டுள்ளது. சேரசோழபாண்டியர்க்குப் பின் தனித்தமிழ் அரசர்களாய இச்சேதுபதிகளே செந்தமிழ்ப்பரிபாலனஞ்சீர்பெறவியற்றினரென்ப. ஒருதுறைக்கோவை பாடிய பொன்னுங்கால் அமிர்த கவிராயருக்குப் பதினுயிரம் பொன் பரிசில் அளித்தனரெனக்கூறுவர். இதனைக் "கோவைத் துறைக்குப் பதினு யிரம்பொன் கொடுத்திசைகொள், தேவைத் துறைக்குத் துரைரகு நாதன்" என அக்கவிராயர் பாடியதனுனே அறியத்தக்கது. இவ்வொருதுறைக்கோவை கொண்டவர், திருமலை ரகுநாதசேதுபதி என்பவர். இவர் தளவாய் சேதுபதியின் புதல்வர்; தமிழிற் செய்யுள் செய்தலினும் வல்லவர் என்ப. அமிர்தகவிராயர் இவரைத் 'தளவாய் குமாரன்' எனவும் 'காக்குங் கருணையுங் கல்வியும் வாழ்வுங் கவிமதுர, வாக்குந் தழைத்த ரகுநாதன்' எனவும் கூறுமாற்ருனிவையறியப்படும். இவ்வாறே இச்சேதுபதிகள் நல்லுதவிபெற்றுச் சிறந்த செந்தமிழ்ப்புலவர் பலராவர். யானறிந்தவளவில் அப்புலவர்கள் பெயர்களும் அவர்கள் பாடியனவும் ஈண்டு க்கூறுகின்றேன்.

	புலவர்	பாடியது.
க	அகோரதேவர்	திருக்கானப்பேர்ப்புராணம்
உ	திருமறைக்காடு-திருச்சிற்றம்பலதேசிகர்	திருவாடானைப்புராணம்.
ங	காடடர்ந்தகுடி—தலைமலைகண்ட தேவர்	மருதூரந்தாதி.
ச	மிதிலைப்பட்டி-சிற்றம்பலக்கவிராயர்	தளசிங்கமாலை.
ரு	ஷெயூர்-மங்கைபாகக்கவிராயர்	கொடுங்குன்றப்புராணம்.
சு	பொன்னூங்கால்-அமிர்தகவிராயர்	ஒருதுறைக்கோவை.
எ	குருகூர்-இராமாநுஜ கவிராயர்	இரகுநாதக்கோவை.
அ	சக்கரைப்புலவர்	திருச்செந்தூர்க்கோவை.
கூ	சவாதுப்புலவர்	இராசராசேசுவரிபஞ்சரத் [தினம்
க0	சோமசுந்தரகவிராயர்	திருக்கழுக்குன்றக்கோவை.
கக	மதுரகவி (பெருங்கரை)	பல இசைப்பதங்கள்.
கஉ	சதாவதானம் பெரியசரவணக்கவிராயர்	பணவிடுதூது.
கங	முத்துநாயகப்புலவர்	கண்ணுடையம்மன்பள்ளு.
கச	சதாவதானம் சிறியசரவணக்கவிராயர்	குன்றைச்சிலேடைமாலை.
கரு	சதாவதானம் கிருட்டிணையங்கார்	புல்லைமாலை.
கசு	பெருங்கருணை, சதாவதானம் முத்தழகரையங்கார்	திருக்கோட்டிக்கலம்பகம்.
கஎ	சதாவதானம் முத்துச்சாமி ஐயங்கார்	குருகைக்கலம்பகம்.
கஅ	வேலாயுதக்கவிராயர்.	
ககூ	முத்துவீரப்பபிள்ளை.	
உ0	செவ்வூர் வெண்பாப்புலி.	

இன்னுஞ் சில புலவர்பரம்பரையினர் கமுதியினும் முதுகுளத்தூரினும், ஊருணிக்கோட்டையினும், மாடம்பூரினும், பிறவிடங்களினும் உள்ளார்கள். இவர்களெல்லாம் இச்சேதுபதிகளின் கைவண்மையின் பயனைத்துய்த்துச் சிறந்தவராவர்கள். இச்சேதுபதிகள் போலவே இவ்வரசர்பால் மந்திரக்கிழவராயமர்ந்தாரும் செந்தமிழ்ப் புலவரை இனிதோம்பினர். இந்நாடு முழுதுமுள்ள பல்வேறுவகைப்பட்ட நிலங்களின் தகுதியைப் பல்லாற்றானும் ஆராய்ந்துணர்ந்து அவற்றிற்கேற்ற இறையினைச்செவ்வனம் விதிக்கும் "ஒழுகு" எனப் பெயர்சிறந்த நில விறைக்கணக்கை இந்நாட்டிற்குதவிய முத்திருளப்பபிள்ளையவர்கள் மதுரகவிகளாற் பெரிதும் சிறப்பித்துப் "பாடப்பட்டனர்." கி. பி. 1770-ம் ஆண்டில் தஞ்சையரசனைப் போர்தொலைத்துச் சிறந்த தள

வாய்-தாமோதரம்பிள்ளையவர்கள் வேள்விக்கோவை கொண்டனர். இனியிவ்வில்லேருழவர் தொல்குடி சிறக்கவந்த சொல்லேருழவரும், இராச்சியதந்திர மகாநிபுணரென அறிஞர் பலரானும் புகழ்ந்துகொண் டாடப்பட்ட பேரறிவாளரும் ஆகிய ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவ ரவர்களது செந்தமிழ் வண்மை நந்தமிழ்நாடெல்லாம் நன்கறிந்ததே. இவர்கள் நல்லுதவியால் வெளிவந்த செந்தமிழ்நூல்கள், திருச்சிற்றம் பலக்கோவையாருரை, திருவள்ளுவருரை, நன்னூல்விருத்தியுரை இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியப் பாயிரவிருத்தி, முதற்சூத் திர விருத்தி, தமிழ்ப்பிரயோகவிவேகவுரை, தருக்கசங்கிரகவுரை, தனிப்பாடற்றிரட்டு, மருத்துநூல் எனப்பலவாம். இப்பிரபுசிகா மணிகளது அருமைச்சோதரராகிய ஸ்ரீமாந்-முத்துராமலிங்கசேதுபதி யவர்களது ஸங்கீதஸாகித்தியவன்மை இந்நாடெல்லாம் நன்று தெரிந் ததேயாம். அவர்களியற்றிய நூல்கள்வள்ளிமணமாலை, முருகாநுபூதி, மும்மொழிமாலை, பிரும்மகைவல்யம், பாலபோதம், பிரபாகரமாலை, காயகப்பிரியா, ரஸிகரஞ்சனம் எனப்பலவாம். இத்தகைச்சேதுபதி கள் மரபிற்கோர் திலகம்போல்விளங்கிப் பலகலையறிவானும் பிரசங்க வலியானும் பெருங்கொடையானும் நிலவுபுகழ்பரப்பி, நந்தமிழ்நாடு புலம்பச் சமீபகாலத்துத் தேகவியோகமடைந்த ஸ்ரீமாந்-பாஸ்கரசேது பதி மன்னரது செந்தமிழறிவும் செந்தமிழபிமானமும் யாமெல்லாம் கண்கூடாகக்கண்டனவே. அமிழ்தினுமினிய தமிழ்முழுதோர்ந்து இமிழ்கடல் வரைப்பெலாம் அத்தமிழ்ச்சுவைதெருட்டவிழைந்து செந்தமிழ்ச்சங்கமொன்று சீர்பெறநிறுவி அதன்வளர்ச்சிக்கண்ணே கண்ணுங்கருத்தும் உடையராய்ச் சிறந்தநஞ்செந்தமிழ் வள்ளலாகிய பால்வனத்தம்ஜமீந்தார் மகா-ள-ள-ஸ்ரீ ஸ்ரீமாந்-பாண்டித்துரைத்தேவ ரவர்களும் இத்தொல்குடிப்பிறப்பினராவர். இவையெலாம் இச்சேது பதிகட்கும் தமிழிற்குமுள்ள பொருத்தம் விளக்குவனவாம். இத் துணையுங்கூறியவாற்றான் இச்சேதுபதிகளது தொன்மையியல்பும், செந்தமிழ்வண்மையும் ஒருவாறறியத்தக்கன. செந்தமிழபிமானத் தாற் சிறந்த சேதுபதிமரபு நீடூழிவாழ்க.

இங்ஙனம்

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

உ

சொற்பொருட்குற்றங்கள்.

கவிகளையாவது உரைகளையாவது கத்தியரூபமாகிய வாக்கியங்களையாவது இயற்றும்போதெல்லாம் சான்றோர்களாலே தவிரப்படுவன எனச்சொல்லப்பட்ட சொற்குற்றங்களும், பொருட்குற்றங்களும் பற்றாது பரிந்தோம்பிப் பாதுகாத்துத் திருத்தமும் அழகும் பொருந்துமாறு செய்தல் அத்தியாவசியகம் என்பது கற்றுணர்ந்த சான்றோர்க்கெல்லாம் ஒத்தகருத்தேயாம். உலகிலுள்ள பொருள்களை விளக்குஞ் சூரியன்போலப் பலவகைப் பொருள்களையும் விளக்குஞ் சொல்லென்னும் சோதியானது குற்றமென்னும் மலினம் பற்றுமாயின்; பொருளெவ்வாறு சித்திக்கும்! சொற்குற்றங்களும் பொருட்குற்றங்களும் விரவிய நூலுரைகண் முதலியனவெல்லாம் அறிஞர்களாலே அருவருத்து வெறுத்தொழிக்கப்படுவனவேயாம். கடைச்சங்கத்தார் காலத்திலே இறையனாரகப்பொருளுக்கு எழுதப்பட்ட உரைகளெல்லாம் ஒத்துக்கொள்ளப்பட்டனவா? குற்றங்கள் விரவிய உரைகளெல்லாம் கொள்ளாது விலக்கப்பட்டனவேயாம். கடைச்சங்கப் புலவருளொருவராகிய சீத்தலைச்சாத்தனார் என்பவர் அப்பொழுதை நூல்களிலே சொற்குற்றங்களையும், பொருட்குற்றங்களையுங் காணுந்தோறெல்லாம் சிறிதும் பொறாராய்க் கைகளாலே தமது தலையிலே புண்படக் குத்திக்கொள்வார் என்றும், அவ்வாறாய தலைக்குத்துத் திருவள்ளுவநாயனாருடைய திருக்குறள் கேட்டமாத்திரத்திலே தீர்ந்துபோயிற்றென்றும் திருவள்ளுவமாலையிலே ஒரு கவி கூறுகின்றது.

திருவள்ளுவமாலை.

சிந்திநீர்க் கண்டந் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலாற்
றலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

நூலுரைகள் முதலியவைகளிலன்றி வழக்கிலே ஒருவரோடொருவர் பேசும் வார்த்தை முதலியவைகளிலேதானும் சொற்குற்றமும் பொருட்குற்றமும் வாராது பேசுதல்வேண்டும் என்பது திருவள்ளுவநாயனார் கருத்து.

திருக்குறள்.

கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

இக்குறள்களிலே 'கேட்டார்ப்பிணிக்குந் தகையவாய்' என்பதற்கு 'நட்பாயேற்றுக்கொண்டாரைப் பின் வேறுபடாமற் பிணிக்குங் குணங்களை அவாவி' என்பது பதவுரையும், 'அக்குணங்களாவன வழுவின்மை, சுருங்குதல், விளங்குதல், இனிதாதல், விழுப்பயன்றருதல் என்றிவை முதலாயின' என்பது விசேடவுரையும்; 'நன்குணர்ந்து சொல்லுக' என்பதற்கு 'வழுப்படாமல் மிகவுந் தெளிந்து சொல்லுக' என்பது பதவுரையும், 'வழு சொல்வழுவும் பொருள்வழுவும்' என்பது விசேடவுரையுமாகப் பரிமேலழகரால் எழுதப்பட்டன. ஸ்ரீராமபிரான் முதன்முறையாக அநுமானோடு பேசியபோது எவ்வகை வழுவும் வாராமல் அவ்வநுமான் செவ்விதாகப் பேசிய சொற்றிறத்தினைப் பாராட்டி 'மற்றுமிவ் வுலகத்துள்ள முனிவர் வானவர்களாரிச் சொற்றிறமுடையார்' (இராமா. அநும. ௨௨) என்றுகூறினர். இவைகளாலே வழக்கிலே நிகழும் வார்த்தைகளும் வழுவலாகாதென்பது பெறப்படுகின்றது. பலநாள் நிலைபெற்றும் பலரும் படித்தற்குரியனவாகச் செய்யப்படும் நூலுரைகள் எவ்வியல் பினவாதல்வேண்டும்! சொற்குற்றமும் பொருட்குற்றமுமாகப் பத்துக் குற்றங்கள் நூல்களிலே வரலாகாதனவென நன்னூலாராற் கூறப்பட்டன. அங்ஙனமே தொல்காப்பியராலும் பத்துக் குற்றங்கள் கூறப்பட்டன.

நன்னூல்.

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்

வழூச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றென்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
யென்றிவை யீரைங் குற்ற நூற்கே.

தொல்காப்பியம்.

சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூறல்
என்ன வகையினு மனங்கோ ளின்மை
அன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இவ்விருவகை நூலாசிரியர் கூற்றுக்களுள்ளே சில, ஒருவாற்றான் வேறுவனவன்றிப் பல, வேறுவனவல்ல. வடநூலாருள்ளே ஸ்ரீ போஜதேவர் குற்றங்களையெல்லாம் சொற்குற்றம் எனவும், வாக்கியக் குற்றம் எனவும், வாக்கியப்பொருட்குற்றம் எனவும் மூன்றாகப் பிரித்துப், பின்னர் இம்மூன்றினையுந் தனித்தனி பதினாறாக விரித்துக் கூறினர். வாக்கியம் - சொற்றொடர். அவற்றுள்ளே சில, நன்னூலாருந் தொல்காப்பியருங் கூறிய இக்குற்றங்களுள்ளே அமையுமியல்புடையன. பல அமையாமையானும், கிளந்து கூறுந்திறத்தானும், பிறங்யத்தானும் அவையெல்லாஞ் செந்தமிழ் மொழியினும் பெயர்த்துச் சேர்த்துக்கொள்ளப்படுஞ் சிறப்புடையனவாம். ஆயினும் எமக்கினைய புடைய சிலவற்றினை ஈண்டுப்பெயர்த்துக் கூறுதும்.

சொற்குற்றங்கள்.

க	அசாது.	ரு	அந்நியார்த்தம்.
உ	அப்பிரயுக்தம்.	சு	அபுட்டார்த்தம்.
ந	கஷ்டம்.	எ	அசமர்த்தம்.
ச	அநர்த்தகம்.	அ	அப்பிரதீதம்.

கூ கிலிட்டம். கரு விருத்தம்.
க0 கூடார்த்தம். கச அப்பிரயோசகம்.
கக நேயார்த்தம். கரு தேசியம்.
கஉ சந்திக்தம். கசு கிராமியம்.

அசாது.

க. இலக்கணநூல்களுக்கு விரோதமாக வருஞ் சொற்பிரயோகம் யாதோ அஃது அசாது என்னுஞ் சொற்குற்றமாகும். அசாது - சாதுவல்லாதது. அ - அன்மை. சாது - இலக்கணத்திற்கியைந்த சொல், நற்சொல். இது நன்னூலார் கூறிய 'வழூச்சொற்புணர்த்தல்' என்பதனிலமையும்.

உதாரணம்.

'உத்தமனே நற்பிரபூ வுன்பா லினிதடைந்தேன்'
'மறைக ளாதியியம்புதற்கரிதாய் போற்றி'

இங்கே பிரபுவே எனற்பாலதனைப் 'பிரபூ' எனக்கொண்டதும் அரியாய் எனற்பாலதனை 'அரிதாய்' எனக்கொண்டதும் இலக்கணநூல்களுக்கு விரோதமாம். பிரபு என்னும் உகாரவிறு 'ஓவுமுவ்வுமே யொடுசிவணும்' என்னுந்தொல்காப்பியச் சூத்திரப்படி பிரபுவே என விளிக்கப்படுவது.

அப்பிரயுக்தம்.

உ. கற்றுணர்ந்த சான்றோர்களாலே முன்னர் ஓரிடத்தும் பிரயோகிக்கப்படாத சொற்பிரயோகம் யாதோ அஃது அப்பிரயுக்தம் என்னுஞ் சொற்குற்றமாகும். அப்பிரயுக்தம் - பிரயோகிக்கப்படாதது. அ - அன்மை. பிரயுக்தம் - பிரயோகிக்கப்பட்டது.

உ-ம். 'கோலமுற்ற பலாக்கில்' 'மரிசையாயுறும்' இங்கே 'பலாக்கு' 'மரிசை' என்பன அப்பிரயுக்தபதங்கள்.

கஷ்டம்.

ங. கேட்போர் காதுகளுக்குச்சுகங்கொடாத சொற்பிரயோகம் யாதோ அது கஷ்டம் என்னுஞ் சொற்குற்றமாகும். கஷ்டம் - பீடைபயப்பது. இது தொல்காப்பியர் கூறிய 'கேட்போர்க்கின்னா யாப்பிற்றாதல்' என்பதிலமையும்.

உ-ம். 'கனகாறகைதல்' 'சொறீக்கை'. இவை கஷ்டமாதலறிக.

அநர்த்தகம்,

ச. அடிகளை நிரப்பும்பொருட்டாக அலக்கணுற்றுச் சேர்க்கப்படுஞ் சொற்பிரயோகம் யாதோ அஃது அநர்த்தகம் என்னுஞ் சொற்குற்றமாம். அநர்த்தகம் - அர்த்தமில்லாதது. அந் - இன்மை. அர்த்தகம் - அர்த்தமுடையது. இது நன்னூலார் கூறிய 'நின்றுபயனின்மை' என்பதிலமையும்.

உ-ம். 'சீர்பூத்த சுந்தரநற் செம்மை பெறுமாண்டு' இங்கே அநர்த்தகமறிக.

அங்நியார்த்தம்.

ரு. கருதிய பொருள் பயக்கும் ஆற்றல் கெட்டதுவாகி வேறும்பொருள் பயப்பது அங்நியார்த்தம் என்னுஞ் சொற்குற்றமாகும். அங்நியார்த்தம் - வேறுபொருள்.

உ-ம். 'விமலன் காதனுயகி' இங்கே 'காதல்' என்பதற்கு மகன் எனப் பொருள்கொள்ளும்போது அஃது அங்நியார்த்தமாதலறிக.

அபுட்டார்த்தம்.

சு. ஒரு சிறிய சொல்லினலே சொல்லத்தக்க ஒரு பொருளை விளக்குதற்குச் சொல்லப்படும் வெகுசொற்பிரயோகம் அபுட்டார்த்தம் என்னுஞ் சொற்குற்றமாம். அபுட்டார்த்தம் - பெலமில்லாப் பொருளுடையது. அ - இன்மை. புட்டம் - பெலம். உ-ம். 'துவாதசார்த்தார்த்தலோசனன்' இங்கே மூன்று என்னும் பொருளைப் பன்னிரண்டிற் பாதியிற்பாதி எனப்பலசொல்லாற் கூறியவாறுணர்க.

அசமர்த்தம்.

எ. கருதிய பொருளை விளக்குதற்குரிய பொருத்தமில்லாத சொற்பிரயோகம் அசமர்த்தம் என்னுஞ் சொற்குற்றமாம். அசமர்த்தம் - பொருத்தமான பொருளில்லாதது. அ - இன்மை. சமர்த்தம் - பொருத்தமான பொருள். பங்கயம் என்பது தாமரை என்னும் பொருட்கே நியதியான பொருத்தமுடையது; அதனைச் சேற்

றிற் பிறப்பது என்னுங் காரணங்கருதிக் குவளைக்கும் பிரயோகிப்பது அசமர்த்தமாகும். பங்கயம் - சேற்றிற் பிறப்பது.

அப்பிரதீதம்.

அ. அங்கிய சாஸ்திரங்கொண்டன்றி வேறெவ்வழியானும் அறியப்படாத சொற்பிரயோகம் அப்பிரதீதம் என்னுஞ்சொற்குற்றமாம். அப்பிரதீதம் - அறியப்படாதது. அ - அன்மை. பிரதீதம் - அறியப்பட்டது. 'ரூபஸ்கந்தம் போல' என்பது அப்பிரதீதம். ரூபஸ்கந்தமாவது யாதென்பது பௌத்த சாத்திரங்கொண்டே அறியத்தக்கது.

கிலிட்டம்.

கூ. பலசொற்கள் படித்துத் தூரம்போனபின் கருதிய பொருள் பயக்குஞ் சொற்பிரயோகம் கிலிட்டம் என்னுஞ் சொற்குற்றமாகும். கிலிட்டம் - கிலேசம் பயப்பது. "வீமன் பகைவன் மகன் பகை தாதை விளங்குமிடம்" இதனாற் குறிக்கப்பட்ட பொருள் ஆகாயம். வீமன் - பறவைக்கு நாயகனாகிய கருடன் எனவும், அவன் பகைவன் இந்திரன் எனவும், அவன் மகன் அருச்சுனன் எனவும், அவன் பகை கன்னன் எனவும், அவன் தாதை சூரியன் எனவும், அவன் விளங்குமிடம் ஆகாயம் எனவுங்கொள்க. இது கிலிட்டம்.

கூடார்த்தம்.

க௦. கருதிய பொருட்குப் பிரசித்தமான வழக்கமில்லாத சொற்பிரயோகம் கூடார்த்தம் என்னும் சொற்குற்றமாகும். கூடார்த்தம் - மறைக்கப்பட்ட பொருள். இது தொல்காப்பியர் கூறிய என்னவகையானு மனங்கோளின்மை.' என்பதில் அமையும். என்னவகையானு மனங்கோளின்மை - எவ்வாற்றானும் பொருளறிதற் கரிதாகச் செய்தல். உ-ம். 'அளவில் கோவினனடி பணிந்தெழ' இங்கே கண்ணென்னும் பொருளிலே 'கோ' என்னுஞ் சொற்பிரயோகம் கூடார்த்தம்.

நேயார்த்தம்.

கக. வேறொன்றினுங் காணப்படாததாய்ப் பாடுவோனாற்றானே கற்பிக்கப்பட்ட பொருளுடைய சொற்பிரயோகம் நேயார்த்தமாகும்.

வழுச்சொற் புணர்த்தன் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தன் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுத னின்றுபய னின்மை
யென்றிவை யீரைங் குற்ற நூற்கே.

தொல்காப்பியம்.

சிதைவெனப் படுபவை வசையற நாடிற்
கூறியது கூறன் மாறுகொளக் கூறல்
குன்றக் கூறன் மிகைபடக் கூறல்
பொருளில மொழிதன் மயங்கக் கூறல்
கேட்போர்க் கின்னா யாப்பிற் றாதல்
பழித்த மொழியா னிழுக்கங் கூறல்
என்ன வகையினு மனங்கோ ளின்மை
அன்ன பிறவு மவற்றுவிரி யாகும்.

இவ்விருவகை நூலாசிரியர் கூற்றுக்களுள்ளே சில, ஒருவாற்றான் வேறுவனவன்றிப் பல, வேறுவனவல்ல. வடநூலாருள்ளே ஸ்ரீ போஜதேவர் குற்றங்களையெல்லாம் சொற்குற்றம் எனவும், வாக்கியக் குற்றம் எனவும், வாக்கியப்பொருட்குற்றம் எனவும் மூன்றாகப் பிரித்துப், பின்னர் இம்மூன்றினையுந் தனித்தனி பதினாறாக விரித்துக் கூறினர். வாக்கியம் - சொற்றொடர். அவற்றுள்ளே சில, நன்னூலாருந் தொல்காப்பியருங் கூறிய இக்குற்றங்களுள்ளே அமையுமியல்புடையன. பல அமையாமையானும், கிளந்து கூறுந்திறத்தானும், பிறங்யத்தானும் அவையெல்லாஞ் செந்தமிழ் மொழியினும் பெயர்த்துச் சேர்த்துக்கொள்ளப்படுஞ் சிறப்புடையனவாம். ஆயினும் எமக்கினைப் புடைய சிலவற்றினை ஈண்டுப்பெயர்த்துக் கூறுதும்.

சொற்குற்றங்கள்.

க	அசாது.	ரு	அந்யார்த்தம்.
உ	அப்பிரயுக்தம்.	சு	அபுட்டார்த்தம்.
ந	கஷ்டம்.	எ	அசமர்த்தம்.
ச	அநர்த்தகம்.	அ	அப்பிரதீதம்.

கூ	கிலிட்டம்.	கங	விருத்தம்.
க0	கூடார்த்தம்.	கச	அப்பிரயோசகம்.
கக	நேயார்த்தம்.	கரு	தேசியம்.
கஉ	சந்திக்தம்.	கசு	கிராமியம்.

அசாது.

க. இலக்கணநூல்களுக்கு விரோதமாக வருஞ் சொற்பிரயோகம் யாதோ அஃது அசாது என்னுஞ் சொற்குற்றமாகும். அசாது - சாதுவல்லாதது. அ - அன்மை. சாது - இலக்கணத்திற்கியைந்த சொல், நற்சொல். இது நன்னூலார் கூறிய 'வழூச்சொற்புணர்த்தல்' என்பதனிலமையும்.

உதாரணம்.

'உத்தமனே நற்பிரபூ வுன்பா லினிதடைந்தேன்'
'மறைக ளாதியியம்புதற்கரிதாய் போற்றி'

இங்கே பிரபுவே எனற்பாலதனைப் 'பிரபூ' எனக்கொண்டதும் அரியாய் எனற்பாலதனை 'அரிதாய்' எனக்கொண்டதும் இலக்கண நூல்களுக்கு விரோதமாம். பிரபு என்னும் உகாரவீறு 'ஓவுமுவ்வுமே யொடுசிவணும்' என்னுந்தொல்காப்பியச் சூத்திரப்படி பிரபுவே என விளிக்கப்படுவது.

அப்பிரயுக்தம்.

உ. கற்றுணர்ந்த சான்றோர்களாலே முன்னர் ஓரிடத்தும் பிரயோகிக்கப்படாத சொற்பிரயோகம் யாதோ அஃது அப்பிரயுக்தம் என்னுஞ் சொற்குற்றமாகும். அப்பிரயுக்தம் - பிரயோகிக்கப்படாதது. அ - அன்மை. பிரயுக்தம் - பிரயோகிக்கப்பட்டது.

உ-ம். 'கோலமுற்ற பலாக்கில்' 'மரிசையாயுறும்' இங்கே 'பலாக்கு' 'மரிசை' என்பன அப்பிரயுக்தபதங்கள்.

கஷ்டம்.

ங. கேட்போர் காதுகளுக்குச்சுகங்கொடாத சொற்பிரயோகம் யாதோ அது கஷ்டம் என்னுஞ் சொற்குற்றமாகும். கஷ்டம் - பீடையயப்பது. இது தொல்காப்பியர் கூறிய 'கேட்போர்க்கின்னா யாப்பிற்றுதல்' என்பதிலமையும்.

உ-ம். 'கனைகாறகைதல்' 'சொறீக்கை'. இவை கஷ்டமாத லறிக.

அநர்த்தகம்,

ச. அடிகளை நிரப்பும்பொருட்டாக அலக்கணுற்றுச் சேர்க்கப் படுஞ் சொற்பிரயோகம் யாதோ அஃது அநர்த்தகம் என்னுஞ் சொற் குற்றமாம். அநர்த்தகம் - அர்த்தமில்லாதது. அந் - இன்மை. அர்த் தகம் - அர்த்தமுடையது. இது நன்னூலார் கூறிய 'நின்றுபயனின் மை' என்பதிலமையும்.

உ-ம். 'சீர்பூத்த சுந்தரநற் செம்மை பெறுமாண்டு' இங்கே அநர்த்தகமறிக.

அந்நியார்த்தம்.

ரு. கருதிய பொருள் பயக்கும் ஆற்றல் கெட்டதுவாகி வேறு ம்பொருள் பயப்பது அந்நியார்த்தம் என்னுஞ் சொற்குற்றமாகும். அந்நியார்த்தம் - வேறுபொருள்.

உ-ம். 'விமலன் காதனாயகி' இங்கே 'காதல்' என்பதற்கு மகன் எனப் பொருள்கொள்ளும்போது அஃது அந்நியார்த்தமாத லறிக.

அபுட்டார்த்தம்.

சு. ஒரு சிறிய சொல்லினாலே சொல்லத்தக்க ஒரு பொருளை விளக்குதற்குச் சொல்லப்படும் வெகுசொற்பிரயோகம் அபுட்டார்த் தம் என்னுஞ் சொற்குற்றமாம். அபுட்டார்த்தம் - பெலமில்லாப் பொருளுடையது. அ - இன்மை. புட்டம் - பெலம். உ-ம். 'துவா தசார்த்தார்த்தலோசனன்' இங்கே மூன்று என்னும் பொருளைப் பன்னிரண்டிற் பாதியிற்பாதி எனப்பலசொல்லாற் கூறியவாறுணர்க.

அசமர்த்தம்.

எ. கருதிய பொருளை விளக்குதற்குரிய பொருத்தமில்லாத சொற்பிரயோகம் அசமர்த்தம் என்னுஞ் சொற்குற்றமாம். அசமர் த்தம் - பொருத்தமான பொருளில்லாதது. அ - இன்மை. சமர்த் தம் - பொருத்தமான பொருள். பங்கயம் என்பது தாமரை என் னும் பொருட்கே நியதியான பொருத்தமுடையது; அதனைச் சேற்

றிற் பிறப்பது என்னுங் காரணங்கருதிக் குவளைக்கும் பிரயோகிப்பது அசமர்த்தமாகும். பங்கயம் - சேற்றிற் பிறப்பது.

அப்பிரதீதம்.

அ. அந்நிய சாஸ்திரங்கொண்டன்றி வேறெவ்வழியானும் அறியப்படாத சொற்பிரயோகம் அப்பிரதீதம் என்னுஞ்சொற்குற்றமாம். அப்பிரதீதம் - அறியப்படாதது. அ - அன்மை. பிரதீதம் - அறியப்பட்டது. 'ரூபஸ்கந்தம் போல' என்பது அப்பிரதீதம். ரூபஸ்கந்தமாவது யாதென்பது பௌத்த சாத்திரங்கொண்டே அறியத்தக்கது.

கிலிட்டம்.

கூ. பலசொற்கள் படித்துத் தூரம் போனபின் கருதிய பொருள் பயக்குஞ் சொற்பிரயோகம் கிலிட்டம் என்னுஞ் சொற்குற்றமாகும். கிலிட்டம் - கிலேசம் பயப்பது. "வீமன் பகைவன் மகன் பகை தாதை விளங்குமிடம்" இதனாற் குறிக்கப்பட்ட பொருள் ஆகாயம். வீமன் - பறவைக்கு நாயகனாகிய கருடன் எனவும், அவன் பகைவன் இந்திரன் எனவும், அவன் மகன் அருச்சுனன் எனவும், அவன் பகை கன்னன் எனவும், அவன் தாதை சூரியன் எனவும், அவன் விளங்குமிடம் ஆகாயம் எனவுங்கொள்க. இது கிலிட்டம்.

கூடார்த்தம்.

கo. கருதிய பொருட்குப் பிரசித்தமான வழக்கமில்லாத சொற்பிரயோகம் கூடார்த்தம் என்னும் சொற்குற்றமாகும். கூடார்த்தம் - மறைக்கப்பட்ட பொருள். இது தொல்காப்பியர் கூறிய 'என்ன வகையானு மனங்கோளின்மை.' என்பதில் அமையும். என்னவகையானு மனங்கோளின்மை - எவ்வாற்றானும் பொருளறிதற் கரிதாகச் செய்தல். உ-ம். 'அளவில் கோவினனடி பணிந்தெழ' இங்கே கண்ணென்னும் பொருளிலே 'கோ' என்னுஞ் சொற்பிரயோகம் கூடார்த்தம்.

நேயார்த்தம்.

கக. வேறொன்றிலுங் காணப்படாததாய்ப் பாடுவோனாற்றானே கற்பிக்கப்பட்ட பொருளுடைய சொற்பிரயோகம் நேயார்த்தமாகும்.

நேயார்த்தம் - அறியும் வரையும் போதரப்படும் பொருளுடையது. போதரல்—கொண்டுபோதல். சீவகசிந்தாமணியிலே காந்தருவதத்தையாரிலம்பகத்திலே (௩௭௬) 'வேலைநெய் பெய்ததிங்கள் விரவிய பெயரினாற்கு' என்பதிலே 'திங்கள் விரவிய பெயரினன்' என்பதற்குப் புத்திசேனன் எனப் பொருள்கொள்வது போல்வது நேயார்த்தமாகும். திங்கள் என்பதினின்று மதிக்கும், மதி என்பதினின்று புத்திக்கும் போதரப்படுகின்றது. இது சான்றோர் கவியாதலின் வழூவெனப்படமாட்டாது.

சந்திக்தம்.

௧௨. இதுவோ அதுவோ என்னும் ஐயத்திற்கிடனான பொருளுடைய சொற்பிரயோகம் சந்தித்தம் என்னுஞ் சொற்குற்றமாகும். சந்திக்தம் - சந்தேகத்தோடு கூடியது. இது மயங்கக்கூறல், மயங்கவைத்தல் என்பனவற்றில் அமையும். உ-ம். 'வெள்ளைவாரணனைக் கண்டு.' இங்கே வெள்ளைவாரணன் என்பது மாசாத்தனோ இந்திரனோ வென்று ஐயுறுதற்கிடனாகின்றது.

விபரீதம்.

௧௩. கருதிய பொருட்கு மறுதலைப் பொருளும் பயக்குஞ் சொற்பிரயோகம் விபரீதம் என்னுஞ் சொற்குற்றமாம். விபரீதம்-பிரதிகூலம். உ-ம். 'குய்யஞ்சொலாறுமுக.' இங்கே குய்யம் என்பது இரகசியம் என்னும் பொருள் கருதி வைக்கப்பட்டுளதாயினும் ஆக்கியோற்குப் பிரதிகூலமான வஞ்சகம் என்னும் பொருளும் பயக்கின்றது.

அப்பிரயோசகம்.

௧௪. கருதிய பொருட்கு உபயோகமாகாத அடைசொற்பிரயோகம் அப்பிரயோசகம் என்னுஞ் சொற்குற்றமாகும். அப்பிரயோசகம்—பிரயோசனமில்லாதது. உ-ம். 'மல்லலங்குழன் மங்கைபங்காளனை' 'குன்நேர வாறுமுக' இங்கே 'மல்லலம்' 'குன்நேர' என்பன அப்பிரயோசகமாதலறிக.

தேசியம்.

௧௫. வியுற்பத்தியில்லாதனவாயுள்ள வேற்றுத்தேசச் சொற்பிரயோகம் தேசியம் என்னுஞ் சொற்குற்றமாகும். தேசியம் - தே

சம்பந்தமான சொல். உ-ம் "முதலாங் கிளாசின் முறையே படித்துணர்தல்" இங்கே வகுப்பு என்பதற்குக் "கிளாசு" என்றதுதேசியம். இப்பொழுதை நூதன பஞ்சிகைகளுள்ளே பல பஞ்சிகைகள் தமிழ் மொழியோடு அங்கிலமொழி முதலிய வேற்றுத் தேசமொழிகளுஞ் சேர்த்தெழுதப்படுகின்றன. அவ்வாறெழுதப்படுபவைகள்எல்லாம் தேசியத்திற்கு உதாரணங்களாகும்.

கிராமியம்.

கசு. கேட்போர்க்கு அருவருப்பினை விளைவிக்கும் அசப்பியம், அமங்கலம், நிந்தை முதலிய பொருளமைந்தசொற்பிரயோகம் கிராமியம் என்னுஞ் சொற்குற்றமாகும். கிராமியம் - கிராமத்திற்பிறந்தது, இழிசனர்மொழி. அசப்பியம் - அவையல் கிளவி. அ - அன்மை. சப்பியம் - சபைக்குரியது. அமங்கலம் - மங்கலமில்லாதது உ-ம். "மிக்குறுபீதருரவம்" இதற்கு வேறு பொருளுளவாயினும் அசப்பியார்த்தமும் பயக்கின்றது.

இப்பதினறுமே அவர் கூறிய சொற்குற்றங்கள். இங்கே காட்டப்பட்ட உதாரணங்களுள்ளே சில இப்பொழுதைக் கவிகள் சிலவற்றிலிருந்து எடுக்கப்பட்டன. இக்குற்றங்களுஞ் செந்தமிழ் கற்போரால் அறிந்து விலக்கப்படுதற்குரியன.

வாக்கியக்குற்றம்.

க. சப்தஹீனம்.(அபசப்தம்)	கூ. பிந்நலிங்கம். (பால்வழு)
உ. கிரமப்பிரட்டம்.	க0. பிந்நவசநம். (எண்வழு)
ங. விசந்தி. (சந்திவழு)	கக. நியூநோபமை.
ச. புநருத்திமத்து (கூறியதுகூறல்)	கஉ. அதிகோபமை.
ரு. வியாகீர்ணம்.	கங. பக்கிநச்சந்தம் (சந்தவழு)
சூ. சங்கீர்ணம்.	கச. பக்கிநயதி. (யதிவழு)
எ. அபதம்.	கரு. அசரீரம்.
அ. கர்ப்பிதம்.	கசு. அரீதிமத்து.(இரீதியில்லாதது.

வாக்கியப்பொருட்குற்றம்.

க. அபார்த்தம். உ. வியர்த்தம்

ங. ஏகார்த்தம்.	கo. ஈனோபமம்.
ச. சமுசயம்.	கக. அதிகோபமம்.
ரு. அபக்கிரமம்.	கஉ. அசதிருக்ஷோபமம்.
சு. கிந்நம்.	கங. அப்பிரசித்தோபமம்.
எ. அதிமாத்திரம்.	கச. நிரலங்காரம்.
அ. பருடம்.	கரு. அச்சிலீலம்.
கூ. விரசம்.	கசு. விருத்தம்.

வாக்கியக்குற்றம், வாக்கியப்பொருட் குற்றம் என்னும் இந்த இருகூற்று முப்பத்திருவகைக் குற்றங்களும் இப்பொழுது தமிழ் மொழியிற் பெயர்த்து உதாரணங்களோடு விரித்து விளக்குதற்கு இயையாமையின்; பின்னர் விரித்தெழுதப்படுவனவாயின. செந்தமிழ் கற்போர் அபத்தங்களைத் திருத்திக் கொள்ளக்கடவர்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம். } இங்ஙனம்,
சோபகிருதுஹு தைமீ } அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

குமரன்றுணை.

நுண்பொருட்கோவை.

(முதற்றெகுதி. உஎகூ-ம் பக்கத் தொடர்ச்சி.)

இனி, யகாரம் அவ்வாறுயிரோடு முதலாமைக்குக் காரணமென்னையெனின், உயிர் மிடற்றுப்பிறந்தவளியானும், யகாரம் அண்ணஞ்சேர்ந்த மிடற்றுப்பிறந்த வளியானும் பிறக்குமியல்பினவாதலின், அங்காப்பு மாத்திரையானும் இதழ்குவிதலானும்பிறக்கும் அஆ உஊ ஒஓ ஔ என்னும் எழுயிரோடு முதலின் அண்ணஞ்சேர்ந்த மிடற்றினின்று காற்றுத்தடையின்றி வரும். அதனால் யகாரம் அவ்வேழுயிரோடு முதலுமியல்பிற்றாயிற்று. அண்பன் முதனாவிளிம்புறலாற் பிறக்கும் இஈ எஏ ஐ என்னும் ஐந்துயிரொடு முதலின் அக்காற்றுத் தடையுற மிடற்றுப்பிறந்த காற்றே வெளிப்படுமாத

லின், அவ்வுயிர்களும் அவற்றொடு கூடியவான யகாரவர்க்கத்து உயிர்மெய்யும் வேற்றுமை யுணரப்படாவாம். அதனால் அவ்வைந்துயிரொடு யகாரம் எக்காலத்தும்முதலாது; ஒகாரத்தோடு முதலுமியல்புடைத்தேனும் ‘ஆவோடல்லதுயகரமுதலாது’ எனஆசிரியர் கூறுமாற்றானே தமிழ்மொழிக்கண் யகர ஒகர முதலாகிய மொழிகளின்றென்பது பெறப்படலானும், தமிழில்வந்து வழங்கற்குரிய திசைச்சொல் வடசொல்லிரண்டினுள் திசைச் சொல்லினு மின்றென்பது ஆசிரியர் காலத்தின் பின்னுங் கடைச்சங்கத்தார் காலம்வரை வழங்காமையானறியப்படுமாதலானும், வடமொழியுள் ஒகரஉயிரே யில்லையாதலானும், அதனொடும் யகாரம் எக்காலத்தும்முதலுமாறில்லை. அவ்வாறெழுத்துமொழிந்த ஏனைய ஆறெழுத்தொடு முதலுமியல்புடைமையின் ஆசிரியர் காலத்து ஆகார உயிரொடு மாத்திரமுதலாய யகாரம் பிற்காலத்து அவற்றுள் ஏனைய உயிரொடும் முதலாயிற்றென்பது.

இனி வகரம் இதழ்குவிதலாற் பிறக்குமுயிரெழுத்தொடு முதலுமியல்பின்றாயினும் ஔகாரத்தின்கண் அங்காப்புமாத்திரையுடைய அகரமுதலாகி நிற்றலின் அதனொடுமாத்திரம் முதலுமாறுபோல, யகாரம் அண்பன் முதனாவிளிம்புறலாற் பிறக்கும் இஈ எஏ ஐ என்னும் ஐந்துயிருள் ஏனையவற்றொடு முதலாதாயினும் ஐகாரம்முதற்கண் அகரவோசையுடைமைபற்றி அதனொடு மாத்திரம் முதலல் வேண்டுமெனின், ஔகாரத்தின்கண் அகத்திசைக்கும் அகரமும் உகரமும் ஒன்றனுள் மற்றொன்று கலவாது காரியப்பட்டுப் பிறக்குமாதலின் அதனொடு வகரமுதலாதலமையும். இகர யகர மிறுதி விரவுமென ஆசிரியர் கூறுமாற்றான், அவ்வெழுத்துக்கள் அகரத்தொடு கலக்குமியல்பினவென்பது பெறப்படலின், ஐகாரத்தின்கண் அகரம், ஔகாரத்தின்கண் அகரம்போலத் தனித்து இயலாமையின் யகாரம் அதனொடும் முதலாதென்பது.

இனி, அவ், இவ், உவ், தெவ் என்னும் நான்கு வகரவீற்று மொழிகளேயன்றி, எவ், என்னு மொழியுமொன்றுளதாக இலக்கணக்கொத்துநூலார் உதாரணங் காட்டினமையின் “வகரக்கிளவி நான்மொழியீற்றது” என்னும் வரையறை யிகந்துபடுமெனின் ;—

அது பொருந்தாது, என்னை? அ இ உ என்பன சுட்டிடைச் சொல்லாயினும், 'எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே' என ஆசிரியர் கூறுதலின் அவை முதனிலையாகி வகரவிறுதிநிலை பெற்று அவ் இவ் உவ் எனப் பெயராதலமையும். எகரம் பெயர்வினை யிடையுரி என்னும் நான்கு சொல்லுள் ஒன்றாகாது எழுத்தாகவே நிற்றலின் அது முதனிலையாதலும் யாதானுமொரு விகுதி பெறுதலு மின்மையானென்பது.

இனி, எகர முதனிலையாகாவிடின் எவன் எவள் எவர் எது எவையென ஐம்பாற் பெயர்கள் வழங்கலென்னையோவெனின், ஆசிரியர் பெயர் வினை உரி என்பன அடியாகப் பிறந்தகாரணப் பெயரை யொழித்து இடைச்சொல்லடியாகப் பிறந்த காரணப் பெயரையும் முதனிலையின்மையிற் காரணம்பெறாத இடுபெயரையும் வரையறை செய்யுமிடத்து அவற்றுட் சில பெயர் திரிந்து வேறுபெயர் போன்று வழங்கினும் அவை வேறு சொல்லாகாவென அவற்றையுநீக்கி இயற்பெயர் மாத்திரையே கொண்டாராதலின் "அவ்வழி, அவனிவனு வனெனவரூஉம் பெயரும், அவளிவ ளுவளென வரூஉம் பெயரும், அவரிவ ருவரென வரூஉம் பெயரும், யான்யாம் நாமென வரூஉம் பெயரும், யாவன் யாவள் யாவரென்னு, மாவயின் மூன்றோ டப்பதினைந்தும், பாலறி வந்த உயர்திணைப் பெயரே" எனவும், "அதுவிது உதுவென வரூஉம் பெயரு, மவைமுதலாகிய வாய்தப்பெயரு, மவை யிவை யுவையென வரூஉம் பெயரு, மவைமுத லாகிய வகரப்பெயரும், யாதுயா யாவை யென்னும் பெயரு, மாவயின் மூன்றோ டப் பதினைந்தும், பாலறி வந்த வஃறிணைப் பெயரே" எனவும் ஒவ்வொரு பாற்கண்ணும் எல்லாவற்றையும் எஞ்சாதுணர்த்தும் இருதிணை ஐம்பாற் பெயர்களை வரையறுத்துப் பதினைந்துமென முற்றும்மையாற் கூறினமையின், அவைபோலவே இருதிணை ஐம்பாற் பொருளை எஞ்சாதுணர்த்துவனவாகலின், எவன் முதலியவும் அப்பதினைந்துமென்ற சொற்களின் வேறுகாவென்பது பெறப்படும்.

அதனானே, எவன் எவள் எவர் ஏவன் ஏவள் ஏவர் முதலியன யாவன் முதலிய சொற்களின் திரிபெனப்படுமேயன்றி எகர ஏகாரங்களை முதனிலையாகப் பெற்றுவந்தனவல்லவென்பது.

அற்றேல் பிறன் பிறள் முதலியன அப்பதினைந்து மென்றவற்றுள் அடங்காமையானும், யாவன் முதலியவற்றின்றிரிபே எவன் முதலியன என்றாற்போல அவற்றுளொன்றனது திரிபாமெனிற் பொருள்வேறுபாடுடைமையாற் பொருந்தாமையானும், அவற்றையுமெடுத்துக் கூறி வரையறை செய்யாமை யென்னையோவெனின், அவனென்பது உயர்திணை யாண்பாற் பொருளெல்லாவற்றையும் எஞ்சாதுணர்த்தும்: யான் என்பது உயர்திணைத் தன்மை யொருமையை எஞ்சாதுணர்த்தும்: அவ்வாறே ஏனையவும் எஞ்சாதுணர்த்தும்; அதுபோலப், பிறனென்பது உயர்திணை யாண்பாலை எஞ்சாதுணர்த்தலின்றி முன்னர்ச் சுட்டப்பட்ட ஆண்பாலையொழித்து மற்றைய ஆண்பாற் பொருளையே யுணர்த்தலானும், பிறள் முதலியவும் அத்தன்மையவே யாதலானும், அவன் முதலாகக்கூறிய அப்பதினைந்துமென்றவற்றோடு வேறுபாடுடைமையின் அவற்றோடு பிறன் முதலியன சேர்த்து எண்ணப்படாவாயின வென்பது. இனி ஆசிரியர் யானென்பதொன்றே கூறி நானென்பது கூறாது விடுத்தமையாற் பொருளொப்புடையவற்றுள் ஒன்றுகூறின், ஏனையவும்முய்த்துணர்வரெனக் கருதினாரெனல் பெறப்படலின், யான் நான் என்பன போலவே யாவன் முதலியவும் எவன் ஏவன் முதலியவும் பொருளொப்புடையவாதலான், எவன் ஏவன் முதலியவற்றை யாவன் முதலியவற்றின் திரிபெயரெனல் சாலாது; அவை இயற்பெயர்களேயெனின்;—அது பொருந்தாது, என்னை? யாம் நாம் என்பனவும், யா யாவை என்பனவும், அது அஃது முதலியவும், அவை அவ் முதலியவும், பொருளொப்புடையனவாதலின், அவற்றுள்ளும் ஒன்றுகூறிப் பிறிதொன்று கூறாது விடுத்தல் வேண்டும். அவ்வாறின்றி "யாம் நாமென வரூஉம் பெயரும்" எனவும், "யா யாவை என்னும் பெயரும்" எனவும், "அதுவிது வுதுவென வரூஉம் பெயரும், [அவை முதலாகிய வாய்தப்பெயரும்" எனவும், "அவையிவை யுவையென வரூஉம் பெயரும், அவை முதலாகிய வகரப் பெயரும்" எனவும் வேறு வேறு கூறலினென்பது.

இனி, நாம் என்பது முதலியன வேறு சொல்லெனக் கருதிக் கூறிய ஆசிரியர் நானென்பதும் வேறெனக் கருதிக் கூறாமை என்னை

யெனின்? யானென்பதே நானெனத் திரிந்து வழங்கலன்றி அது வேறு சொல்லாகாமையிற் கூறுராயினர். அதனை வேற்றுமை பெறுங்கால் நாம் என்பது நம் எனக் குறுகினாற்போல நானென்பது நன் எனக் குறுகாது, யானென்பது திரியுமாறுபோலவே என்னெனத் திரிந்து உருபேற்றலா னுணரப்படுமென்பது.

இனி, யாமென்பதன் றிரிபெயரோ நாமெனக்கொள்ளாது அதனை வேறு செல்லெனக் கொண்டதென்னையோவெனின் ;—வேற்றுமை பெறுங்கால் யாமென்பது எம்மெனவும் நாமென்பது நம்மெனவுந் திரிந்து இருவேறு முடிபுபெறலான் அவை யிருவேறு சொல்லாதலறியப்படுமென்பது.

இனி, அவன் அவள் அவர் முதலியன ஒரு முதனிலை யடியாகவே தோன்றினும் விகுதி வேறுபாட்டான் வேறு வேறு கூறப்பட்டாற்போல யாம் நாம் என்பன கள்ளொடுசிவணி, யாங்கள் நாங்கள் என வழங்கலான், அவற்றையும் வேறு கூறல் வேண்டுமெனின் அது பொருந்தாது: என்னை? யாம் நாம் என்பனவே தன்மைப் பன்மையை யுணர்த்தக் கள்ளென்பது அவன் முதலியவற்றுள் அன் முதலியனபோல விகுதிக்குரிய பொருளுணர்த்தாது நிற்றலின், அவை யாம் நாம் என்பவற்றின் றிரிபெனப்படுமன்றி வேறு சொல்லெனப் படாமையானென்பது.

இங்ஙனம்.

அ. சண்முகம் பிள்ளை.

(இன்னும் வரும்.)

உ

தருக்கசூத்திர முதற்பாடம்.

38. ஒவ்வொருமொழி அல்லது உறுப்பின் மாட்டுத்தங்கிய குற்றமற்றதாற்பரிய வறிவை நன்குணர்ந்து செல்லுதல் அவசியமாதலால், அக்குற்றமற்ற அறிவுயாது? 'அஃதில்லாமையாது? என்பவற்றை ஒரு சிறிது விளக்குவாம்.

39. தருக்கசூத்திரம்.

1. தெளிவுந் திருத்தமுந் தகுதியுந் திளைத்த
இயற்கை யறிவுட னியங்கிடு முணர்வே
புரைதீ ருணர்வெனப் புகலுவர் புலவர்.
2. மறைவு மலையுந் தகுதி யின்மையும்
அறிகுறி யோடங் கமர்ந்திடிற் புரையே.

தருக்கசூத்திரம்.

1. தெளிவெனப் படுவது பொருள்புலப் பாடே.
2. பொருட்குணம் முற்றப் புலப்படிற் றிருத்தம்.
3. திருந்திய திருத்தந் தகுதியாய்ச் செப்புவ.
4. புலன்வழி யாத்த மனத்திடைப் பொருந்தும்
உள்ளுணர் வியற்கை யுணர்வென விசைப்பர்.
5. முன்னறி பொருளை முன்னித் தேர்தலிற்
பின்னிடில் மறைவெனப் பேசுவர் பெரியோர்.
6. முன்னறி பொருளின் பகுதியைப் பண்பைப்
பிரித்துணர் வின்றிப் பிண்டமா யறிதல்
மலைவெனக் கூறுப மாண்புடை யோரே.
7. தாழ்ந்திடு திருத்தந் தகுதி யின்மையே.
8. இயற்கை யுணர்வை யிகந்த வதனை
அறிந்திடு முறையே அறிகுறி யாகும்.

40. மேற்கூறிய சூத்திரங்களுக்குரிய உதாரணங்கள் வருமாறு.

1. ஓர் இடையன் தனது மந்தையிலுள்ள ஒவ்வோர் ஆட்டையும் பிரித்தறிதல் தெளிவு. அவ்வாறு அறிதலிற் பின்னிடல் மறைவு.

2. ஓர் இராசயன சாஸ்திரி, தனது கையிற் கொடுத்த உலோகம், தங்கம் அல்லது பித்தளை யெனக்காண்பதன்றி அவைகளின் குணங்களையும் நன்றாய் விளக்கி யுரைப்பன். இது திருத்த முற்ற அறிவு. அவ்வாறு பிரித்துணருமாற்றலின்றிப் பிண்டமாய் அறிதல் மலைவு.

3. ஐந்தும் மூன்றும் எட்டுத்தான் என்று அறுதியிட்டுரைப்பது தகுதி யறிவு. அவ்வாறு தெரிந்தும் துணிந்துரையாதிருப்பது தகுதியின்மை பொருந்திய அறிவு.

4. ஒரு சதுரம் அல்லது அறுகோணத்தை அவதானித்து அறியும் அறிவு இயற்கையறிவு. ஒளி ஒரு நிமிடத்திற் செல்லுந் தூரத்தை மனத்திலுற் கருதி யறிதல் கூடாதாதலால், அத்தூரத்தைக்காட்டக் கூடிய இலக்கங்களால் (அறிகுறி எழுத்துக்களால்) அறியுமுறையே அறிகுறியாகும். மனவாசகங் கடந்த கடவுளை ஒருகுறியின் மாட்டுப் பொருத்தி, அஃது அவனே யென்று எண்ணி வழிபடலு மஃதாம்.

41. தருக்க உறுப்பினை யறிய வேண்டியதற்கு அடியிற் குறிக்கப்படும் முறை வெகு உபகாரமாயிருக்கும். அஃது வருமாறு;—

1. அது (உறுப்பு) தனித்து எழுவாய் அல்லது பயனிலையாய் நிற்குமாற்றலுடையதா ? அல்லது அவைகளோடு சேர்ந்து நடைபெறுவதா?

2. அது ஒற்றை வார்த்தையுள்ள பதமா அல்லது பலவார்த்தையுள்ள பதமா ?

3. அது தனிப்பதமா ? அல்லது பொதுப்பதமா?

4. அது திரட்டனிப்பதமா? அல்லது திரட்பொதுப்பதமா?

5. அது குணிப்பதமா ? அல்லது குணப்பதமா ?

6. அஃது உடன்பாட்டுப்பதமா, எதிர்மறைப்பதமா? அல்லது ஒருவுபதமா ?

7. அஃது இணைவுருப்பதமா? அல்லது இணைப்பதமா?

8. அது பொருள் விரியுள்ளதா? அல்லது பொருள்விரியில்லாத்தா?

9. அது சிலேடைப்பதமா? அல்லது ஐயப்பதமா?

உதாரணம்.

1. மனிதன்—ஓர் உறுப்பாய் நிற்கும் ஆற்றலுடையது; ஒற்றைவார்த்தையுறுப்பு; பொதுப்பதம்; குணப்பதம்; உடன்பாட்டுப்பதம்; இணைவுருப்பதம்; பொருள்குணவிரியுள்ளபதம்.

2. நீர்வாழுஞ் ஜந்துக்கள்—உறுப்புக்குரிய பதம்: பலவார்த்தையுள்ள பதம்: பொதுசப்தம்: குணிப்பதம்: உடன்பாட்டுப்பதம்: இணைவுருப்பதம்: பொருள்குணவிரியுள்ளபதம்.

3. அளவு—உறுப்புக்குரிய பதம், ஒற்றவார்த்தையுறுப்பு பொதுப்பதம், உடன்பாட்டுப்பதம், பொருள்குணவிரிப்பதம், குணப்பதம்.

இவ்வாறே மற்றவைகளையும் உய்த்துணர்ந்து விளக்கியறிந்து கொள்க.

இனி இவ்வுறுப்புக்களை அங்கமாய்க்கொண்டு நிகழும் "மேற்கோளதன்வகை விளம்புவ மினிதே." (தருக்கசூத்திரம்.)

உறுப்பியல் முற்றிற்று.

S. பால்வண்ண முதலியார்,
திருநேல்வேலி.

(இன்னும் வரும்.)

ஓம்:

திருச்சிற்றம்பலம்.

உள்ளது.

(௬௱௯-ம்பக்கத்தொடர்ச்சி.)

(உ௪) ஸ்ரூமெஹவவஸ்ஙூஹாவெ்யதி |

என்னும் பிருகதாரணியமந்திரம் "(சீவான்மா சிவப்பிரமபாவனையினால்) பிரமசாமியமாகித் (தேகபதனகாலத்தில்) அர்ச்சிராதிமா

ர்க்கமாய்ப் பிரமலோகத்தைப்போய் அடைகின்றான்" எனப்பொருள்படும். 'அப்யேதி' என்னும் பதம் இடப்பெயர்ச்சியைக் காட்டுதலானும், அடுத்த மந்திரங்களில் அர்ச்சிராதி வாயிலாக அடையப்பெறும் சுவர்க்கலோகப் பிராப்தி (பிரமலோகப்பிராப்தி) கூறப்படலானும், போக்கு மீட்சியின்றி இங்கே பிரமமாய் இலயமாகின்றான் என்னும் கூற்று ஓர்காலும் அடாது.

(உரு) யோ ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி |

என்னும் முண்டகசுருதிக்கும் "பிரமத்தைச் (சிவபாவனையால் அறிபவன் சாமியமுறுகின்றான்" என்று பொருள்கோடற்பாற்று.

(உகூ) யதா சர்மவதாகாஶம் வேஷ்டயிஷ்யந்தி மாநவா: | ததா ஶிவமவிஜ்ஞாய து:கஸ்யாந்தோ பவிஷ்யதி ||

"எஞ்ஞான்று ஆகாயத்தை மனிதர் தோலாகத் தரித்துக்கொள்பரோ, அஞ்ஞான்று சிவத்தை அறியாது (துக்கத்துக்குக் காரணமாகிய) பிறவியின் இறுதியும் தலைக்கூடும்" எனச் சுவேதாசுவதரமும் எதிர்மறை முகத்தாற் கூறுதலான், சிவத்தை அறிந்தவனே முக்தியடைவன் என்பது பொருள். பரமான்மாவாகிய சிவனுக்குரிய (சர்வஞ்ஞதை முதலிய) "அபகதபாப்மாதி குணங்கள் ஆன்மாவுக்குரிய குணமாம்படி, கருடோகம் பாவனைபோலச் சிவோகம் பாவனை ஒருவன் செய்யப்பெறுமாயின், அக்கருடன் மாந்திரிகனுக்கு வேறுதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி விடத்தை நீக்கித் தெளிவுசெய்யுமாறுபோல, சிவபிரானுரும் இவனின் (ஆன்மாவின்) வேறுதலின்றி அத்துவிதமாய்த் தோன்றி மலங்களை நீக்கிச் சுத்தனுகச் செய்வர்" என்னும் பொருளே சாந்தோக்கியத்து ஆறுவது பிரபாடகத்துச் சத்வித்தை உரைத்தவிடத்துக் கூறிய 'தத்துவமசி' 'சோகமஸ்மி' பிருகதாரணியத்து 'அயமாத்துமா பிரம்ம' 'அகம் பிரும்மாஸ்மி' என்னும் நான்கு மகாவாக்கியங்களுக்கும் பொருளாகக்கொள்க. தத் (தத்) ச: (ஸ:), பிரம்ம (ப்ரஹ்ம) என்பவை பரப்பிரம சிவனைச் சுட்டியவாம் எனவும், துவம் (த்வம்), அகம் (அஹம்), அயமாத்துமா (அயமாத்மா) என்பன சீவான்மாவைச் சுட்டியவாம் எனவும் கொள்ளப்படும். இங்ஙனம் ஆன்மாப் பிரமகுணசாமியம் அடைத

லான் எய்தும் பயன் பூமா (ஸ்ரீமா) என்னும் நிரதிசயமாகிய முடி விறந்த வின்பநிலைப்பேறும் என்க. இங்ஙனம் அடைந்த பின்னர் அந்த முக்தன் தேகவியோக காலத்து நடுநாடிவாயிலாக, ஒளிமார்க்கம் எனப்படும் அர்ச்சிராதிகதி நெறியினல் (சோமலோகமாகிய) பிரமலோகத்தை அடைந்து, சிவசாரூப்யமுற்றுப் பிரமானந்தத்தோடு மற்றைய அளவிறந்த திவ்யபோகங்கள் துய்ப்போனுவன்.

(உஎ) ஸொஶ்நுதெ ஸவா௯ா நாமாந்ஸஹ ப்ரஹ்மணாவிபஶ்சிதா |

“சர்வஞ்ஞதையுடைய பிரமானந்த போகத்தோடு அவன் (முக்தன்) வேட்ட போகமனைத்தும் நுகர்கின்றான்” எனத் தைத்திரீயமும்,

(உஅ) ஸ ஏஷ ஸம்ப்ரஸாதோ$ஸ்மாச்ச்ரீராத் ஸமுத்தாய பரம் ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே ஸ உத்தம: புருஷ: ஸ தத்ர பர்யேதி ஜக்ஷந் க்ரீடந்ரமமாண: ஸ்த்ரீபி
வாயாநைவா ஜ்ஞாதிபிவா...... |

“இந்தச் சரீரத்தினின்றும் புறப்படுகின்ற அந்தச் சம்பிரசாதன் (எனப்படும் சீவன் சிவ) பரஞ்சோதிரூபத்தை அடைந்து, அதனல் தன் இயற்கையாய அபகதபாப்மாதி குணங்கள் ஆவிர்ப்பவிக்கப் பெறுகின்றான்; இந்த உத்தம புருஷன் (முக்தன்) அங்கே (சோமலோகத்திலே) மாதரோடேனும், யானங்களோடேனும், ஞாதிகளோடேனும், நகை யாடியும், ஆடலயர்ந்தும், மகிழ்வடைந்தும் சஞ்சரிப்பானுவன்” எனச் சாந்தோக்கியமும் கூறிய வாற்றான் உணர்க. இங்ஙனம் ஆனந்தமுடைமையாலன்றே சிவபிரானர் தம்மோடு பரமசாமிய முற்று நின்றோர்க்கு,

(உ௯) ஏஷ ஹ்யேவாநந்தயாதி |

“ஆனந்தத்தை இவரே விளக்கின்றார்” என்றும்,

(௩௰) ஆநந்தீ பவதி |

“இவன் (ஆன்மா) பிரமத்தினின்று ஆனந்தத்தை அடைந்து ஆனந்த மாகின்றான்” என்றும் தைத்திரீயமும் கூறிற்று. இச்சுருதிப் பொருளுணர்ந்த மணிவாசக சுவாமிகள் “தந்த துன்றன்னைக் கொண்ட தென்றன்னைச் சங்கரா வார்கொலோ சதுர ரந்தமொன்றி

ல்லா வானந்தம் பெற்றேன்'' எனத் திருவாய்மலர்ந்தருளினர். (௨௩-ம் இலக்க) முண்ட கோபநிடத சாமியசுருதிக்கு உபப்பிருங் கணம்

(௯௧) முக்தஶ்ஶிவஸமோ பவேத் |

"முக்தன் (சர்வஞ்ஞதாதி குணங்களை அடைந்து) சிவசமமா கின்றான்'' என்று கூறிற்று. சிவகுணசாமியஞ் சிவாகமங்களிலே மிகப்பிரசித்தம்,

(௯௨) ஸாம்யாச் சிவாநுபூதிமாந் |

"முக்தன் சாமியமுறுதலாற் சிவானுபவ மொன்றினுக்கே உரியன்'' என்றும்,

(௯௩) ப்ரகாஶஶ்ச கர்மண்யப்யாஸாத் |

"சிவோகம்பாவனைத் தொழிலின் இடையறாத பாவனைப்பியாசத்தினல் (சிவப்) பிரகாசம் ஆன்மாவுக்கு எய்தும்'' என்றும் உத்தர மீமாஞ்சையாகிய வேதாந்த சூத்திரத்தில் வியாசமுனிவர் சூத்திரித்தருளினர். சிவசாமிய முற இடையறாது சிவோகம் பாவனைசெய்து முற்றினமையாலன்றே வாமதேவமுனிவர்,

(௯௪) அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச |

"நான் மனுவாயினேன், சூரியனாயினேன்'' என உணர்ந்துரைத்த உண்மையை நீலகண்டசிவாசாரியர் பிருகதாரணியத்தி னின்று உதகரித்து, உலகத்தில் மாந்திரிகர் கருடபாவனையால் கருடனது அசாதாரண குணத்தை அடைகின்றார் எனவும், அங்ஙனம் பிரமத்தியானத்தில் அப்பிரமத்தின் அசாதாரண குணம் ஆன்மாவுக்கு எய்துகின்றதெனவும், இங்ஙனம் பிரமபாவனை செய்தமையால் அகஸ்தியர் சமுத்திரத்தைக் கவளீகரிக்க வல்லராயினர் எனவும், கிருஷ்ணர் அருச்சுனர்க்கு விசுவரூபந் தரிசிப்பித்தார் எனவும் தமது பாடியத்துரைத்தனர். இங்ஙனம் வேதாந்த சூத்திரப் பொருளையும், நீலகண்டசிவாசாரியர் அருளிய பொருளையும் மெய்ப்பொருள் என உணர்ந்தமையாலன்றே சிவஞான போதச் சிற்றுரையில்

"வாமதேவர் முனிவன் முதலாயினோர் யானே உலகெலாம் "ஆயினேன்" என்றும், "அருச்சுனர்க்குக் கீதை நூல் செவியறிவுறுத்த கண்ணன் யானே உலகெலாமாயினேன் என்ற தூஉம், முதல்வனது விசுவரூபத்தைத் தான் காட்டிய தூஉமாம்" என்று சிவஞான சுவாமிகளும் வரைந்தார்கள்.

(௩௫) ஶிவோஹம் பா4வநாஜ்ஞாநம் வேதா3ந்தம் ஸோஹம் பா4விதம் | ஸர்வபாஶவிநிர்முக்தோ க3ருட3த்4யாநேந விஷக்ஷய: | ஶிவாத்ம பா4வத்4யாநேந யாதி பரமாம் க3திம் ||

"சிவோகம் சோகம் என்பன முறையே சித்தாந்த வேதாந்த மகாவாக்கியங்களாம்" என்றும், "கருட தியானத்தினால் விஷம் எங்ஙனம் க்ஷயமாகின்றதோ, அங்ஙனம் ஆன்மாச் சிவத்தியானத்தினால் சர்வபாசத்தினின்றும் நீங்கி மேலாகிய கதியை அடைகின்றான்" என்றும் வாதுளாகமம் கூறிற்று. இந்தச் சிவசாமிய சிவோகம் பாவனையைத் திருநாவுக்கரசு சுவாமிகள் "முறுகவாங்கிக் கடையமுன் னிற்குமே" எனவும், சுந்தரமூர்த்திநாயனர் "உன்னைப்போ லென்னைப்பாவிக்கமாட்டேன்" எனவும், மாணிக்கவாசக சுவாமிகள் "ஆனந்தவார்கழலே யொப்பாக வொப்புவித்த வுள்ளத்தாருள்ளிருக்கும்" எனவும் திருவாய்மலர்ந்தருளினர்கள். இங்ஙனம் ஞானயோகத்தில் வேதாந்த மகாவாக்கியமும் சித்தாந்த மகாவாக்கியமும் சாமியப் பொருள்கொண்டமையாலன்றோ தாயுமானசுவாமிகள் "வேதாந்தசித்தாந்த சமரச நன்னிலை" என அருளினர்.

சர்வசாரமுதலிய அபரசுருதிகளிற் காணப்படும் அநிர்வசநீயமாகிய மாயாவியவகாரம், கானற்சலம், வந்தியாபுத்திரன், ஸ்தாணுபுருஷன், அத்தியாரோபம், அத்தியாசம், சிவேசுரர்மித்தை, விட்டலக்கணை, விடாதலக்கணை, விட்டும்விடாதலக்கணை, கடாகாச மடாகாச மகாகாச வியவகாரமுதலாயின வியாசருளிய வேதாந்த சூத்திரத்துக்கு மூலமாய் நின்ற ஈசகேநாதி பரசுருதிகளிற்கூறப்படாது, சைவத்துக்கு இன்றியமையாத அத்துவா, பராசத்தி, சர்வஞ்ஞாதிகுணம், ஆன்மா பரமசாமியம் அடைதல், பிரமலோக (சிவலோகப்) பிராப்தி, பஞ்சகிருத்திய வியவகாரம், சிவபிரானுர் திருவருட்பிரசா

தம், தகராகாசம் (சிற்றம்பலம்), பதிபசுக்களின் நித்தியத்துவம், ஆன்மா சிவத்தை அறிந்து பாசத்தினின்று வீடுறன்முதலிய வியவகாரம் கேட்கப்படலான் அந்தப் பரசுருதி உபநிடதங்களும், அச்சுருதிகளின் பொருளை நிச்சயித்துரைக்கும் உத்தரமீமாஞ்சையாகிய வேதாந்தசூத்திரமும் சைவத்திறத்தனவேயாம் என்க. "கடசலப் பிரதிவிம்ப ஆகாசம் மேகசலப் பிரதிவிம்ப ஆகாசம் என்பன அநிர்வசநீயமாய்ப்போக, கடாகாச மகாகாசமாகிய ஒரே ஆகாயம் நிலைத்தவாறு போல, தத்பத ஈசுரனும் துவம்பத சீவனும் அநிர்வசநீயமாய்ப்போக, கூடஸ்தப்பிரமமாகிய சைதன்னியம் ஒன்றே நிலைத்ததென்றும், அங்ஙனம் அகம் பிரம்மாஸ்மி முதலிய மற்றைமகாவாக்கியங்களுக்கும் பொருள் கோடல்வேண்டும்" என்றும் அபரசுருதியுடையார் கூறுப. பரப்பிரகிருதி, சூக்குமப்பிரகிருதி, மூலப்பிரகிருதி, என்னும் முத்திறப் பிரகிருதிகளுட் கீழ்நிலைத்தாகிய மூலப்பிரகிருதிப் பாற்பட்டது பரசுருதிப்பிரமமாம் என்பது வராகோபநிடத முதலிய அபரசுருதிகளானும், சூதகீதை, பிரமகீதை முதலியனவைகளானும் அறியப்படுதலின், இங்ஙனம் கூடஸ்தப் பிரம ஐக்கிய சைதன்னியமாகிய சீவப்பிரமம் ஆன்மதத்துவத்தில் முற்றிநின்றமையான், ஆன்மதத்துவ வித்தியாதத்துவ சிவதத்துவ முத்திறத்து முப்பத்தாறு தத்துவங்கடந்துநின்ற அருட்பராசத்தி விசிட்டப்பிரமம் (சாந்தோக்கியத்துத்) தத்துவமசி மகாவாக்கியத்தின் தத்பதப் பொருளாய் நிற்க, அபரசுருதியுடையார் கூடஸ்தப்பிரமமானது துவம்பதப் பொருளாகிய (உங-ம் நக-ம்) இலக்கங்களிற் கண்டவாறு சிவோகம்பாவனை செய்து, அத் தத் பதப்பொருளாகிய சிவத்தோடு சாமியமுற்றுச் சிவானந்தமடைதற்கு இயைந்ததாகும். அபரசுருதியுடையார் பிரமத்தின் ஆனந்தத்தைக் குணமாய்க்கொள்ளாது சொரூபமாய்க் கொண்டமையாலன்றோ பாமான்மாவானது சச்சிதானந்தம் என்று கூறப்படுமிடந்தோறும் "நாசரகிதமாயிருத்தலிற் சத் என்றும், சடத்துக்கு விலக்ஷணமாய் எல்லோர் பிரியத்துக்கும் விஷயமாயிருத்தலான் ஆனந்தம்" என்றும் பொருள் கூறுவாராயினர். பரசுருதிகளினும் உபப்பிருங்கணங்களினும் சச்சிதானந்த முதலியன பரப்பிரமத்துக்குச் சொரூபமும் குணமுமாகக் கூறப்படலான், அபரசுருதிக்கியையக் கூறும் பொருள் ஈண்டைக்கேலாதாம் என மறுக்கப்படும். அபர

சுருதிக்காரர் அத்துவிதத்துக்குக் கூறும் பொருள் யுக்தமில்லை என்றும், பரசுருதிகளினும் சிவாகமங்களினும் உரைத்த பொருளே பொருத்தமுடைத்தென்றும் உணர்ந்து, அரதத்தாசாரியசுவாமிகள்,

(ரூசு) ஸ்வாமிந் ஶ்ருத்யந்தஸித்தாந்த...

[illegible]

[illegible] ॥

"சுவாமீ! வேதமுடிபுணர்ந்தோரால் உம்முடைய உபாசனையிலே அத்வைதம் கூறப்பட்டது. அதற்கு (ஆன்மா பிரமம் என்னும் இரண்டின் ஐக்கியத்தைக் கூடஸ்தப்பிரம ஐக்கியம் போல) நிருபசரிதவைக்கியமாகக் கூறல் கூடாது; கருடனும் மாந்திரிகனும் தம்முள் வேறுதல் வெளிப்படை; (அபரசுருதியினர்க்கு) அந்த ஆன்மா கருடனோடு தாதான்மிய பாவனையுறல் பொய்யாயினும், கருடபாவனை விஷத்தை(நீக்காதிருக்கவில்லை)நீக்குகின்றது" என்று சதுர்வேததாற்பரியசங்கிரகத்திற் கூறியிருக்கின்றார். கருடபாவனை விஷத்தை நீக்குமாறுபோல, சிவோகம்பாவனை பாசத்தை க்ஷயஞ் செய்கின்றது. ஆதலாற் பாவனை மெய்யே.

(இன்னும் வரும்)

ஸ்ரீகாசிவாசி—செந்திநாதையர்.

ஸ்ரீ:

பெரியாழ்வார் காலநிருணயம்.

நம் நாட்டு அறிஞர்களால் ஆராய்ச்சி செய்யப்பட்டவளவில், ஆழ்வார் காலங்களை ஒருதலையாக வரையறுத்தற்கு, அவர்கள் அருளிச்செயல்களும் பழைய சரித்திரநூல்கள் சிலவுமேயன்றி வேறு சாஸனங்கள் இப்போது அகப்பட்டிருப்பனவாகக் காணப்படவில்லை. கர்ண பரம்பரைச் செய்திகளைக்கொண்டு எழுதப்பட்ட சில நூல்களில் ஆழ்வார்கட்குப் பின் வருமாறு காலநிர்ணயஞ் செய்யப்பட்டுள்ளன.

	ஆழ்வார்	யுகம்	வருஷம்	கிறிஸ்தவாப்தம்.	
1	பொய்கையார்	துவாபரம்	861902	கி. மு.	4203
2	பூதத்தார்	ஷை	ஷை	ஷை	,,
3	பேயார்	ஷை	ஷை	ஷை	,,
4	திருமழிசையார்	ஷை	ஷை	ஷை	,,
5	நம்மாழ்வார்	கலியுகம் பிறந்த	43-ம் நாள்	ஷை	3102
6	மதுரகவியார்	ஷை	,,	,,	,,
7	குலசேகரர்	ஷை	28	ஷை	3075
8	பெரியாழ்வார்	ஷை	47	ஷை	3056
9	ஆண்டாள்	ஷை	97	ஷை	3005
10	தொண்டரடிப்பொடி	ஷை	289	ஷை	2814
11	திருபாணாழ்வார்	ஷை	342	ஷை	2760
12	திருமங்கையார்	ஷை	397	ஷை	2706

இங்கே காட்டிய காலவளவுகள், நவீனமுறையிற் சரிதவாராய்ச்சி செய்வார்க்கு, பின்னோர் அதிகமாகப் புனைந்த கற்பனைகளாகத் தோன்றுகின்றன. அவர்கள் அவ்வாறு கருதுவதை முற்றும் போலியென்று நாம் ஆராயாதே தள்ளுதல் அழகன்று. வைணவாசிரியருட் டலைவரான ஸ்ரீமந்-நாதமுனிகளால் அறியப்பட்டுப் பின்னர்க் குருபரம்பரையில்வந்த ஆழ்வார்கள் காலமுதலிய வரலாறு, பிற்கால

த்துச் சிலபல மாறுதல்களுக்கு உள்ளாகியிருத்தலுங் கூடும். ஆயின், அதனுண்மைநிலையை நாம் ஆராய்ந்துதெளிதல்வேண்டாவோ? ஒருகால் நமதாராய்ச்சியினும் அக்காலங்கள் ஆழ்வார்கட்கு ஏற்றனவல்ல வென்று முடியுமாயின், அதனால் அப்பெரியார் பெருமைக்கு வந்த இழுக்கென்னை? ஐயுறுதற்கிடனாகிய மிகப்பழைய காலத்தே ஆழ்வார்களை நிறுத்துவதால், அவர்கள் இயற்கையினடைந்துள்ள பெருமையினும் அதிகமாகக் காணப்படுவதி யாது? காலப்பழமையொன்றே கருதி ஆழ்வார்கள் வணங்கப்படுபவரல்லரே. அன்றியும், ஆழ்வார்கள் வரலாறு தெரிக்கும் சில பழைய நூல்களில் மேற்கண்டவாறு காலங்குறிக்கப்பட்டிருத்தல் காணவில்லை. இவற்றால் அக்காலவளவுகளையே நாம் உறுதியாகக்கொண்டு நமதாராய்ச்சியை அதன்கட் செலுத்தாதிருத்தல் நங்கடமையென்று கொள்வது நியாயமன்று.

இனி, ஷ காலவரையறைகள், அதிகப்பட்டிருப்பனவாகத் தோன்றினும், அவற்றால் நாமறியக்கிடக்கும் விஷயங்களும் உள்ளன. மேலே காட்டிய குறிப்பை உற்றுநோக்குமிடத்து, முன்னின்ற பொய்கையார் முதலிய நால்வரும், இடைநின்ற நம்மாழ்வார் முதலிய ஐவரும் பின்னின்ற தொண்டரடிப்பொடிகள் முதலிய மூவரும் தனித்தனி மூவேறு காலங்களில் நெருங்கி வசித்தவர்களென்பது தெரியவரும். இவர்கள் அவ்வாறு வசித்தமைக்கு ஆதரவாக, பழைய நூல்களிற் சரித்திரங்கள் பெரும்பான்மை உள்ளன. இவற்றாற் பின்வந்த சில குருபரம்பரைகளிலேயே, காலங்கள் அங்ஙனம் அதிகமாக்கப்பட்டனவென்றும், ஆயினும், அவை அவதாரக் கிரமத்துக்கும், சரித்திரவழக்கிற்கும் ஏற்பவே ஏற்றத்தாழ்வுபெற்றனவென்றும் நாம் ஊகிக்கலாம். ஆழ்வார் அவதாரக்கிரமம் முன் குறிப்பிற்கண்ட முறையேயென்பது எல்லா நூல்கட்கும் ஒத்தது. இனி, அம்முத்திறக்காலங்களுள்ளும் நாம் எடுத்துக் கொண்டபெரியார் எக்காலத்தினரென ஆராய்வாம்.

வைணவசமயாசாரியருள் தலைவராய ஸ்ரீமந்-நாதமுனிகள் நாலாயிரப்பிரபந்தத்தை உலகிற்கு வெளியிட்டவரென்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்ததாதலாலும், விஷ்ணுசித்தரைப்பற்றிய "குருமுகமந

தீத்ய:” என்னுந் தனியன் அம்முனிவர் அருளிச்செய்ததாக வழங்கலானும்; பெரியாழ்வார் நாதமுனிகட்கு முற்பட்டவரொன்பது தேற்றமாகும். ஸ்ரீ ஆளவந்தார் கி. பி. 917-ல் அவதரித்தவரொன்றும், அவ்வாளவந்தார்க்குப் பிதாமகராகிய நாதமுனிகள் காலம் அதற்கும் முன்னராதல்வேண்டுமென்றும், மண்டயம் ஸ்ரீ உப. வெ. அனந்தான்பிள்ளை-திருமலாசாரியரவர்கள் ‘ஸ்ரீரங்கக்குறிப்பு’ என்னும் நூலில் எழுதியுள்ளார்கள். இவ்வாறு எழுதியது பெரிதும் பொருத்தமுடைத்தென்பது, ஆளவந்தார் முதலிய ஆசாரியர்க்கு முன்னூல்களிற் சொல்லப்பட்ட காலங்களை அவர்கள் தந்நூலிற் றொகுத்துக் காட்டிய ‘அட்டவணை’ யை நோக்குவார்க்கு நன்கு விளங்கும். அன்றியும், கம்பர்காலம் ‘எண்ணிய சகாத்தமெண்ணூற்றேழின்மேல்’ (கி. பி. 885) எனவும், நாதமுனிகள் சந்நிதியில் கம்பராமாயணம் அரங்கேறியதெனவும் பெருவழக்குண்மையால் அம்முனிவர்காலமாக ஆசாரியரவர்கள் குறிப்பிட்டது ஏற்புடைத்தேயாம். ‘எண்ணிய சகாத்தமுந்நூற்றேழின்மேல்’ எனச்சிலர் எழுதிய பாடம் கம்பரை அதிகப்பழையவராக்குதலால் அது கொள்ளத்தக்கதன்று.

இனி, ஒட்டக்கூத்தராற் குலோத்துங்கக்கோவை முதலிய பாடப்பெற்றவன் சக-985-ல் (கி. பி. 1063) பட்டமெய்திய குலோத்துங்க சோழனென்றுகொண்டு, அக்கூத்தர் காலத்தவராக வழங்குங் கம்பரைக் கி. பி. 11-ம்நூற்றாண்டின் முற்பகுதியினராகத்துணிவார் பலராவர். ஆயின் அக்கொள்கை கம்பர்காலம் சக. 807 எனவும், அவர் நாதமுனிகளுடனிருந்தவரெனவும் வழங்குஞ் செய்திகளோடு மாறுபடுகின்றது. இம்மாறுபாடுபற்றி அச்செய்திகள் பிற்காலத்துச் சிருட்டிக்கப்பட்டனவென்று நாம் கருதற்கு நியாயங்கிடையா. இனி, ஸ்ரீமத்-வி. கனகசபைப்பிள்ளையவர்கள், ஒட்டக்கூத்தராற் பாடல்பெற்றவன் விஜயாலயன்பேரனும், ஆதித்தன் மகனுமானவனெனவும், அவனுக்கு குமாரகுலோத்துங்கனென்று* பெயரெனவும், அவன்காலம் கி. பி. 8-9-ம்நூற்றாண்டுகளின் ஈறு முதலுமெனவும் “செந்தமிழ்” முதற்றொகுதி 3-ஆம்பகுதியில் ஆதித்த சோழன் சரித்திரத்துக் குறித்துள்ளார்கள். ஆனால் அவர்கள் அங்

* Vide Mr. V. Kanakasabhai Pillay's contribution, p. 115, Vol. VIII, Madras Review.

னனங் கருதியதற்குற்ற காரணங்களை அதனுட்காட்டவில்லை. ஆயினும், பிள்ளையவர்கள் அவ்வாறு கூறுவார்களாயின், அவற்றிற்குப் பலகாரணங்கள் இருத்தல்கூடுமென்றே நாம் கருதல் தகும். அக்காரணங்கள் எத்தகையவாயினும், ஒட்டக்கூத்தர் பாடல்பெற்றவனாகப் பிள்ளையவர்கள் கருதிய குலோத்துங்கன் காலம், அக்கூத்தர் காலத்தவராகிய கம்பர்க்கு வழங்கும் சகாப்தத்தோடும், நாதமுனிகள் காலத்தோடும் மாறுபடாது பெரிதும் ஒன்றுதலால் அதுவே பொருத்தமுடைத்தாகத் தெரிகின்றது. அன்றியும், முற்காலத்து நூல்களையேஎடுத்தாண்ட புறத்திரட்டென்னுநூலிற் கம்பராமாயணச்செய்யுட்கள் தொகுக்கப்பட்டிருத்தலும், கி. பி. 11-ம் நூற்றாண்டிலிருந்தவரும் வீரசோழியவுரையாசிரியருமாகிய பெருந்தேவனார் 'கம்பனாரிடைப்பெருமையுளது'* எனவும், நச்சினார்க்கினியர் 'கம்பன்'† எனவும் உதாரணங்கள் காட்டியமையும் கம்பர்க்குள்ள பழமையைக் குறிப்பிக்கின்றன. கி. பி. 11-ம் நூற்றாண்டே கம்பர்காலமாயின், அக்காலத்துச் சிறப்புற்றுவிளங்கிய பெரியபுராணம், கலிங்கத்துப்பரணிமுதலியவற்றைப் புறத்திரட்டுடையார்எடுத்தாளாதிராராதலின், அக்காலத்துப்புலவரினுங் கம்பரும் புறத்திரட்டாரும் முற்பட்டவரென்பதுதேற்றமாம். இவற்றால்நாதமுனிகள் கம்பரிருந்தது, 9-10ம் நூற்றாண்டுகளின் இடைக்காலமென்பது தெள்ளிது. ஆகவே அக்காலத்துக்கு முற்பட்டதொன்றே பெரியாழ்வார் காலமென்பது பெறப்பட்டது. இனி, அப்பெரியார் காலநிர்ணயத்துக்கு எதனை முன்னெல்லையாக்கலாமென்று பார்ப்போம்.

நாலாயிரப் பிரபந்தத்திற் பெரியாழ்வார் அருளிச்செய்தது முற்பகுதியாகிய திருமொழி என்பது. இப்பகுதி பெரும்பான்மை விருத்தப்பாவான் அமைந்தவை. அவ்வாழ்வார் திருமகளாராகிய ஆண்டாள் அருளிச்செயலும் அவ்வாறு அப்பாவான் அமைந்தவையே. விருத்தப்பாவாற் செய்யுணிகழ்ந்தகாலம், சங்ககாலத்துக்குப் பிற்பட்டதென்பது, அச்சங்ககாலத்தனவாகிய நூல்களானே ஊகிக்கப்படுகின்றது. தொல்காப்பியனார் பாநான்கினிலக்கணங்களே

* வீரசோழியம், வேற்றுமைப்படலம், எ-ஆம் செய்யுளுரை.

† தொல், எழுத், நூன்மரபு—உடு-ம் சூத்திரவுரை.

கூறி, ஒழிந்தபாவினங்களைப் பற்றி ஒன்றுங் கூறாமையும், முற்கால நூல்கள் பலவற்றிலும் ஆராய்ச்சி மிக்கபேராசிரியர் 'அடியின் சிறப்பே' என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் "தலையிடைகடைச் சங்கத்தாரும், பிறசான்றோரும் நாற்சீரடியான் வரும் ஆசிரியமும் வெண்பாவுங் கலியுமே பெரும்பான்மையுஞ் செய்தார், வஞ்சிப்பா சிறுவரவிற்றெனக்கொள்க" என்றமையும் அவ்வூகத்தை வலிபெறச் செய்கின்றன. சிந்தாமணி சங்கத்திலரங்கேறியதாகக் கதைவழங்குவதாயினும், நச்சினார்க்கினியர் 'பாகிலைவகையே' என்னுஞ் செய்யுளியற் சூத்திரவுரையில் 'பின்னுள்ளோர் செய்த சிந்தாமணி' என்று கூறுதலால் அது சங்கத்துக்குப் பிற்பட்டதென்பது தெளிவாகின்றது. அன்றியும் சங்கச்செய்யுள்களில் அருகிக்காணப்படுவனவாகிப் பிற்காலத்து வழங்கியவாகத்தெரியும் சொற்பிரயோகங்களும் பிறவும் அத்திருமொழியுட் காணக்கிடக்கின்றமை உய்த்துணர்ந்துகொள்க. யாம் ஈண்டுக்கூறியவற்றை ஆதாரமாகக்கொண்டு, ஆண்டாள் திருப்பாவை முடிவில் அருளிய 'பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான்கோதை சொன்ன சங்கத்தமிழ்மாலை' என்னும் பாசுரக்கூற்றை நன்றாக ஆராய்ந்தால், பெரியாழ்வாரும், அவர் திருமகளாரும் கடைச்சங்க காலத்துக்குப் பிற்பட்டவரென்றே ஒருதலையாகத்துணியலாம். அச்சங்க காலம் கி. பி. 2-ம் நூற்றாண்டென்பது, சிலப்பதிகார முதலிய் சாதனங்கள்கொண்டு முன்னரே பலவித்துவான்களால் வரையறுக்கப்பட்டுள்ளது.

இனி, ஆழ்வார் பன்னிருவருள், பொய்கையார், பூதத்தார், பேயார் இம்மூவரும் முற்பட்டவரெனவும், இவர்களும் திருமழிசையாரும் ஒருகாலத்தவரெனவுங் குருபரம்பரைகள் கூறுகின்றன. திருமாலடியாராகிய பொய்கையாரும், களவழிபாடிய பொய்கையாரும் ஒருவரேயென யாம் 'செந்தமிழ்' முதற்றொகுதி ஆறும்பகுதியில் விளக்கியுள்ளோம். இப்பொய்கையாரைப் 'பிறசான்றோ'ருள் ஒருவரெனப் பண்டையுரையாசிரியர் கருதுகின்றனர். 'பிறசான்றோர்' என்பார் சங்கத்தார்க்கு அடுத்துவிளங்கியோரென்று தெரிதலின், பொய்கையார் சங்ககாலத்துக்குச் சிறிதுபிற்பட்ட புலவர் பெருமக்களுள் ஒருவரென்று பெறப்படுகின்றது. இக்கூறியவை ஏனைய பூத

த்தார் பேயார்க்கும் ஏற்பனவாம். இம்முதலாழ்வார் ஏனையடியாரினு முற்பட்டவரென்பதற்கு, நம்மாழ்வார் முதலியோர் பிற்காலத்தவாகிய பாவினங்களானுஞ் செய்யுள் செய்திருப்பவும், இவர்கண்மட்டும் வெண்பாவொன்றுனே அந்தாதிகள் அருளிச்செய்திருத்தல் தக்கசான்றுகின்றது. இனித்திருமழிசையார் முதலாழ்வார் காலத்தவராகக் கூறப்படினும், அவர் சந்தவிருத்தத்தானுஞ் செய்யுள் செய்திருத்தலால், அம்முதலாழ்வாருக்குப் பிற்பட்டவரென்றே கொள்ளத்தக்கவராவர். அன்றியும், திருமழிசையார் காலத்திருந்த அரசன் பல்லவனொருவனென்று பழைய நூல்கள் கூறுகின்றன. பல்லவர்கள் தென்னாட்டைக் கைப்பற்றி ஆண்டதும், அவர்கள் செழித்துவிளங்கியதும் கி. பி. 5, 6-ம் நூற்றுண்டுக்குப் பின்பேயென்பது பிரபலபண்டிதர்கள் செய்துள்ள ஆராய்ச்சியால் நமக்குப் புலப்படுகின்றது. இதற்கேற்பவே கொடையானும் வலியானுமிக்க பல்லவர்களைப்பற்றிய பண்டைச்சான்றோர்செய்யுள் ஒன்றுங் காணப்பட்டிலது. இவற்றுல் திருமழிசையார் பல்லவவரசர் செழித்து விளங்கிய கி. பி. ஆறுநூற்றுண்டிலிருந்தவரென்றே நாம் முடிக்கலாம்.

இனி, அவதார முறையில் அத்திருமழிசைப்பிரானுக்கு அடுத்தவராக நம்மாழ்வார் குலசேகரப்பெருமாள், பெரியாழ்வார், ஆண்டாள் இவர்கள் முறையே நூல்களிற் கூறப்படுகின்றனர். இந்நால்வர்க்கும் மேற்கண்ட குறிப்புக்கூறும் அவதாரகாலங்கள் எத்தகையவாயினும், அவை ஒருநூற்றுண்டுக்குட்பட்டிருத்தலால் அதுகொண்டுஅவர்கள் ஏறக்குறைய ஒருகாலத்தவரென்றே கருதலாம். அன்றியும் நம்மாழ்வார் காலத்துத் திருமாலடியார் பலர் குழுமியிருந்தனர் என்பதற்கு, அவரருளிச்செய்த திருவாய்மொழி, 5-ம் பத்துட் ‘பொலிகபொலிக’ என்னும் பதிகமொன்றே நற்சான்றுகும். இன்னும் அப்பதிகத்துள்ள,

“மேவித்தொழு துய்ம்மினீர்கள் வேதப் புனிதவிருக்கை
நாவிற்கொண் டச்சுதன்றன்னை ஞானவிதி பிழையாமே
பூவிற்புகையும் விளக்குஞ் சாந்தமு நீருமலிந்து
மேவித்தொழும் அடியாரும் பகவரு மிக்கதுலகே.”

என்னும் பாசுரப்பொருளையும், விஷ்ணுசித்தர்சரிதத்தையும் ஒப்பிட்டுணரவல்லார்க்கு, சடகோபர் தங்காலத்துப் பெரியாழ்வாரைப் பெய

ர்கூறாது குணங்கூறிச் கூட்டியுள்ளாரோ என்று தோன்றுதலுங்கூடும்.
இனித் திருமழிசையார், பல்லவர் செழித்த ஆறாநூற்றாண்டினராக
மேற்கூறியவேதுக்களான் முடிதலின், அவர்க்குப் பிற்காலத்தவராக
நூல்கள்கூறும் நம்மாழ்வார்முதலியோரை, கி. பி. 7-ம் நூற்றாண்டில்
வசித்தவராக நாம் கருதல் ஏற்புடைத்தாம். இந்நூற்றாண்டே
சைநரும், பௌத்தரும், சைவரும், பிறரும் தம்முண்மாறுபட்டுச்
சமயப்பெரும்போர் புரிந்தகாலமென்பது சரிதக்கண்ணால் நோக்கு
மிடத்து விளங்காநிற்கும். இக்காலத்துக்கு முன்னும் பின்னும்
கொடியசமயவாதம், அவ்வளவு செறிந்துநிகழ்ந்ததாகக் காண்டல்
அரிது. இந்நூற்றாண்டே நம்மாழ்வார், பெரியாழ்வார்கட்கு உரிய
தென்பதனை நன்கு விளக்க, நம்மாழ்வார்,

“இலிங்கத்திட்ட புராணத்தீருஞ் சமணருஞ் சாக்கியரு
மலிந்துவாது செய்வீர்களு மற்றுநுந்தெய்வமு மாகிநின்றான்”

(௫-ஆம்பத்து, ௧௦-ஆம் திருவாய்மொழி, ௪-ஆம் பாசுரம்.)

எனத் தங்காலத்துமிருந்து மதப்போர் புரிந்துநின்ற சமயவா
தியரை முன்னிலைப்படுத்துக்கூறிய திருவாய்மொழியும், விஷ்ணுசித்
தர் பாண்டியன் முன்பு பல சமயவாதியரை வாதில் வென்றார் என்
னும் பெரியாழ்வார் சரித்திரமுமே போதியனவாம்.

ஆனால், “செந்தமிழ்” முதற்றொகுதி, 5-ம் பகுதியில், சட
கோபர் கி. பி. 11-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியினரென்று சில
காரணங்களாற் றுணிந்து ஒரு விஷயம் வெளிவந்துள்ளது. அஃ
தெழுதியோர் ஸ்ரீமத்-து. அ. கோபிநாதராயரவர்கள், எம். ஏ., அவர்
கள் அவ்வாறு துணிந்ததற்கு முக்கிய காரணம், நம்மாழ்வாரை
நேரிற்றரிசித்த மதுரகவியாழ்வாருடைய சிஷ்யராகிய பராங்குசதா
சர் மூலம் நாதமுனிகள் நாலாயிரம் பெற்றார் என்றுள்ள சரித்திரம்,
அந்நால்வரும் ஒருகாலத்தவரென்பதைக் காட்டுவதென்றும், நாத
முனிகள்காலம் கி-பி. 1063-1117-வரை ஆட்சிபுரிந்த குலோத்துங்
கன் காலமென்றுங் கருதியதேயாம். இவற்றுள், ராயரவர்கள் கரு
திய குலோத்துங்கன் நாதமுனிகள் காலத்தவனல்லனென்பதை மே
லே விளக்கியுள்ளோம். அன்றியும் இக்குலோத்துங்கன் இராமா
நுஜர் காலத்தவனாதலின், இவனை, அவ்விராமாநுஜருடைய ஆசிரி

யர்க்கும் ஆசிரியராகிய ஸ்ரீ ஆளவந்தார்க்குப்பிதாமகராகிய நாதமுனிகள்காலத் தரசனாகக்கருதல் பொருந்தாமை உய்த்துணர்க. இதனால், கி-பி. 1063-ல் இருந்த குலோத்துங்கனுக்கு ஐந்தாந்தலைமுறையானாகிய சோழனே, கி. பி. 1017-ல் அவதரித்த இராமாநுஜர்க்கு ஆசிரியக்கிரமத்தில் ஐந்தாந் தலைமுறையினராய நாதமுனிகள்காலத்து விளங்கியோனென யாமேற்கூறியது உறுதி பெறுவதாம். இனி ராயரவர்கள் காட்டியபடி மதுரகவியாழ்வாருடைய சிஷ்யர் பராங்குச தாசரென்று கூறிய பழைய குருபரம்பரையே, அப்பராங்குச தாசர் மூலம் நாலாயிரம் பெற்ற நாதமுனிகளை, 'ஆழ்வார்கள் தன்னுடைச் சோதிக் கெழுந்தருளி நெடுங்காலங் கழிந்தவாறே' அவதரித்தவரென்றும், நாலாயிரம் உலகில் அருகிய காலத்து அதனை வெளியிட்டவ ரென்றுங் கூறிச் செல்கின்றன. இவை அம்முனிவர் நம்மாழ்வாரது காலத்தை எட்டிப் பிடித்தவரென்று பொருத்திக் காட்டுவதோடு மாறுபடும். இவ்வாறு மாறுபடுதல்பற்றி அப்பழைய நூலைக் குறைகூறுவது நன்றன்று. ஸ்ரீமந்-நாதமுனிகள்யோக வலியால் 300—திருநட்சத்திரத்திற்குமேல் லீலாவிபூதியில் எழுந்தருளியதாகக் கூறும் கர்ணபரம்பரைச் செய்தியில் நம்பிக்கை செல்லுமாயின், கி-பி. 9-ம் நூற்றாண்டில் திருநாடலங்கரித்த அம்முனிவர், ஏழாம் நூற்றாண்டினராய நம்மாழ்வாரை நேரிற்தரிசித்திருத்தல் கூடுமென்று முடித்துக் காட்டலாம். ஆனால், இவ்வமைப்பு முற்கூறியஆசங்கைகளை நிவர்த்தியாமையோடு, இக்காலத்தார் பெரும்பாலார்க்கு ஒவ்வாததாகவும் ஆகின்றது. இதனால், மதுரகவியாழ்வார் சிஷ்யர் பராங்குசதாசரென்று அப்பழைய நூல் கூறுவதற்கு, மதுரகவியாரை ஆசாரியராகக் கொண்டொழுகிய சிஷ்ய பரம்பரையினருளொருவராகிய பராங்குசதாசரெனப் பொருள்கோடலன்றி, ஆழ்வார்காலத்தவராக அத்தாசரைக் கருதல் சிறிதும் பொருந்தாது. அன்றியும், நாதமுனிகள்காலத்தவராகிய கம்பர்நாடர் பாடியதென்று வாக்கினாலும் வழக்கினாலுந் தெளியப்பட்ட சடகோபரந்தாதியில், அப்புலவர் பெருமான் "உள்ளந் தெருளிற் கரும்பொக்கு மாயிரம் பாப்பண்டு செய்தவரே" என்று திருவாய்மொழிப்பழமை குறித்தலால், ராயரவர்கள் கூறிய கி-பி 11-ம் நூற்றாண்டு ஸ்ரீநம்மாழ்வார்க்குரிய காலமாதல் எவ்வழியானும் செல்லத்தக்கதன்றாம். ஆகவே,

நம்மாழ்வார்முதலியஐவரும் கி-பி. 7-ம் நூற்றாண்டினரென யாமேல் ஊகித்தது இழுக்குறாமை கண்டுகொள்க. இன்னும் அதனுண்மையை மற்றொரு பிரபலவேதுவான் கிறுவி, நாமாராய்ச்சிக் கெடுத்துக்கொண்ட பெரியார் காலத்தையும் வரைந்து காட்டுவோம்.

பெரியாழ்வார் காலத்தில் திருமாலடிமையிற் சிறந்த செல்வநம்பி என்பாரும், பாண்டியனொருவனும் அவர்பால் அபிமானம் வைத்திருந்தனர் என்பது, வடமொழியினுந் தமிழினுமுள்ள திருக்கூடற்றலபுராணம்*, குருபரம்பரைகள் இவற்றால் அறியப்படுகின்றது. இதனை,

"அல்வழக்கொன்றுமில்லாவணிகோட்டியர்கோனபிமானதுங்கன்
செல்வனைப்போலத்திருமாலேநானுமுனக்குப்பழவடியேன்"

"நளிர்ந்தசீலனயாசலனபிமானதுங்கனைநாடொறுந்
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்டசெங்கண்மால் திருக்கோட்டியூர்" எனவும்,

"பருப்பதத்திற்கயல்பொறித்தபாண்டியர்குலபதிபோற்
திருப்பொலிந்தசேவடியென்சென்னியின்மேற்பொறித்தாய்" எனவும்,

அவ்வாழ்வாரே தமதருளிச்செயலில் ஆண்டாண்டுக்கூறுமாற்றானுமறிக. செல்வநம்பி என்பார் பாண்டியற்குப் புரோகிதராய் விளங்கியோராவர். திருமாலடிமையிற் சிறந்த அவ்வாழ்வார் 'பாண்டியர் குலபதிபோல்' என இறைவன் செயற்கு அரசன் செயலை உவமிப்பாராயின், அப்பெரியாரையபிமானித்த பாண்டியனொருவன் அக்காலத்திருந்தனனென்று நாங்கருதல் தவறாததாம். அப்பாண்டியன் பெயர் வல்லபதேவனென்று தலபுராணமுதலியவற்றிற் சொல்லப்படுகின்றது. தமிழ்நாட்டுத் தலபுராணங்களெல்லாம் ஆதியில் வடமொழியிலமைந்தமையின், தமிழியற்பெயர்களும் பெரும்பான்மை வடசொல்லாக மாற்றியும் மொழிபெயர்த்தும் வழங்கப்பட்டன. ஆதலால் அவற்றிற்கண்ட பெயர்களைக்கொண்டு சரிதவாராய்ச்சி செய்

* வடமொழியினின்று தமிழிற் செய்யுள்ரூபமாக மொழிபெயர்க்கப்பட்ட இப்புராணப் பிரதியொன்று, இச்சங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைக்கண் உள்ளது. இவ்வேடு, இற்றைக்கு நூறுவருஷங்கட்கு முன்பு எழுதப்பட்டதென்பது, அதனுட்கண்ட குறிப்பால் விளங்குகின்றது. இப்புராணமியற்றியோர் பெயர்முதலியன புலப்படவில்லை.

தல் வாய்ப்புடைத்தன்று. யாமதனையொழித்துப் பெரியாழ்வார் காலத்தவனாகப் பெயர்கூறப்பட்ட அரசன் உளனாவென்றாராய்வோம்.

அப்பெரியார் திருமொழி, திருமாலிருஞ்சோலைப்பதிகத்தில் அருளிய,

"மன்னன் மறுக மைத்துனன் மார்க்கொரு தேரின்மேன்
முன்னங்கு நின்று மோழை யெழுவித் தவன்மலை
கொன்னவில் கூர்வேற் கோனெடுமாறன் றென்கூடற்கோன்
தென்னன்கொண் டாடுந் தென்றிரு மாலிருஞ் சோலையே.

என்னும் பாசுரத்தை ஆராயின், மதுரையை யாண்ட நெடுமாறன் என்னும் பாண்டியன் குறிக்கப்பட்டுள்ளான் என்பது விளங்கும். இப்பாட்டில் 'தென்னன் கொண்டாடும்' என நிகழ்காலத்தாற் கூறப்பட்டிருத்தல், அவ்வரசன் அவ்வாழ்வார் காலத்தவனென்பதை விளக்குகின்றது. ஆகவே, அப்பெரியாரை அபிமானித்தவன் பாண்டியன் நெடுமாறனாவன். இனி, இந்நெடுமாறன் யாவன்? எக்காலத்தான்? என்னும் வினாக்களுக்கு விடைபெறப்படுமாயின், அவ்வாழ்வார் காலமும் ஒருதலையாக அறியப்பட்டதென்னலாம்.

பாண்டியர்க்குள் நெடுமாறனென்னும் பெயர், இறையனார் களவியலுரையினும், ஸ்ரீ சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையினும் அதன் விரிநூல்களினும் படிக்கப்பட்டுள்ளதன்றி, வேறு காணப்படவில்லை. களவியல் உரைமேற்கோட்செய்யுள்கள் பெரும்பான்மையும் அப்பாண்டியன் புகழே விரித்துரைப்பன. அவ்வாறுரைத்த புகழ்களுள் நெல்வேலி யென்னும் பாடியில் நெடுமாறன் பகைவென்றது மொன்றாம். இதனை,

"பொறிகெழு கெண்டை வடவரை மேல்வைத்துப் பூமியெல்லா
நெறிகெழு செங்கோ னடாநெடுமாறனெல் வேலிவென்றான்"
"நெல்வேலி யொன்னார் போர்வண்ணம் வாட்டிய பூழியன்"

எனவருவனவற்றாற் கண்டுகொள்க. இந்நெல்வேலிச் சமரைப்பற்றி, "நெல்வேலி வென்ற, நின்றசீர் நெடுமாற னடியார்க்கு மடியேன்" எனத்திருத்தொண்டத் தொகையும், சேக்கிழார் புராணத்து நெடுமாறநாயனார் சரிதமும் ஒத்துரைக்கின்றன. இதனால், மேற்கண்ட நூல்கள் ஒரே நெடுமாறனைக் குறிக்கின்றன வென்பதும், அம்மாற

னே நெல்வேலி யுத்தநடத்தி வென்றவன் என்பதுந்தெளிவாகும். இனி, பல்லவராஜனுகிய நந்திபோதவன்மனுடைய சேனைத்தலைவன் உதயசந்திரனென்பானுக்கும் பாண்டியனொருவனுக்கும் நெல்வேலியிற் பெரியதோர்யுத்தம் நிகழ்ந்ததாக உதயேந்திர சாதனத்தால் விளங்குகிறது. பல்லவமல்லையன் என்னும் மறுபெயருடைய அந் நந்திபோதன் காலம் கி. பி. 710—760 எனப் பலசாதனங்களால் வரையறுக்கப்பட்டிருக்கிறது. இதனுல் நெல்வேலி யுத்தகாலமும் கி. பி. எட்டாநூற்ருண்டின் முற்பகுதி யென்பது தேற்றமாம். ஆகவே, அவ்வமரில் வென்றவன் பாண்டியனெடுமாறனே யாதலின் அவ்வரசனிருந்த காலமும் அதுவேயென்பது பெறப்படும். படவே ஏழாநூற்ருண்டினரென்று நாம் மேலே ஊகித்த பெரியாழ்வார் கூறும் நெடுமாறன், ஏறக்குறைய அக்காலத்தவனுகிய நெல்வேலிதந்த நெடுமாறனே என்று கொள்ளப்படுமாதலின், அப்பெரியார் கி. பி. ஏழா நூற்ருண்டின் பிற்பகுதியிலும் எட்டா நூற்ருண்டின் முற்பகுதியிலுமிருந்தவரென்றே நாம் நிச்சயிக்கலாம்.

இனி, அந்நெடுமாறனைச் சிவனடியார்களுள் ஒருவராகப் பெரியபுராணமுதலிய கூறுகின்றனவாயினும், அவரோ திருமாலடியராகவும் ஓர் காலத்திருந்து அவ்வாழ்வாரை அபிமானித்திருத்தலுங் கூடுமென்பது, அவரது கதைப்போக்கால் ஊகிக்கப்படுதலின், அது முரணுமாறில்லை. அன்றியும், கோச்செங்கட் சோழன் சிவனடியாருள் ஒருவராக அப்புராணத்துட் கூறப்பட்டாராயினும், திருமாற்கடிமையும் அவர் செய்துள்ளா ரென்பது திருமங்கை மன்னனது திருநறையூர்ப்பதிகத்தால் விளங்குதலின், பிற்காலத்து வைதிகர்க்குள் உண்டாகிய அத்துணை மதவைஷம்மியம் முற்காலத்து அரசர்க்குளின்றி ஒப்பநாடுங்குணமேலிட்டிருந்ததென்று கோடலும் ஏற்கும்.

இத்துணையுங் கூறியவாற்ருல் நம்மாழ்வார், மதுரகவியாழ்வார் காலம் கி. பி. ஏழாம் நூற்ருண்டெனவும்: பெரியாழ்வார், அவர்திருமகளார்ஆண்டாள் காலம் அந்நூற்ருண்டின் பிற்பகுதியும், எட்டா நூற்ருண்டின் முற்பகுதியுமாமெனவும் உய்த்துணர்ந்து கொள்க.

மு. இராகவையங்கார்.

இரத்த எரு—Blood manure.

நமது நாட்டு ஆடுமாடுகளின் இரத்தமும் முதல்தரமானது. இதைத்தக்கபடி சம்பாதித்து களிமண் மணியாசம் பூசிய குழிகளில் வார்த்து, அதன்மேல் சாம்பல் குப்பை செத்தைகளைப் போட்டுக் காய்ந்தபிறகுஎடுத்துக் கரும்புமுதலான விலையுயர்ந்த பயிர்களுக்கு இடலாம்.

தொழு எரு, செயற்கை எருக்களின் தாரதம்மியம்.

The Farm Yard and Artificial manures.

அமெரிக்கா முதலான நாடுகளின் விவசாய இரசாயன சாஸ்திரிகள் இயற்கை எருவையும், செயற்கை எருவையும், சாஸ்திரோக்தமாகப் பரிசோதித்துப்பார்த்ததில், செயற்கை எருவே சிரேஷ்டமானதென்று கண்டுபிடித்திருக்கின்றார்கள். எப்படியெனில்:—

	இயற்கை (தொழு) எருவில்		செயற்கை எருவில்—
நயிட்ரஜன் (உப்புசத்து)	8–இராத்தல்	... ...	9–இராத்தல்
பொடாஸ் (மரச்சாம்பல்)	6 ஷை	... ...	6 ஷை
பாஸ்பரஸ் (பாஸ்கரம்)	6 ஷை	... ...	42 ஷை

இருப்பதால் செயற்கை எருவே சிரேஷ்டம் என்பது விளங்கும். ஆகவே நமது குடிகள் செயற்கை எருவைச்செய்யப் பிரயத்தனப் படவேண்டும்.

அமெரிக்கா ஐக்கியமாகாணங்களில்

தொழு எருவை உபயோகிக்கும் விவரம்.

The use of farmyard manure in U. S. America.

பயிர்விளைவிற்குப் பத்துப் பதினெட்டுப் பூதங்கள் இன்றியமையாதவைகளாக இருப்பினும்,அவைகளில் முக்கியமானவை நைடிரஜன் (Nitrogen) என்னும் உப்புவாயுவும், பாஸ்பரிக் ஆசிட் (Phosphoric Acid) பாஸ்கரசத்தும், பொட்டாஷ் (Potash) என்னும் மரச்சாம்பற் சத்துமாம். அவற்றுள் முதலாவதான நைடிரஜன்உப்புச்சத்து எப்படிப்பயிர்பச்சைகளுக்கு உபயோகப்படுகிறதென்பதைப்பற்றி, 1771ஆ

பிராணவாயுவைக் கண்டுபிடித்த டாக்டர் பிரஸ்டிலி (Dr. Priestly) சாஸ்திரியாரும், பிறகு சஸ்ஸுரி சாஸ்திரியாரும் (Saussure) 1837-ம் ௵ பவுசிங்கால்டு (Boussingault) சாஸ்திரியாரும், பிற்பாடு லாவிஸ் (Lawes) ஜில்பர்டு (Gilbert) பவ்வு (Pugh) என்னும் சாஸ்திரிகளும், பிறகு இங்கிலாந்தில் (Vœlcker) சாஸ்திரியாரும், 1876 ௵ பெர்திலாட்டும் (Berthelot) 1886-௵ எல்லிரீகல் (Hellriegel) டாக்டர் வில்போர்த்தும் (Dr. Wilforth) லீத்தர் (Dr. J. W. Leeather) மேஸ்டர் ரிச்சார்டு பிட் (Richard Felt) முதலான விவசாயரசாயனசாஸ்திரிகளும் அதிநுட்பமானகருவிகளைக்கொண்டு பரிசோதித்ததன்றியும், மேஸ்டர் லாவிஸூம், ஜில்பர்டும் ஆங்கிலவிவசாயசபாசஞ்சிகை, நான்காவதுவாலியம், 657-720 பக்கங்களில் விரிவாக எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய விசாரணையினால், உப்புவாயுவைப் பயிர்கள் ஆகாயத்திலிருந்து இலைகளின் மூலமாகக் கிரகித்துக்கொள்ளுகிறதன்றியும், நிலத்திலிருந்து வேர்களின் மூலமாகவும் கிரகிக்கிறதென்றும், அது பயிர்களின் பிராணதத்துவமான புரோடபிளாசம் (Protoplasm) என்னும் சத்தையுண்டாக்கிப்பாதுகாக்கிறதென்றும், அந்த உப்புச் சத்து இல்லாவிட்டால் எந்தப்பயிரும் விளையாதென்றும், அந்தச் சத்தை, மொச்சைஅவரை முதலான சில கோதுடைய பயிர்கள் ஆகாயத்திலிருந்து கிரகித்து நிலத்தைக் கொழுக்கும்படி செய்கிறதென்றும், அது விசேஷமான எருக்களில் ஒன்றென்றும் பிரபலமாக எழுதியிருக்கிறார்கள்.

அந்த உப்புச்சத்து, பயிர்களுக்கு இன்றியமையாததாக இருப்பினும், அதைமிதமிஞ்சிப்போட்டாற் பயிர்களை மதாளிக்கச்செய்து பலனைக்குறைத்துவிடும்.

2-வது பாஸ்கரசத்து (Phosphoric Acid) பயிர்கள் செழிப்பாக வளருவதற்கும், விதைகளையும் தானியங்களையும், வைக்கோல் தாள்களையும் விருத்தியாக்குவதற்கும் இன்றியமையாதது. அதை உப்புச்சத்தோடு கலந்துபோடாவிட்டாலும் அல்லது அந்தச்சத்து நிலத்தில் அதிகமாக இல்லாவிட்டாலும் தழைகளும், தாள்களும், விதைகளும், தானியங்களும் தக்கபடி விளையாமல் தாள்கள் மெலிந்து

துவண்டுகிற்கும். இந்தச்சத்து எலும்பு சுண்ணும்பு முதலானவற்றில் அதிகமாக இருக்கிறது.

3-வது பொட்டாஷ் (Potash) மரச்சாம்பற் காரசத்து. அது பயிர்களில் மிகுதியாக இருக்கிறது. மா, நார் முதலானவற்றை அதிகமாக்கிப் பயிர்களைச் செழித்தோங்கச்செய்கிறது. அப்படிச் செய்வதற்கு அதற்கநுகூலமாக நிலத்தில் உப்புச்சத்தும் பாஸ்கரசத்தும் தக்கபடி அமைந்திருக்கவேண்டும்; ஆக இந்த மூன்றுவிதப் பயிருணவுப் பொருள்களைப் பயிரிட்டால், நிலங்களால் நல்ல வருவாயினை அடையலாம். இதை நமது குடித்தனக்காரர்கள் கவனிக்கிறதில்லை.

நாம் குடியிருக்கும் கோயம்புத்தூரிற் சிலவருஷகாலங்களாக ஸ்டேன்சுகம்பேனியார் (Messrs. Stanes & Co.,) ஓரிடத்தில் விவசாய ரசாயன சாஸ்திரயுக்தபடி எருச்சாலையை ஸ்தாபித்து, (Manure house) இந்நாட்டில் அதிகக்குறைந்த விலைக்குக்கிடைக்கும் பலவிதப்பிண்ணுக்கு, எலும்பு, சுண்ணும்பு, உப்பு முதலாய பொருள்களை வாங்கி யந்திரக்கருவிகளினுற் பொடித்துச் சாஸ்திரயுக்தப்படி கலக்கி மலைநாடுகளில் விளையும் காபி, தேயிலை, சிங்கோனு முதலானவைகளைப் பயிர்செய்வோருக்குவிற்று நல்ல லாபத்தை அடைவதன்றியும் இந்நாட்டில் விளைவிக்கும் நெல் கோதுமை கரும்பு மிளகாய் புகையிலை வாழைமுதலான பயிரிடும் சுதேசக்குடித்தனக்காரர்களுக்கு விற்றும், ஐரோப்பா அமெரிக்காநாடுகளில் சாஸ்திர யுக்தப்படி செய்யும் விலையுயர்ந்த எருக்களைத் தருவித்து நல்ல லாபத்துக்காக விற்பனைசெய்தும் வருகிறுர்கள்.

இந்த எருச்சாலையைக் கோயம்புத்தூரிலும் வெளிநாடுகளிலும் இருக்கும் சில பெரிய குடித்தனக்காரர்கள் நேரிற்போய்ப் பார்த்திருந்தும் அவ்விதமான தொழிற்சாலையை ஸ்தாபிக்க முயன்றுர்களில்லை. இந்நாட்டார்க்கு, இப்படிச்சாஸ்திரோக்தமாக விசேஷஎருவைச்செய்து குடித்தனம்செழிப்பிக்கப் பொருளும்புத்தியும் யுக்தியும் இல்லையென்று எண்ணினும், தத்தம் நிலங்களில் வலியக்கிடைக்குந் தொழுஎரு முதலானவைகளையாவது தக்கபடி பாதுகாத்து உபயோகப்படுத்தினுல் எவ்வளவோ நன்மையை அடையலாம்.

ஐரோப்பா அமெரிக்காநாடுகளில் மிக்கஎருவை வாங்கி உபயோகப்படுத்த வகையற்ற ஏழைகளான குடித்தனக்காரர்கள் தொழு எருவைத் தக்கபடி பாதுகாத்து உபயோகப்படுத்தி வருவதனுல் பஞ்சம் என்னும் படுநோய் அவர்களைக்கண்டு அஞ்சியகன்றது. அதற்கோர் திருஷ்டாந்தமாவது ;— 1894-ஞ அமெரிக்காவைச்சேர்ந்த யுனைட்டெட்ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கியமாகாணங்களில் கானிஷ்வார் கணக்குப்படி 16,000,000 குதிரைகளும், 53,000,000 மாடுகளும் 45,000,000 ஆடுகளும் 452,00,000 பன்றிகளுமிருந்தன. அவைகளால் வருஷம் ஒன்றுக்கு (ஒவ்வொரு குதிரையினுல் 27 டாலரும், ஒவ்வொரு மாட்டினுல் 19 டாலரும், ஒவ்வொரு பன்றியினுல் 12 டாலரும் ஒவ்வொரு ஆட்டினுல் 12 டாலரும் பெறும்படியான) எருக்கிடைத்தது. டாலர் ஒன்றுக்கு 4 ஷிலிங்கு அல்லது இரண்டு ரூக்குமேற்படுமாயின் அந்நாட்டிற் குதிரைகளினுல் வருஷம் 1-க்கு 864,000,000 ரூபாவும், மாடுகளினுல் 2014,000,000 ரூபாவும், பன்றிகளினுல் 108,48,00,000 ரூபாவும், ஆடுகளினுல் 180,000,000 ரூபாவும் ஆக மொத்தம் 414,28,00,000 ரூபாவும் தரும்படியான எருவைக்கொடுத்திருக்கவேண்டும். இந்தக்கணக்கு இப்போது ஐக்கியமாகாணங்களில் விற்பனையாகும் (Phosphoric Acid) மரச்சாம்பல் (Potash) உப்புச்சத்து (Nitrogen) எருக்களின் விற்பனையைக்கொண்டு மதிப்பிடப்பட்டது.

இதுவிஷயத்தைப்பற்றித் தக்கபடி சாஸ்திரோக்தமாகப் பரிசோதித்த (Prof. Roberts) இராபர்ட் சாஸ்திரியார், 4 குதிரைகளும் 20 பசுக்களும், 50 ஆடுகளும், 10 பன்றிகளுமுடைய ஒருசிறிய தோட்டத்தில் (மாரிகாலமாகிய) 7 மாதங்களில் அக்கால்நடைகளாற் கிடைத்த எருவைச் சேகரித்துப் பரீக்ஷித்ததில், 50 டாலர் அஃதாவது 500 ரூபாவுக்கு அதிகமாகியதாகக் கண்டிருக்கிறுர். அன்றியும் அந்தநாட்டிலும் தக்கபடி எருவைப் பாதுகாத்துவராமையினுற் பிரதிவருஷம் ஒன்றுக்கு மூன்றுபாக எருச்சத்து அஃதாவது அந்நாட்டுத்தோட்டம் ஒன்றுக்கு 8333 டாலர் விலையுள்ள சத்து வியர்த்தமாகப் போய்விடுவதாகவும் கணக்கிட்டிருக்கிறுர்.

ஒரு குடித்தனக்காரன் தன்னிலத்தில் உற்பத்தியாக்கும் தானியம் காய்கறி பழங்கள் புல் தட்டு பால் மாமிசாதி பதார்த்தங்

களை விளைவித்தற்குப் பிராணுதாரமாயிருந்த (Phosphoric Acid) பிரகாசிதமிலம், (Potash) மரச்சாம்பற் சத்து, (Nitrogen) உப்புச் சத்து முதலான எருச்சத்துக்களை மறுபடியும் அந்நிலத்திற்கு உடனுக்குடனே கொடுத்தாலன்றி அந்நிலம் நன்னிலமாகமாட்டாது. இதனைப் பின்வரும் வரையறையிற் கண்டுகொள்க.

இந்த வரையறையிற்கண்ட கணக்கின்படி ஒருகுடித்தனக்காரன் ஒரு டன் புல்லை யாருக்காவது விலைக்குவிற்றால் அதனுடன் போகும் எருச்சத்தை மறுபடியும் வாங்கி அந்த நிலத்திலிட 5டாலர் பத்துச் செண்டு எருச்சத்துவேண்டும். அன்றியும் 2000 இராத்தல் கோதுமையை யாருக்காவது விலைக்கு விற்றால் அந்தக்கோதுமையோடு கலந்துபோகும் (மரச்சாம்பற் சத்து, பிரகாசித அமிலம், உப்புச்) சத்துக்களை மறுபடியும் அந்த நிலத்திற்கிட 7டாலர் 91செண்டு செலவாகும். அஃதாவது ஒரு குடித்தனக்காரன் 10 டாலர் அல்லது 20 ரூபா விலையுள்ள கோதுமையை யாருக்காவது விலைக்கு விற்றால் அஃதுடன் 2 டாலர் 4 ரூபா (63) செண்டு எருச்சத்தையும் விற்றுவிடுகிறானென டாக்டர் (Dr. Armsby) என்னும் இரசாயன சாஸ்திரியார் கணக்கிட்டிருக்கிறார்.

ஆகையால் ஒரு நிலத்தில் விளையும் தானியம் காய்கறிகளையும் மற்றும் அங்குண்டாகும் பதார்த்தங்களையும் அந்நிலத்திலேயே குடியிருக்கும் குடித்தனக்காரன் அநுபவித்துவருவனாகில் எருச்சத்து எடுபட்டுப்போக வழியில்லை. இந்தவிதியை இப்போது இங்கிலந்து முதலான ஐரோபா கண்டத்தார் அநுசரித்துவருகிறார்கள். இக்கருத்தைக்கொண்டே இந்நாட்டு ஆதிக்குடிகள் "ஒரு நிலத்தில் விளைந்தது அந்நிலத்திலேயே மடியவேண்டும்." என்னும் பழமொழியை வழங்கிவந்தார்கள். இந்த அநுபவம் மொச்சை, அவரை, கடலை, துவரை, கொள்ளு முதலான கோதுடைய பயிர்களை விளைவிக்க அவற்றின் இலை, கொடி, கோது முதலானவைகள் அந்தந்த நிலங்களில் விழுந்து எருவாகும் விதம் இந்நாட்டுக் குடிகளுக்குத்தெரிந்த விஷயம்.

நிலத்தில் விளையும் பதார்த்தங்களில் உள்ள

எருச்சத்துக்களைக் காட்டும் வரையறை.

பதார்த்தங்களின் பெயர்கள்.	ஒருடன்னில் இத்தனை இராத்தல்			ஒரு டன்னின் விலை				எருவின் விலை. சராசரி 10 டாலருக்கு அல்லது 20 ரூபாவுக்கு.
	நைட்டர்ஜன் என்ற உப்புச் சத்து	பாஸ்பரஸ் என்னும் பிரகாசிதம்	பொடாஸ் என்னும் சாம்பல் சத்து	நைட்டர்ஜன் என்னும் உப்பு சத்து	பிரகாசிதம் என்ற பாஸ்காம்	பொடாஸ் என்னும் சாம்பற் சத்து	மொத்தம் டாலர்	
				டாலர்	டாலர்	டாலர்		
சாதாரணபுல்தட்டுமுதலியவற்றில்	20.42	8.2	26.4	3.47	0.57	1.06	5.10	5.10
கிளவர் என்ற காய்ந்த புல்லில்	40.16	11.2	36.6	6.83	0.78	1.46	9.07	9.07
உருளைக்கிழங்கில்	7.02	3.2	11.4	1.19	0.22	0.46	1.87	0.12
கோதுமைத்தவிட்டில்	49.15	54.6	28.6	8.35	3.82	1.14	13.31	8.32
எள்ளுப்பிண்ணுக்கில்	105.12	52.2	24.8	17.87	2.25	0.99	21.11	7.54
பருத்திக்கொட்டைப் பிண்ணுக்கு	135.65	56.2	29.2	23.6	3.93	1.17	28.16	10.05
கோதுமையில்	37.53	15.8	10.6	6.38	1.11	0.42	7.91	2.63
ஒத்துதானியத்தில்	36.42	12.4	8.8	6.21	0.87	0.35	7.43	3.86
மற்ற தானியங்களில்	33.66	11.8	7.4	5.62	0.83	0.30	6.75	3.78
பார்லி தானியங்களில்	39.65	15.4	9.0	6.74	1.08	0.36	8.18	3.03
பாலில்	10.20	3.4	3.0	1.73	0.24	0.12	2.09	0.88
பாற்கட்டியில்	90.60	23.0	5.0	15.40	1.61	0.20	17.21	0.69
ஆடுமாடுகளில்	53.20	37.2	3.4	9.04	2.60	0.14	11.78	1.18

ஒரு டாலர் இரண்டு ரூபாய் செல்லாணமாகையால் த்தொகை
ப்பெருக்கிஇல் இக்கட்டுக் கணக்கு அறியலாம்.

Amount, Value, and Composition of Manure produced by different animals.

பற்பல பிராணிகளால் உண்டாகும் எருவின் மொத்தம் விலை சேர்க்கை கால முதலான விவரங்களை இந்நாட்டுக் குடித்தனக்காரர்கள் அறிந்திருந்தால் எத்தனையோ நன்மையையடையலாம்.

எப்படியென்னில் ஐரோபா அமெரிகா நாடுகளிற் குதிரைகள் முதலானகால்நடைகள் இராக்காலங்களிற் சுகமாகப்படுத்துக்கொள்ள வைக்கோல் புல் முதலானவற்றை மெத்தைகளாகப் பரப்பிவருவது வழக்கம். அப்படிச் செய்வதனாலும் நல்ல எரு அகப்படுகிறது. அஃதாவது அப்படிக் கால்நடைகள் படுக்கப்பரப்பும் ஒரு டன் வைக்கோலினால் 4 டன் எருக்கிடைக்கிறதாம். ஆரம்பி (Armsby) சாஸ்திரியாருடைய கணக்கின்படி ஒவ்வொரு குதிரைக்கும் படுக்கைப்புற்போட வருஷம் ஒன்றுக்கு 2500 இராத்தல் புல்வேண்டும். இந்தக் கணக்கின்படி ஒரு டன் கோதுமைப் புல்லைத் தக்கபடி உபயோகப் படுத்தினால் 6 டன் புதுஎருக்கிடைக்கும். அதைத் தக்கபடி பாதுகாவாமல் கவனமின்றிவிட்டால் $2\frac{1}{2}$ டன் எருத்தான்கிடைக்கும்.

எருவின் சத்து அஃது உண்டாகும் கால்நடைகளின் உணவுக்கும் வயதிற்கும் ஏற்றபடியிருக்கும். எப்படியெனில் 100 இராத்தல் காய்ந்த புல்லை மேயும் குதிரைகளினால் 210 இராத்தல் எருக்கிடைக்கும். அதில் 77.5 அளவு ஈரப்பசையாயிருக்கும். இதனோடு குதிரைகள் படுக்கப்பிரதிதினம் போடும் சுமார் $6\frac{1}{2}$ இராத்தல் புல்லும்சேரும். டார்க்டர் ஹிட்டன் (Dr. Heiden) சாஸ்திரியார் நன்றாக உழைக்கும் குதிரையொன்று தினமொன்றுக்கு 50 இராத்தல் அல்லது வருஷம் ஒன்றுக்கு $6\frac{1}{2}$ டன் எருக்கொடுக்குமென்றும், பசுக்கள் 87.5 அளவு ஈரமுள்ள எருவையும், ஆடு ஒன்று தன் ஆகாரத்திலிருந்து $49\frac{1}{2}$ அளவு காய்ந்த சத்தான எருவையும் 100-க்கு 73 பாகமான ஈரச்சத்துள்ள எருவையும் 100 இராத்தல் காய்ந்தசத்துள்ள உணவினால் 183 இராத்தல் எருவையும் பன்றி ஒன்று பிரதிதினத்திற்கு 12 முதல் 16 இராத்தல் அல்லது 2 முதல் 3 டன் எருவையும் அளிக்க

லாமென்று பவுசிங்கால்டு (Boussingaults) சாஸ்திரி கணக்கிட்டிருக்கிறார்.

கால்நடைகளுக்குத் தக்க உணவும், படுக்கையும் போடுவதில் நல்ல எருச்சத்து உண்டாவதாக நியூயார்க்கு காரனெல் ஸ்டேஷன் கிருஷிசாஸ்திரியார் அடியிற்கண்ட வரையறைப்படி கணக்கிட்டிருக்கிறார்.

ஆயிரம் இராத்தல் நிறையுள்ள கால்நடைகளிநற் தினம் ஒன்றுக்கும், வருஷம் ஒன்றுக்கும் கிடைக்கும், எருவின் மொத்தமும்,

விலையையும் காட்டும் வரையறை.

கால்நடைகளின் விவரம்.	தினம் ஒன்றுக்கு கிடைக்கும் மொத்தம்.	தினம் ஒன்றுக்கு கிடைக்கும் எருவின் விலை.	வருஷம் ஒன்றுக்கு கிடைக்கும் எருவின் விலை.
		100-க்கு டாலர்	
ஆடுகள் ...	34.1 இராத்தல்	7.2 ஷை	26.09 டாலர்
கன்றுகள் ...	67.8 ஷை	6.2 ஷை	24.45 ஷை
பன்றிகள் ...	83.6 ஷை	16.7 ஷை	60.88 ஷை
பசுக்கள் ...	74.1 ஷை	8.0 ஷை	29.27 ஷை
குதிரைகள் ...	48.8 ஷை	7.6 ஷை	27.74 ஷை

இதில் ராத்தல் ஒன்றுக்கு 15செண்டு உப்புச்சத்தும், 6செண்டு பாஸ்கரசத்தும் $4\frac{1}{2}$ செண்டு மரச்சாம்பற் சத்தும் இருக்கின்றன.

இந்த அட்டவணையால் 1000இராத்தல் நிறையுள்ள ஆடுகள் தினம் ஒன்றுக்கும் 15 ரூபாய் விலையுள்ள 34.1 இராத்தல் எருவையும், கன்றுகள் 13 ரூபாய் விலையுள்ள 67.8 இராத்தல் எருவையும், பன்றிகள் 33 ரூபா விலையுள்ள 83.6 இராத்தல் எருவையும், பசுக்கள் 16 செண்டு விலையுள்ள 74.1 இராத்தல் எருவையும், குதிரைகள் 15 ரூபா விலையுள்ள 48.8 இராத்தல் எருவையும் தருவது பிரத்தியக்ஷம்.

உக. பொன்மெலியு மேனியாள் பூஞ்சுணங்கு மென்முலைக
ளென்மெலிய வீங்கினவே பாவமென்—றென்மெலிவிற்
கண்கண்ணி வாடாமை யானல்ல வென்றாற்றா
னுண்கண்ணி வாடா ளுடன்று.

எ-து ஆற்றாய தலைமகனைத் தோழி என்றுகொண்டு கையுறையெதிர்ந்தது.

இ-ள். பொன்றளரும் மேனியாள் வேங்கைப்பூப்போன்ற சுணங்கினையுடைய மென்முலைகள் எற்றுக்கு யான்மெலியப் புடைத்து வீங்கின, என்னே பாவமென்று சொல்லி நீ மெலிதற்குக் காரணமென்னை? நீ கொணர்ந்த குறுங்கண்ணிகள் வாடாதவகை யான் கொண்டு சென்று இவை நல்ல என்று காட்டினால், அவ்வுண்கண்ணிதான் மாறுபட்டுத் துன்புறுள் வாங்கும்; எ-று. (உக)

உஉ. கொல்யானை வெண்மருப்புங் கொல்வல் புலியதளு
நல்யானை நின்னையர் கூட்டுண்டு—செல்வார்தா
மோரம்பி னானெய்து போக்குவர்யான் போகாம
லீரம்பி னாலெய்தா யின்று. *

எ-து பகற்குறிக்கட் டலைமகள் குறிப்பன்றிச் சார்கிலாத தலைமகன் றனதாற்றாமை சொல்லியது.

இ-ள். கொல்யானைகளினுடைய வெண்மருப்பையுங் கொலைவல்ல புலித்தோல்களையும் நல்யானை போன்ற நின் ஐயர் திறைகொண்டொழுகுவார், இப்புனத்தின்கட் பிறர் வருவாரை ஓரம்பினாலெய்து போக்குவர்; யான் பிழைத்துப் போகாதவகை நின் கண்ணென்னு மிரண்டம்பினால் எய்தாய் இன்று; எ-று. (உஉ)

உங. பெருமலை தாநாடித் தேன்றுய்த்துப் பேணா
தருமலை மாய்க்குமவர் தங்கை—திருமுலைக்கு
நாணழிந்து நல்ல நலனழிந்து நைந்துருகி
யேணழிதற் கியாமே யினம்.

எ-து நின்னாற் குறிக்கப்பட்டாளை யானறியேனென்ற தோழிக்குத் தலைமகன் கூறியது: பாங்கற்குக் கூறியதூஉமாம்.

---

* இஃது 'இடம் பெற்றுத்தழாஅல்' என்பர் நச்சினார்க்கினியர். (தொல். பொ. கஎ. கக)

இ-ள். பெருமலையெங்கும் தாம்புக்குநாடித் தேன்வாங்கி நுகர்ந்து மனத்தின்கண் ணுடங்கிப் பாதுகாவாது அருமலைபோன்றிருந்த யானைகளைப்பிணித்துக்கொள்வாருடைய தங்கையுடைய திருமுலைக்குத்தோற்று நாணழிந்து மிக்க அறிவு முதலாயின குணங்கள் நான்குமழிந்து தளர்ந்துருகிவலியழிதற்கு யாமமைந்தேம்; எ-று. (உ௩)

உச நறுந்தண் டகரம் வகுள மிவற்றை
வெறும்புதல்போல் * வேண்டாது வேண்டி—யெறிந்துழுது
செந்தினை வித்துவார் † தங்கை பிறர்நோய்க்கு
நொந்தினைய வல்லளோ நோக்கு.

எ-து தோழி துறைமறமற் றலைமகன் றனதாற்றமைமிகுதி சொல்லியது.

இ-ள். நறுவிய குளிர்ந்த தகரம், வகுளம் என்னுமிவற்றைப் பயன்படாத வெறும்புதல்போல விரும்பாது வெட்டியுழுது, விரும்பிச் செந்தினையை வித்துவார் தங்கை பிறர்கொண்ட நோய்க்கு நொந்திரங்க வல்லளோ? ஆராய்ந்து பாராய் தோழி; எ-று. (உச)

உ௫ கொல்லியல் வேழங் குயவரி கோட்பிழைத்து
நல்லியற் றம்மின நாடுவபோ—னல்லிய
ஞமவேற் கண்ணு ணடுநடுப்ப வாரலோ
வேமவே லேந்தி யிரா.

எ-து தோழி தலைமகனை நெறிவிலக்கி வரைவுக்டாயது.

இ-ள். கொல்லும் இயல்பினையுடைய யானைகள் புலியினுற் கொல்லப்படுதலைத் தப்பி மிக்க இயல்பினையுடைய தங்கூட்டத்தைத் தேடுவதுபோலும்; ஆதலான் மிக்கவியல்பினையடைய அச்சத்தைச் செய்யாநின்ற வேல்போன்ற கண்ணுள் நடுநடுங்கும்வகை வாராதொழிவாயாக, அரணுகிய நின் வேலையேந்தி இரவின்கண்; எ-று. (உ௫)

உ௬ கருங்கா லினவேங்கை கான்றபூக் கன்மே
லிருங்கால் வயவேங்கை யேய்க்கு—மருங்கான்

---

* வேண்டாது எறிந்துழுது, வேண்டிவித்துவார் என்க.

† இது தலைவியைப் பேதைமையூட்டியது எனக்கொள்வர் நச்சினார்க்கினியர். (தொல். களா. உ௩)

மழைவளருஞ் சார லிரவரின் வாழா
ளிழைவளருஞ் சாய லினி.

இதுவுமது.

இ-ள். கருங்காலினையுடைய இனவேங்கை கன்மேலுகுத்த பூக்கள் பெரியதாளினையுடைய வயப்புலியை யொக்கின்ற மருங்கான்மழைவளருஞ் சாரலானே இரவின்கண் நீ வரின் உயிர்வாழமாட்டாள், இழைவளருஞ் சாயலாள் ; எ-று. (உசு)

உஎ பனிவரைநீள் வேங்கைப் பயமலைநன் னாட
வினிவரையா யென்றெண்ணிச் சொல்வேன்—முனிவரையு
ணின்றாள் வலியாக நீவர யாய்கண்டா
ளொன்றாள்காப் பீயு முடன்று.

எ-து தோழி படைத்துமொழிகிளவியான் வரைவுகடாயது.

இ-ள். குளிர்ந்த குவடுகளையும் நீண்ட வேங்கைமரங்களையும் உடைய பயமலை நாடனே ! இதற்குமுன்பு வரைந்திலையாயினும் இனி வரைந்துபுகுதாய் என்று நினக்கு ஆராய்ந்து சொல்வேன்; வெறுக்கத்தக்க மலையின்கண் நின் தாளாண்மையே வலியாக இரவின்கண் நீவர எம் அன்னை கண்டாள்; இனி எங்களோடு பகைத்து வெகுண்டு மிக்க காவலை எமக்குத்தரும் ; எ-று.

உஅ மேகந்தோய் சாந்தம் விசைதிமிசு காழகி
லாகந்தோய் நாக மெனவிவற்றைப்—போக
வெறிந்துழுவார் தங்கை யிருந்தடங்கண் கண்டு
மறிந்துழல்வா னேவிம் மலை.

எ-து தலைமகன் சொன்ன குறிவழியேசென்று தலைமகளைக்கண்டு பாங்கன் சொல்லியது.

இ-ள். முகிலைத் தோயாநின்ற சந்தனமும், விசைமரமும், திமிசும், காழகிலும், துறக்கத்தைச் சென்று தோயாநின்ற நாகமரமும் என்று சொல்லப்பட்ட இவையெல்லாம் போக வெட்டிப் புனமுழுவார் தங்கையாகிய இவளுடைய இருந்தடங்கண் கண்டுவைத்தும், இங்குநின்றும் மீண்டு அங்கு வரவல்லஎம்பெருமான் இத்தோன்றுகின்றமலைபோல் நிலையுடையன் ; எ-று.

உகூ பலாவெழுந்த பால்வருக்கைப் பாத்தி யதனேர்
நிலாவெழுந்த வார்மணை னீடிச்—சுலாவெழுந்து

௩௫. புலாலகற்றும் பூம்புன்னைப் பொங்குநீர்ச் சேர்ப்ப
நிலாவகற்றும் வெண்மணற்றண் கானற்—சுலாவகற்றிக்
கங்குனீ வாரல் பகல்வரின்மாக் கவ்வையா
மங்குனீர் வெண்டிரையின் மாட்டு.

எ-து இரவும் பகலும் வாரலென்று தலைமகனைத் தோழி வரைவு கடாயது.

இ-ள். புலானாற்றத்தை நீக்கும் பூக்களையுடைய புன்னைப் பொங்கு நீர்ச்சேர்ப்பனே! நிலாவினதொளியை வென்று நீக்கும் வெண்மணற்றண் கானலின்கட் கங்குலின்கண்ணே வருதலின் இவளாவி வருந்தலைப் பெருக்கி நீ வாராதொழிக; பகல்வருவையாயிற் பிறரால் அலர்தூற்றப்படுங் கவ்வை பெருகும், மங்குல் போன்ற நீரையும் வெண்டிரையையுமுடைய கடன் மருங்கின்; எ-று. (௪)

௩௬. முருகுவாய் முட்டாழை நீண்முகைபார்ப் பென்றே
குருகுவாய்ப் பெய்திரை கொள்ளா—துருகிமிக
வின்னு வெயில்சிற கான்மறைக்குஞ் சேர்ப்பநீ
மன்னு வரவு மற.

எ-து தோழி வரைவுகடாயது.

இ-ள். விரைவாய்த்த முட்டாழையினது நீண்முகையைக் குஞ்சு என்றுகருதிக் குருகுகள் அம்முகைவாயிலே இரையைப்பெய்து தாம் அவ்விரையைக்கொள்ளாதுருகி மிகவின்னாத வெயிலைத் தஞ்சிறகான் மறைக்குஞ் சேர்ப்பையுடையானே! நீ இங்குவரும் நிலையாத வரவினை மறந்து நிலைக்கும்வரவினைச் செய்வாயாக; எ-று. (௫)

௩௭. ஓதநீர் வேலி யுரைகடியாப் பாக்கத்தார்க்
காதனீர் வாராமை கண்ணோக்கி—யோதநீ
ரன்றறியு மாதலால் வாரா தலரொழிய
மன்றறியக் கொள்ளீர் வரைந்து.

இதுவுமது.

இ-ள். ஓதநீர் வேலியையுடைய பாக்கத்தார் உரையாற் கடியாது உம்மேலுள்ள காதலாற்றுன்புற்று இவள் கண்கள் நீர்வாராதவகை இவண் மாட்டு வேறுபாட்டைப்பார்த்து முன்பு நீரவட்குச்சொல்லிய வஞ்சினத்தை

ஓதநீரறியுமாதலான், இவ்வாறு வாராது அலரொழியும்வகை மன்றத்தாரறிய வரைந்து கொள்ளீர்; எ-று. (சு)

௩அ. மாக்கடல்சேர் வெண்மணற் றண்கானற் பாய்திரைசேர்
மாக்கடல்சேர் தண்பரப்பன் மார்பணங்கா—மாக்கடலே
யென்போலத் துஞ்சா யிதுசெய்தார் யாருரையா
யென்போலுந் துன்ப நினக்கு.

எ-து காமமிக்க கழிபடர்கிளவி.

இ-ள். பெருங்கடலினுனே வந்து சேர்ந்த வெண்மணற் றண்கானவின்கண் வந்து பரவாநின்ற திரைசேர்ந்த மாக்கடலைச்சேர்ந்த தண்பரப்பினையுடையான் மார்பினுன் வருத்தப்படாத பெருங்கடலே! என்னைப் போலக் கண்டுஞ்சு கின்றிலை; இக்கண்டுஞ்சாமையைச் செய்கின்ற என் போலுந் துன்பத்தை நினக்குச் செய்தார் யாவர் சொல்லாய்? எ-று. (எ)

௩௯. தந்தார்க்கே யாமாற் றடமென்றோ ளின்னநாள்
வந்தார்க்கே யாமென்பார் வாய்காண்பாம்—வந்தார்க்கே
காவா விளமணற் றண்கழிக் கானல்வாய்ப்
பூவா விளஞாழற் போது.

எ-து நொதுமலர் வரைந்து புகுந்த பருவத்துத் தோழி செவிலிக்கறத்தொடுநின்றது.

இ-ள். வந்து சேர்ந்தார்க்கு ஏமமாம் இளமணற் றண்கழிக் கானலிடத்து வந்து, முன்பு பூவாதேபூத்த இளஞாழற்பூவினை இவட்குத் தந்தவர்க்கேயாமால், இவள் தடமென்றோள்; இந்நாள் வதுவைவரையப் புகுந்தார்க்காமென்பாருடைய மெய்யுரையைக் காண்பாம்; எ-று. (அ)

௪0 தன்றுணையோ டாடு மலவனையுந் தானோக்கா
வின்றுணையோ டாட வியையுமோ—வின்றுணையோ
டாடினுய் நீயாயி னங்நோய்க்கென் னெஞ்சென்று
போயினுன் சென்றான் புரிந்து.

எ-து வலிதாகச் சொல்லித் துறைநயப்பித்தது.

இ-ள். தன்பெடைஞெண்டொடு இன்புற்று விளையாடும் அலவனையும் என்னையும் பார்த்து, 'என்னுடைய இனியதுணையோடு இப்பெற்றிபோல ஆட எனக்குக்கூடுமோ? நின்னுடைய இன்றுணையாகிய பெடைஞெண்டொ

னே விளையாடினுய் நீயாயிற் பிரிவுத்துன்பம் அறியாயாதலான், அப்பெற்றிப் பட்ட நினக்கு என்பிரிவுத்துன்பத்தைச் சொல்லி நொந்து என்னை ' என்று சொல்லிப்போயினவன் பின்னைவந்து மேவித் தோன்றுகின்றிலன், என் செய்தானே! எ-று. (கூ)

சக உருகுமா லுள்ள மொருநாளு மன்றுற்
பெருகுமா னம்மலர் பேணப்—பெருகா
வொருங்குவான் மின்னே டுருமுடைத்தாய்ப் பெய்வா
னெருங்குவான் போல நெகிழ்ந்து.

எ-து தலைமகன் சிறைப்புறத்தானுகத் தோழியாற் சொல்லெடுக்கப்பட்டுத் தலைமகள் தனதாற்றமையாற் சொல்லியது.

இ-ள். ஒருங்கு பெருகி வாலிய மின்னேடு உருமுடைத்தாகிப் பெய்ய வேண்டி நெருங்குகின்ற மழைபோலப் பெருகாநின்றது, எதிலார் விரும்பும் படி நம்மலரானது; ஆதலான் நம்முள்ளம் ஒருநாளுமின்றியே பலநாளும் நெகிழ்ந்துருகாநின்றது; எ-று. (கo)

சஉ *கவளக் களிப்பியன்மால் யானைசிற் றாளி
தவழத்தா னில்லாததுபோற்—பவளக்
கடிகை யிடைமுத்தங் காண்டொறு நில்லா
தொடிகை யிடைமுத்தந் தொக்கு.

எ-து நயப்பு : கையுறையுமாம்.

இ-ள். கவளத்தையுடைய களிப்பியன்ற மால்யானை, அரிமாவின் குருளை தான் நடைகற்கும்பருவத்தும் அஞ்சி யெதிர்நில்லாததுபோல, இவளுடைய அதரமாகிய பவழத்துண்டத்தினிடையரும்பும் முறுவலாகிய முத்தங்களைக் காணுந்தோறுந்தோற்றுநில்லா, இவள் கையிடைத்தொடியின்கண் அழுத்திய முத்தங்கள் திரண்டு; எ-று. (கக)

சங கடற்கோ டிருமருப்புக் கால்பாக னாக
வடஃகோட் டியானை திரையா—வுடற்றிக்
கரைபாய்நீள் சேர்ப்ப கனையிருள் வாரல்
வரைவாய்நீ யாகவே வா.

---

* நச்சினர்க்கினியர் இதனைக் கையுறைகொண்டுவந்து கூறியதாகக் கொண்டு, இதன்கண் "நின்வாயிதழையும் எயிற்றையும் காணுந்தோறும் நில்லா, என் கையிடத்தில் இருக்கின்ற பவளக்கொடியும் முத்தும் என்க" என வுரைப்பர். (தொல். பொ. களவு. கக.)

௧௫௪ தந்தை மகப்பெயர் முந்திய குலப்பெயர்
மனப்பெயர் கோத்திரங் குணப்பெய ராணை
யியற்பெயர் சிறப்புடைப் பெயரிரண் டாகுங்
கயக்கறு முதன்மொழிப் பொருத்தங் கொளலே. (௧௨)

சொல்லியல் முற்றிற்று.

இனவியல்.

௧௫௫ வெள்ளை யகவ றுள்ளுகலி வஞ்சி
யென்னு நாற்பா விவற்றுட னியன்மருட்
டாழிசை துறைவிருத் தங்களென் றிவற்றிற்
சூழ்வகை யினம்பல சொல்லுத லினவியல். (௧)

௧௫௬ ஒன்றே யாகியு மொன்றுபல வாகியும்
பலவொன் றாகியும் பாற்படு மினமே. (௨)

௧௫௭ அவற்றுள் ;—
ஒன்றே யாகிய வினமெனப் பட்டன
உலாவாற் றுப்படை வகைமடன் முதலாயின. (௩)

௧௫௮ ஒன்றுபல வாகிய வினமந் தாதி
கோவை காப்பிய மாதியாக் கூறுவன. (௪)

௧௫௯ பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலித்தொகை குறுந்தொகை * நெடுந்தொகை முதலாயின. ()

௧௬௦ பலவொன் றாகிய வினமெனப் பட்டன
கலம்பக மும்மணிக் கோவைமுத லாயின. (௬)

௧.—பாப்பொருத்தம்.

(வெண்பா.)

௧௬௧ அந்தணர் சாதி யாகிய வெள்ளைக்குச்
சந்திரன் றன்னொடு தகைமிகு வியாழன்
கடவுளர் கார்த்திகை முதலேழ் நாளா
மீனங் கடகந் தேளே யோரை
சந்தனம் விரைபூ வந்தண் மல்லிகை

* நெடுந்தொகை என்பது அகநானூறு.

வெண்மதி நிறனே வண்ண நிலனே
முல்லை யென்னச் சொல்லினர் புலவர். (௧)

(ஆசிரியப்பா.)

௧௬௨ காவலர் சாதி யாகிய வகவற்
காகிய கடவுளர் செங்கதிர் செவ்வாய்
நாளே மகமுத ஞளே ழாகுஞ்
சிங்கந் தனுவே மேட மோரை
செஞ்சந் தனம்விரை கழுநீர் பூவே
செந்நிற் நிறனே நன்னிலங் குறிஞ்சி. (௨)

(கலிப்பா.)

௧௬௩ நெடுநிலைக் கலியே வணிகர் சாதி
கடவுளர் சனிபுதன் கருதிய நாளே
யநுடமுத லாறே யோரை துலாங்குட
மிதுனஞ் சந்தனம் விரைபூச் சண்பகம்
பொன்னிற நிறனே நன்னில நெய்தல். (௩)

(வஞ்சிப்பா.)

௧௬௪ எஞ்சிய வேளாண் சாதி வஞ்சி
நாளே யவிட்ட முதலேழ் நாளா
மிடபங் கன்னி மகர மோரை
சார்ந்த விரையே தண்ணறுங் கலவை
யேந்திய போதே யின்னறு நீல
நீல நிறனே நெடுநில மருதம். (௪)

௧௬௫ நால்வகைப் பாவிற்கு மேலோர் வகுத்த
வினங்களும் பெறுமென நினைந்தனர் கொளலே. (௫)

௧௬௬ நால்வகைப் பாவு நால்வகைக் குலத்தின்
பால்வகைப் படுமே முதலன விரண்டின்
புணர்ச்சி மருட்பாப் பொருந்தா வருணம். (௬)

௧௬௭ நாளு மோரையு நலத்தகு நிலனும்
விரையுஞ் சாதியு நிறனுங் குணனு
முறைபெறும் * பாநரர்க் குடைய வென்ப;
கல்லாடனர். (௭)

* ‘பாநான்குடைய’ பி-ம்

கசுஅ அந்தச் சாதிக் கந்தப் பாவே
தந்தனர் புலவர் தவிர்ந்தனர் வரையார். (அ)

கசுகூ வெள்ளையு மகவலும் விருத்தமுங் கலியும்
வஞ்சியு மெஞ்சா மங்கலம் பொருந்தும். (கூ)

கஎ0 வெள்ளை யகவல் விருத்தங் கலியே
வஞ்சி யென்றிவை மங்கலப் பாவே;

அவிநயனார். (க0)

உ.—பாவினம்.

கஎக மேதகு சாதகம் பிள்ளைப் பாட்டே
கோதில் வேந்தன் குடைமங் கலமே
யோதிய வொருபோ கமைந்த கலம்பக
முலாவே சின்னப் பூவே பரணி
பழுதின் மடன்மறம் பல்சந்த மாலை
யிணைமணி மாலை யிரட்டைமணி மாலை
மும்மணி மாலை நான்மணி மாலை
கலம்பக மாலை மும்மணிக் கோவை
யருங்கலி யொலியே யானைத் தொழிலே
வருக்க மாலை நாம மாலை
திருக்கிள ரின்னிசை சிலைபரி கரியே
யெழில்புனை வாள்குடை தொழில்புனை வேல்கோ
லழிவி னூடே ரைம்படை விருத்த
நாழிகைக் கவியே நவமணி மாலை
கைக்கிளை யரிபிறப் பட்டமங் கலமே
யில்லற வெள்ளை யெழில்புனை தாரகை
சொல்லிய தாண்டகந் துகளறு பதிகஞ்
சீர்மெய்க் கீர்த்தி செருக்கள வழியே
யாற்றுப் படைவகை கண்படை துயிலெடை
விளக்கு நிலையே வெஞ்சினக் காஞ்சிலை
யெண்ணிய யாண்டே கண்ணிய பறைநிலை
யரும்பொரு ணிறுத்த வந்தா தித்தொகை
புறநிலை வாயுறை செவியறி வுறாஉவே

பாத மாதி பணிமுலை நயனங்
குற்றமி லுழத்தி குறத்திப் பாட்டே
யொருபா வொருபஃ திருபா விருபஃது
கோவை கணக்கே தொடர்நிலைப் பாட்டே
கடைநிலை கையறு நிலையெனக் கருதி
யிடனறி புலவ ரியம்பின ரினமே. (௧)

௧.—சாதகம்.

௧எ௨ தோற்றிய சாதகஞ் சாற்றுங் காலைப்
பற்றிய கலியுகத் துற்ற யாண்டிற்
றிருந்திய சகாத்தமு மாண்டும் பொருந்திய
ஞாயிறும் பக்கமு மேய வாரமு
மிராசியு மன்னுற மொழிதற் குரிய. (௨)

௨.—பிள்ளைப்பாட்டு.

௧எ௩ பிள்ளைப் பாட்டே தெள்ளிதிற் கிளப்பின்
மூன்று முதலா மூவே ழளவு
மான்ற திங்களி னறைகுவர் நிலையே. (௩)

௧எ௪ ஒன்றுமுத லையாண் டோதினும் வரையார்;

போய்கையார். (௪)

௧எ௫ தோற்ற முதல்யாண் டீரெட் டளவு
மாற்றல் சான்ற வாண்பாற் குரிய. (௫)

௧எ௬ காப்புமுத லாகிய யாப்புவகை யெல்லாம்
பூப்பு நிகழ்வளவும் பெண்பாற் குரிய;

இந்திரகாளியார். (௬)

௧எஎ தொன்னிலை வேந்தர் சுடர்முடி சூடிய
பின்னர்ப் பெறூஅர் பிள்ளைப் பாட்டே;

பரணர். (எ)

௧எ௮ காப்பொடு செங்கீரை தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகவென் றன்முத
லம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்

நம்பிய மற்றவை * சுற்றத் தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர். (௮)

௧௭௯ தந்தை தாயே பாட்டன் பாட்டி
முந்துற வுரைத்தன் முறைமை யென்ப. (௯)

௧௮௦ திருந்திய பெண்மக வாயின் விரும்பிய
பின்னர் மூன்று மன்னுநீக் கென்றனர். (௧௦)

௧௮௧ சிற்றில் சிறுதேர் சிறுபறை யொழித்து
மற்றவை மகளிர்க்கு வைப்ப தாகும். (௧௧)

௧௮௨ சிற்றி லிழைத்தல் சிறுசோ றுக்கல்
பொற்பமர் குழமகன் புனைமணி யூசல்
யாண்டி றாறதி லெழிற்காம னோன்பொடு
வேண்டுத ருனுள விளம்பினர் புலவர். (௧௨)

௧௮௩ திருமா லரனே திசைமுகன் கரிமுகன்
பொருவேன் முருகன் பரிதி வடுக
னெழுவகை மங்கைய ரிந்திரர் சாத்த
னிதியவ னீலி † பதினொரு மூவர்
திருமக ளுமக டிகழ்மதி யென்ப
மருவிய காப்பினுள் வருங்கட வுளரே. (௧௩)

௧௮௪ காப்பின்முத லெடுக்குங் கடவு டானே
பூக்கமழ் துழாய்முடி புனைந்தோ னாகும். (௧௪)

௧௮௫ அவன்றான்—
காவற் கிழவ னாக லானும்

---

* "சுற்றத் தளவுங் கவிக்கெல்லை யாய்க்கொண்டு சொல்லுவரே." என்றார் நவநீதப்பாட்டிய லுடையாரும்.

† பதினொருமூவர்—பன்னிருவர் ஆதித்தர், பதினொருவர் உருத்திரர், எண்மர் வசுக்கள், இருவர் மருத்துவர் ஆகிய முப்பத்து மூவர். "நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு" என்றார் திருமுருகாற்றுப்படையினும். "பதினொரு மூவரும் பங்கயத் தோனும் பகவதியு, நிதிமுத லோனும் பரிதி யுஞ் சாத்தனும்" என்பதனுன் நவநீதப்பாட்டியலாரும் பன்னிருவர்ஆதித் தரின் வேறாய்ப் பரிதியெனக் கூறுதல்காண்க.

பூவின் கிழத்தியைப் புணர்த லானு
முடியுங் கடகமு மொப்பூந் தாருங்
குழையு நூலுங் குருமணிப் பூணு
மணியுஞ் செம்ம லாக லானு
முன்னுற மொழிதற் குரிய னென்ப. (கரு)

கஅசு. விரிசடைக் கடவுளும் வேய்த்தோ ளெழுவரு
மருளொடு காக்கவென் றறையுங் காலைக்
கொலையுங் கொடுமையுங் கூறு ராகிப்
பெயருஞ் சின்னமும் பிறவுந் தோன்றக்
கங்கை திங்கள் கடுக்கை மாலை
மங்கல மழுவொடு மலைமக ளென்றிவை
விளங்கக் கூறல் *விளம்பிய மரபே. (கசு)

கஅஎ ஒன்பது பதினொன் றென்பது காப்பே;

பரணர். (கஎ)

கஅஅ. அகவல் விருத்தமுங் கட்டளை யொலியுங்
கலியின் விருத்தமுங் கவின்பெறு பாவே. (கஅ)

கஅகூ. பிள்ளைப் பாட்டே நெடுவெண் பாட்டெனத்
தெள்ளிதிற் செப்பும் புலவரு முளரே. (ககூ)

முதற்க ணெடுக்கு மகவல் விருத்த
மெழுத்தின் பகுதி யெண்ணினர் கொளலே. (உ0)

ககூ0. நீணெறி யுவகை யாண்மக விற்கே
மைம்மூ வாண்டே †யவர்முதற் சாற்றல். (உக)

ககூக. பொங்குகதி ரிளம்பிறை புலியின் சிறுபறழ்
குஞ்சரக் குழவி கோளரிக் குருளை
யடலிள விடையே யாறிரண் டாண்டி
னிடைநிக ழுவமை யென்மனார் புலவர். (உஉ)

---

* 'வழங்கிய' பி-ம்.

† 'யாறுமுதற்' பி-ம்.

கககஉ. பெண்மக விற்குப் பேசு மிடத்து
மானின் கன்று மயிலின் பிள்ளை
தேனி னின்பத் தெள்ளாத் தேறல்
கரும்பி னிளமுளை கல்லாக் கிள்ளை
யிளந்தளிர் வல்லி யென்றிவை யெல்லாம்
பொய்வளை மகளிர்க் கெய்திய வுவமை. (உரு)

கககரு. இளங்கதிர்த் திங்க ளெல்லார்க்கு முரித்தே: (உச)

பரணர்.

கககச. அவைதாம்—
பிள்ளையைப் பாடலிற் பிள்ளைப் பாட்டாய்ப்
பிறப்பே யோகை காப்பே வளர்ச்சி
யச்ச முறுத்த லுடன்செங் கீரை
தால்சப் பாணி முத்தம்வா ரானை
யம்புலி சிற்றில் குழமக னூச
லென்றனர் பிறவுந் தொன்னெறி மரபிற்
றத்தந் தொழிற்குத் தகுவன புகற
லெத்திறத் தோர்க்கு முரிய வென்ப
கொச்சகக் கலியொடு நெடுவெண் பாட்டே. (உரு)

கககரு நெடுவெண் பாட்டின் முந்நான் கிறவாது
தொழிலொடு குறித்துத் தோன்றுஞ் செய்யு
ளொன்றுமூன் றைந்தே ழொன்பான் பதினொன்
றென்றிவை யிவற்றி *னிகந்தன விழுக்கே. (உசு)

கககசு பிறப்பே யோகை பேணுறு வளர்ச்சி
சிறைப்பட வச்ச முறுத்தலொடு நான்கு
மாரா யுங்கா லைந்துமுன் றிடையா
யோரே ழொருபொருட் குயர்ச்சியிழி பொன்றே:

இந்திரகாளியார். (உஎ)

ரு.—வேந்தன்துடைமங்கலம்.

கககஎ முன்னீ ரடியிலுங் குடைத்தொழி லியம்பியும்
பின்னீ ரடியிற் றனிநிலை யிரட்டியுங்

---

* 'னிழிந்தன' பி-ம்.

கொற்றவற் *புகழ்ந்து குடையென முடிக்கு
நற்றிற நேரசைக் குடைவெண் பாட்டே. (௨அ)

௧௯அ அதுவே ;—
குடைச்சொற் சிந்தடி யீற்றில்வைத் தந்தக்
குடைச்சொல் லாதிக் குளகத் தடக்கி
யீற்றய லடியினு மீற்றினு மிறைவனைப்
போற்றிப் புகழ்ந்து புகறல் வேண்டும் :

இந்திரகாளியார். (௨௯)

௧௯௯ ஒட்டிய குடைப்பொரு ளுரைக்கு நேரசை
கட்டளை யாகுதல் கடனென மொழிப. (௩0)

௨00 கட்டளை யென்பது கருதுங் காலை
யீற்றடி யொழிய வேனைமூன் றடியும்
பாற்படு மெழுத்தின் பகுதியொப் பதுவே. (௩௧)

௨0௧ இதற்கே யாமெழுத் தெண்ணுங் காலைக்
குற்றிய லுகரமுங் குற்றிய லிகரமு
மொற்று மொழித்துயி ருயிர்மெய்யுங் கொளலே. (௩௨)

௨0௨ மோனையு மெதுகையுந் தொடையென மொழிப. (௩௩)

௨0௩ சாற்றியமா ரொத்த றனிமை மிகுதிசமம்
போற்றுமுடன் பாடு புலனுண்மை-யேற்றுந்
தலைப்பாடு பாதி தருகொடை பத்து
நிலைப்பாடு நேரசையா நேர். (௩௪)

௪.—ஒருபோது.

௨0௪ தன்மை முன்னிலை படர்க்கையுட் டன்மை
யொழித்திரு வகையு ளொன்றுறற் கடவுட்
பழிச்சு மொருபோ திருமூன் றுறுப்பு
மமைந்தொருங் கியலு நயந்திகழ் கலியுள்
வண்ணகம் போதினு மெண்ணே போதினு
மோதிய வுறுப்பாற் பேர்புகன் றனரே. (௩௫)

* 'புணர்ந்து' பி-ம்.

உ

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனாரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமான நார்ப்பட்டு, வெண்பட்டு தினுசுகளும்; நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். தூலை வியாபாரிகளுக்கு ஜவுளி தினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,

டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சினேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்,

விற்கப்பெறும் புத்தகங்கள்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது மூலமும் உரையும் ...	0	3	0
2.	கணநூலும், பழையநூல்களினின்று தொகுத்த ௫௮-வளையாபதிச்செய்யுட்களும் அடங்கினது ...	0	2	0
3.	புலவராற்றுப்படை [திருக்குருகூர்ச் சிறியஇரத்தினகவிராயர் பாடியது]	0	3	0
4.	இனியதுநாற்பது மூலமும் உரையும்.	0	1	6
5.	நேமிநாத மூலமும் உரையும்.	0	10	0
6.	திருநூற்றந்தாதி மூலமும் உரையும்.	0	4	0
7.	மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் புலவராற்றுப்படை மூலமும் உரையும் (வா. குலாங்காதிறு நாவலர் இயற்றியன)	0	4	0

☞ இவற்றிற்குத் தபால் சார்ஜ பிரத்தியேகம்.

இங்ஙனம்,

எம். வி. சுப்பிரமணிய ஐயர்,

மதுரைத் தமிழ்ச் சங்க மானேஜர்.